August 1954
Vol. 1
No. 9

504

திரட்டு

சிறந்த மாதாந்திர கட்டுரை பொக்கிஷம்



விஜய ஹு ஆடி-ஆவணி

REGISTRAR OF BOOKS
5-AUG 1954

இந்த இதழில்

- ★ வாழ்க்கைக்கு அரங்கேற்றம்
- ★ புகை-மனிதனுக்குப் பெரும் பகை
- ★ கையெழுத்தே தலையெழுத்து
- ★ பீதியளிக்கும் பறவை
- ★ வியாதிகளை விரட்டும் ஸ்தாபனங்கள்
- ★ வெள்ளையர் போயினும் வேற்றுமை போகவில்லை

இன்னும் பல அரசியல், சமூக, விஞ்ஞான சுகாதாரக் கட்டுரைகள், கதைகள், பிரபஞ்ச விநோதங்கள்.

128 பக்கங்கள்

8 அணா

SAMSONS DRESSES

ஸாம்ஸன்ஸ் ரெடிமேட் ஆடைகள்

★

சிறந்த துணி வகைகளில், நாகரீகமான பாணியில் நீடித்த உழைப்புக்காக தயாரிக்கப்படுகின்றன.

★

ஆடவர், பெண்டிர், சிறுவர் யாவருக்கும் தேவையான ஆடை வகைகள் யாவும் கிடைக்கின்றன.

★

பெங்களூர் டிரஸ் மானுபாக்சரிங் கம்பெனி,
12, லால் பாக் ரோட்,
பெங்களூர் - 2.

திரட்டு பொருளடக்கம் ஆகஸ்டு 1954

ஆசிய நாடுகளின் தலைவர்கள் ... 3
டில்லி தர்பார்! ... 9
வெள்ளையர் போயினும் வேற்றுமை போகவில்லை 10
பெற்றோர்களின் அனுக்கிரகம் 14
மனமாற்றம்! ... 16
நிருபரைக் கைவிடாத பத்திராதிபர் ... 17
நீதிபதிக்கு நீதி தெரியாது! ... 20
மகுடதாரியான மேதை ... 21
பிறவி - குணம் ... 24
மந்திர கோஷமும் மோட்டார் வண்டி சத்தமும் ... 26
புகை-மனிதனுக்குப் பெரும் பகை ... 28
நாற்பதாயிரம் பேர்கள் நாகத்திற்குப் பலி ... 31
தேயு ஸ்தலம் ... 33
கையெழுத்தே தலையெழுத்து ... 35
மிருகத்திலும் கேடுகெட்ட மனிதர் யார் ... 39
தன்னுயிருக்குச் சமானம் ... 44
கொடிய குறும்பு ... 47
வியாதிகளை விரட்டும் ஸ்தாபனங்கள் ... 49
தன்னடத்தைக் குறிப்புகள் ... 52
குறையற்ற குரல் அளவற்ற அருள் ... 55
சுண்டெலி சுண்டெலியாயிற்று ... 58
வைத்தியருக்கு வைத்தியம் ... 59
சிறுவர்களுக்குச் சினிமா இல்லை ... 60
மாடுகளுக்கும் மண்டைக் கிறுக்கு ... 63

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
5 - AUG. 1954
MADRAS

பிறநாட்டுப் பழமொழிகள் ... 64

பீதியளிக்கும் பறவை ... 65

தயையற்றவனுக்குத் தண்டனை ... 69

வனமகோற்சவம் நாட்டின் நன்மைக்கே ... 70

வல்லவனுக்கு வல்லவன் ... 71

கையெழுத்துக்குப் பத்து பவுன் ! ... 75

ஞான சம்பத்து ... 77

சிலருக்குக் கொண்டாட்டம் பலருக்குத் திண்டாட்டம் 84

அரியும் சிவனும் ஒன்றே ... 89

நதிக்குப் பலியாகும் நகரம் ... 92

இந்திய நடனம் ... 97

உரம் மனிதனுக்கு அன்னை ... 100

குள்ளனுக்கேற்ற குள்ளன் ... 102

ராஜ சேவகம் ... 103

விரட்டப்படும் இந்தியர்களுக்கு வேறிடங் கொடுங்கள் ... 104

வாழ்க்கைக்கு அரங்கேற்றம் ... 109

நன்மைக்கு அறிகுறி ... 111

உழுவதற்கு யானை ... 112

சிறுவர் கதைகள்! ... 113

சரஸ்வதியின் சத்துரு ... 116

காணக் கண் வேண்டாமே ! ... 117

சினிமா கானத்தை வெறுக்கும் பிச்சைக்காரன் ... 118

சப்த ஜாலங்கள் ... 119

அழகிய பூவின் ஆரோக்கியம் தரும் கிழங்கு ... 120

மனிதன் தவிக்கும் தவிப்பு ... 121

ஆருடத்திற்கு மேல் ஆண்டவன் ... 123

மிருக வைத்தியர் வேண்டாம் ... 126

"THIRATTU" Tamil Monthly Digest. Vol. 1. No. 9

திரட்டு

சிறந்த மாதாந்திர கட்டுரை பொக்கிஷம்

ஆகஸ்டு 1954

[உலக நாடக மேடையில் தோன்றும் புது நடிகர்களைப் பற்றி.]

ஆசிய நாடுகளின் தலைவர்கள்

●

1948-ஆம் ஆண்டில் அதாவது, இந்தியாவும் பாகிஸ்தானும் சுதந்திர ராஜ்யங்களாக அமைந்தவுடன் லக்ஷ்மணபுரி சர்வகலாசாலையில் நடந்த ஒரு விழாவிற்குச் சென்றிருந்தேன். இந்தியாவின் பிரதமரான பண்டிதர் நேருவுக்கும் மற்ற அநேக காங்கிரஸ் தலைவர்களுக்கும் அந்த சர்வகலாசாலை அதிகாரிகள் கௌரவப் பட்டங்கள் வழங்குவதற்காகக் கொண்டாடப்பட்ட விழாவாகும் அது.

சமீபத்தில் சுதந்திரம் பெற்ற ஒரு ராஜ்யத்தின் தலைவர்களை தராசில் வைத்து நிறுத்துப் பார்ப்பதாகத்தான் நான் அங்கு சென்றிருந்தேன். ஆனால் இது எளிதான காரியமாக இருக்கவில்லை. அங்கு நடந்துகொண்டிருந்த கலவரத்தில் அமைதியான சிந்தனைக்கு இடமேது? வெளியில் திரள் திரளாகக் கூடியிருந்த மாணவர்கள் ஆரவாரஞ் செய்துகொண்டிருந்தனர். பிரமுகர்களும், கலாசாலை அதிகாரிகளும் மட்டுந்தான் விழா

நடந்து கொண்டிருந்த ஹாலுக்குச் செல்ல அனுமதி யிருந்த தால் அநேக மாணவர்கள் கதவுகளைத் திறப்பதற்கு முயற் சித்துக் கொண்டிருந்தனர். பிரதமர் நேருவின் விரோதி யாரோ ஒரு குண்டை கூட்டத்தின் மத்தியில் எறிந்து விட்டதாகவும் ஒரு கூச்சல் கிளம்பிற்று.

இவ்வளவு குழப்பங்களுக்குமத்தியில் இந்தியாவின் தலைவர்கள் மிக அமைதியாக ஒருவரோடொருவர் சம்பாஷணை செய்து, குஷியாகச் சிரித்துகொண்டுதானிருந்தார்கள். ஜனக் கூட்டங்களில் கலந்து கொள்வதில் இந்த நாட்டுத் தலைவர்களுக்கு நல்ல பயிற்சி யுண்டு. என்னைப் போல் ஒரு ஆங்கிலேயருக்குத்தான் இதெல் லாம் சற்று விந்தையாக இருந்தது.

விழா ஆரம்பித்தது ; இது வரை நிலவியிருந்த ஆரவாரங் களும், குழப்பங்களும் பன் மடங்கு அதிகரித்து விட்டதாய்த்தான் எனக்குத் தோன்றியது. என்ன பேச வேண்டும், என்ன செய்ய வேண்டும் என்று எவருக்கும் ஒன்றும் தெரியவில்லை யென்று தான் எனக்குப் பட்டது. முதல் முதலாகப் பேசுபவர் ஜனங்களைச் சற்று அமைதியாக இருக்கும்படிக் கேட்டுக்கொள்ளுவாரென்று எதிர்ப்பார்த்தேன். ஆனால் முதல் முதலில் நடந்தது ஒரு தீவிரமான அரசியல் பிரசங்கம். இது கலாசாலையில் நடக்கும் பட்டமளிப்பு விழாவா அல்லது ஒரு மைதானத்தில் நடைபெறும் ஒரு அரசியல் கூட்டமா என்று எனக்குச் சந்தேகம் தோன்றியது. இந்தியப் பிரதமர் முடிவாகப் பத்து நிமிஷத்தில் ஒரு நன்றியுரை நிகழ்த்துவா ரென்று நினைத்தேன். அவர் இரண்டு மணி நேரம் பிரசங்கம் செய்தார். அன்றிரவு நான் தங்கியிருந்த ஹோட்ட லுக்குச் செல்லும்போது போதையில் ஆழ்ந்தவன் போல் சென்றேன்.

இந்தச் சந்தர்ப்பத்தை நான் இங்கு கூறுவது ஆசியத் தலைவர் களின் நிலைமையை நன்கு புலப்படுத்துவதற்காகத்தான். உள் நாட்டு விஷயங்களில் ஆசியத் தலைவர்கள் அபார நிபுணர்கள். அவரவர் ராஜ்பத்து மக்களிடம் நடந்து கொள்வதில் மிகத் தைரியமும் சாதுர்யமும் படைத்தவர்கள். ஆனால் சர்வதேச விஷயங்களைப்பற்றி அவர்களுக்கு அனுபவம் குறைவு தான். பயிற்சி நன்கு பெறாத நடிகர் நாடக மேடையில் நடிப்பது போல

ஆசிய நாட்டுத் தலைவர்கள் சர்வதேச விஷயங்களில் நடந்துகொள்கின்றனர். உலக விவகாரங்களைச் சமாளிப்பதற்குப் பதில் ஆசிய நாட்டுத் தலைவர்களிடமிருந்து பிற தேசங்கள் எவ்வளவு உதவியை எதிர் பார்க்கலா மென்பது மேல் நாட்டுத் தலைவர்கள் நன்கு தெரிந்துகொள்ள வேண்டியதவசியமாகும்.

சமீபத்தில் இலங்கையில் நடந்த மகாநாட்டில் ஆசிய நாட்டுப் பிரதமர்கள் ஆசியாவில் 550 கோடி ஜனங்களை வாட்டுகிற பிரச்னைகளைப் பற்றி விவாதித்தார்கள்.

இவற்றை யோசித்துக் கொண்டிருக்கும்போது ஆசிய நாடுகளைப் பாதிக்கும் பிரச்னைகள் உலக முழுவதையுமே பாதிக்கும் பிரச்னைகள் தான் என்று அவரவர்களுக்குத் தெளிவானதால் உலகப் பிரச்னைகளைப்பற்றியும் அவர்கள் சில அபிப்பிராயங்களை வெளியிட நேரிட்டது. அவரவர் நாடுகளிலுள்ள பிரச்னைகளை சமாளிக்க முடியாத ஆசியத் தலைவர்கள் உலகப் பிரச்னைகளில் எதற்குத் தலையிடுகிறார்களென்ற ஆத்திரமான கேள்வி ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் முழங்கிற்று. ஆனால் இந்தக் கேள்வி அர்த்தமற்றதென்பது எனது அபிப்பிராயம்.

ஆசிய நாடுகள் நேற்றுத்தான் சுதந்திரமடைந்துள்ளதென்பதை மேல் நாட்டுத் தலைவர்களும் மக்களும் மறக்கக்கூடாது. நேற்று வரையிலும் ஆசிய நாடுகளிலெல்லாம் ஒரு பொதுவான பிரச்னை இருந்தது. அது ஐரோப்பியரை எதிர்க்க வேண்டு மென்பதாகும். ஐரோப்பியரை எதிர்க்க வேண்டிய அவசியம் இப்போதில்லை. ஆசிய நாட்டில் இப்போதுள்ள பிரச்னைகளெல்லாம் உள் நாட்டு பிரச்னைகள்தான். ஆனால் உள் நாட்டுப் பிரச்னைகளைச் சமாளிப்பதற்கு ஆசிய நாட்டுத் தலைவர்களுக்கு உதவி யளிக்கும் தகவல்கள், சரித்திரங்கள் புள்ளி விவரங்கள் ஐரோப்பாவில் தானிருக்கின்றன. ஒரு ஆசிய நாட்டின் பழைய சரித்திரத்தை அறிய வேண்டுமானால் அதற்குக்கூட ஹாலந்திற்கோ; அல்லது இங்கிலாந்திற்குத் தான் போகவேண்டும். டில்லியிலும் இலங்கையிலும், ரங்கூனிலும், ஜாக்கர்தாவிலும் ஒரு தகவலும் கிடையாது. அதனால் ஆசிய நாட்டுத் தலைவர்களின் மனத்தில் அவர்களுடைய நாடுகளைப்பற்றிச் சரியான ஒரு தோற்றம் இல்லை.

இரண்டாம் மகாயுத்தத்தின் முடிவு வரையிலும் ஆசிய நாட்டுத் தலைவர்கள் என்ன செய்து.கொண்டிருந்தார்களென்பதும் நாம் யோசிக்க வேண்டிய விஷயம். இவர்களுடைய நாட்டில் ஆட்சி பெற்றிருந்த பிரிட்டிஷாரையும், டச்சுக்காரரையும் எதிர்ப்பது மட்டுந்தான் இவர்கள் தொழிலாயிருந்தது. இந்த எதிர்ப்பினால் இவர்களுக்கு நேரிட்ட துன்பங்களுக்கு அளவேயில்லை. உதாரணமாகப் பண்டித நேருஜி ஒன்பது தடவை சிறைவாசஞ் செய்திருக்கிறார். ஐரோப்பியர் சொல்வதை எதிர்ப்பதிலும் வெள்ளையர்கள் ஆட்சியில் நிகழும் பொதுத் தேர்தல்களில் அவர்களைத் தோற்கடிப்பதிலும் தான் இவர் கண்ணுங் கருத்துமாயிருந்திருக்கிறார்கள். அதாவது, வெள்ளையரை எதிர்க்க வேண்டுமென்பது தெரியுமேயல்லாது எதை ஆதரிக்க வேண்டுமென்பது தெரியாது.

திடீரென இரண்டாம் மகாயுத்தத்தின் முடிவில் ஆசிய நாடுகளின் சுதந்திரம் உதயமாயிற்று. ஆசிய நாட்டுத் தலைவர்களுக்கெல்லாம் இது மகிழ்ச்சி யல்ல; அதிர்ச்சியைத்தான் அளித்தது. இந்தியாவின் கடைசி கவர்னர்ஜெனரலான ராஜாஜி அவர்கள் மவுண்ட்பேட்டன் தம்பதிகளுக்களித்த விருந்தில் நானும் கலந்து கொண்டேன். அப்போது அங்கு நடந்த சம்பாஷணையில், இப்போது டில்லி சர்வகலாசாலையாயும் அப்போது ராஜப் பிரதிநிதிகளின் விருந்தினர் மாளிகையாயிருந்த கட்டிடத்தின் 13-ம் நம்பர் அறையில் தான் மவுண்ட்பேட்டனுக்கும் அவர் மனைவிக்கும் மண ஒப்பந்தம் ஏற்பட்டதென்று மவுண்பேட்டன் பிரபு கூறினார். இதைக் கேட்ட ராஜாஜி தலையைச் சொறிந்தவாறு 'அப்போது நான் எங்கிருந்தேன் தெரியுமா? டில்லி சிறையில் 65-ம் நம்பர் அறையில்'', என்றார். கிடைத்த சுதந்திரத்தை ஆசிய நாட்டுத் தலைவர்கள் பாழாக்கவில்லை. சுதந்திரத்திற்காகப் போராடிய கட்சிகள் ஒன்றாகச் சேர்ந்து அவரவர்கள் ராஜ்ய சர்க்கார்களை நன்கு நிர்வகிக்கின்றன.

ஆசியத் தலைவர்களில் இந்திய பிரதமர் பண்டித நேருஜிதான் சர்வதேசப் பிரச்னைகளில் முக்கியப் பங்கெடுத்துக்கொள்கிறார். சர்வதேசப் பிரச்னைகளில் இவருக்கு அபார ஞானம். சிறு

வயதிலேயே இங்கிலாந்திற்குச் சென்று கல்வி கற்றவர். உலக மெங்கும் சுற்றுப் பிரயாணஞ் செய்தவர். அவரது ஆயுள் பூராவும் சர்வதேசப் பிரச்னைகளைப்பற்றியே சிந்தனை செய்தவர் ஆசிய நாட்டுத் தலைவர்களில் இவர் இணையற்றவரென்பதில் இரு அபிப்பிராயங்களில்லை.

பர்மாவின் பிரதமரான தாக்கின் நூவுக்கு இப்போது சுமார் 45 வயதிருக்கும். பர்மாவிலேயே கல்வி கற்றவர் வெளி நாடுகளில் இவருக்குப் புகழ் கிடையாது. ராஜ தந்திரத்தில் நேரு நிபுணர். அரசியல் பிரச்னைகளில் தாக்கின்நூவுக்கு அக்கறையே இல்லை. தான் புத்த சந்நியாசியாகப் போகவேண்டுமா அல்லது நாடகங்கள் காவியங்கள் முதலியவற்றைச் சிருஷ்டிக்கும் எழுத்தாளராக வேண்டுமா என்ற சந்தேகம் இன்னும் இவர் மனத்தில் குடி கொண்டுள்ளது.

பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு நேருஜி ஆர்வத்துடன் ஓடி வருகிறார். பிரச்னைகள் தம்மிடம் வரும்போது அவற்றைக் கவனித்தால் போதுமே யென்று அமைதியா யிருக்கிறார் நூ. 1945-இல் ஜப்பானியர்கள் பர்மாவை கைவிட்டுத் திரும்புவதற்கு யோசித்துக் கொண்டிருந்த சமயத்தில் தாக்கின்நூதான் அரிய நூல்களைப் படித்துக்கொண்டு இகலோகச் சிந்தனை யற்றிருந்தா ரென்பதாகத் தாக் கூறுகிறார்.

நேருஜி ஏன் அமெரிக்கர் பக்கமோ ருஷ்யா பக்கமோ தீர் மானமாகச் சேராமலிருக்கிறார்? அமெரிக்காவிற்கும் ருஷ்யாவிற்கு மிடையே உள்ள பூசல் நன்மைக்கும் தீமைக்கும் உள்ள நிரந்தர மான பூசல் என்று அவருக்குத் தோன்றவில்லை. இரு பக்கங்களி லும் குற்றங் குறைகள் ஏராளமா யிருக்கின்றன. இரு பக்கத்தி லும் சேராமலிருப்பதை, இரு கட்சிகளுக்கும் சம தூரத்தில் இருப் பதாக நினைப்பது தவறு, உலக சமாதானத்திற்கும் உலக நன் மைக்கும் எந்தக் கட்சியில் சேருவது உத்தமமோ அந்தக் கட்சியில் சேருவதற்குள்ள சுதந்திரத்தை நேரு விரும்புகிறார். இந்தச் சுதந் திரத்தை அவரும் இவரை ஆதரிக்கும் மக்களும் எந்தச் சந்தர்ப்பத் திலும் பாதுகாத்துக்கொள்வார்கள். இதை அரசியல் காலித்தன மென்று மேல்நாட்டு அரசியல்வாதிகள் கூறுவதில் அர்த்தமில்லை.

ருஷ்யா பக்கமோ அமெரிக்காப் பக்கமோ தீர்மானமாய் ஆசியத் தலைவர்கள் சேராமலிருப்பதன் காரணத்தை மேல் நாட்டு அரசியல்வாதிகள் கவனிக்க வேண்டும். நேற்று வரையிலும் வெள்ளையர்களை எதிர்த்துக் கொண்டிருந்த கறுப்பர்களுக்கு எந்த வெள்ளையர்கள் மீது நம்பிக்கை இருக்கும்? ருஷ்யர்கள் மீதா? அமெரிக்கர்கள் மீதா? இது தான் இன்று ஆசிய நாட்டுத் தலைவர்களைப் பீடித்துள்ள பெருந் தலைவலி.

CYRIL PHILIPS - B. B. C Broadcast, *in London Calling*.

———

தந்தையும் தாயும்

கோவையிலே ஒரு பொதுக்கூட்டத்திலே காலஞ்சென்ற ஸ்ரீ சத்தியமூர்த்தி அவர்கள் பேசிக் கொண்டிருந்தார். பொதுமக்களிடையே கல்வியறிவைப் பரப்பவேண்டு மென்றும், தமிழ் வளர்வதற்கு அதுவே சிறந்த வழி யென்றும் அவர் கூறினார். பேசும்போது பழைய தமிழ், சம்ஸ்கிருத, இலக்கியங்களின் பல அற்புதமான மேற்கோள்களை எடுத்துக்கூறி, சபையோருக்கு மகிழ்ச்சி உண்டாக்கினார்.

ஸ்ரீ சத்தியமூர்த்தி சம்ஸ்கிருதத்திலிருந்து மேற்கோள் எடுத்துக் காட்டுவது, ஒருவருக்குப் பிடிக்கவில்லை. அவர் எழுந்து நின்று "உங்களுக்குச் சமஸ்கிருதத்தின் மேல் பிரியமா? தமிழ் மேல் பிரியமா? சொல்லுங்கள் என்றார்.

பதில் சொல்லுவதற்கு ஸ்ரீ சத்தியமூர்த்தியா யோசிப்பவர்? "நான் ஒரு எதிர்க்கேள்வி போடுகிறேன். உங்களுக்குத் தாயார் மேல் பிரியமா, தகப்பனர் மேல் பிரியமா? சொல்லுங்கள்" என்றார்.

கேள்வி கேட்டவர் இதற்குப் பதில் சொல்லவில்லை. ஸ்ரீ சத்திய மூர்த்தி மேலும்—திரும்பவும் கேட்டார். யார்மேல் பிரியம் என்று!

.........உங்களுக்கு!

...அப்படிக் கேளுங்கள்! எனக்கு இரண்டு பேர் மேலும் பிரியந்தான். சம்ஸ்கிருதம் என் தந்தை; தமிழ் என் தாய்" என்றார் ஸ்ரீ சத்தியமூர்த்தி. கூட்டத்திலிருந்த அனைவரும் விண்ணதிரும்படி கரகோஷம் செய்தனர்.

JanakaKumari.

டில்லி தர்பார்!

●

டில்லி பார்லிமெண்ட் அங்கத்தினர்களுக்கு மாதச் சம்பளம் ரூபாய் 400. இது தவிர பார்லிமெண்ட் கூட்டம் நடக்கும்போது தினந்தோறும் படிச் செலவிற்காக ரூ 21-ம் கிடைக்கிறது. சபையில் அங்கத்தினர் தூங்கினாலும் சரி, பேசினாலும் சரி, தினமும் 21 ரூபாய்களைப் பெறலாம். வருஷத்தில் 150 தினங்கள் பார்லிமெண்டு கூடுகிறது. இந்த 150 தினங்களுக்குப் பார்லிமெண்டு அங்கத்தினர்களுக்கு 3150 ரூபாய்கள் கிடைக்கும். இதைத் தவிர மாதச் சம்பளமாகக் கிடைக்கும் 4800 ரூபாயுடன் வருஷத்தில் மொத்த வருமானம் 7950 ரூபாய்கள். பழைய திட்டப் பிரகாரம் பார்லிமெண்ட் அங்கத்தினருக்கு சபை கூடும் தினங்களில் தினமும் 40 ரூபாய்கள் கிடைத்துக் கொண்டிருந்தது. அதாவது வருஷத்தில் 150 தினங்களுக்கு ஆறாயிரம் ரூபாய்கள். ஆக பார்லிமெண்ட் அங்கத்தினர்களுக்குஇப்போதுள்ள திட்டப் பிரகாகாரம், பழைய திட்டத்தில் இருந்ததைவிட வருஷத்தில் 1950 ரூபாய்கள் அதிகமாய்க் கிடைக்கிறது.

இது மட்டுமா? பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் ரயில்வேக்களில் இரண்டாம் வகுப்பில் இலவசமாக இந்தியா முழுவதும் பிரயாணஞ் செய்யலாம். அதுவும், எத்தனை தடவை பிரயாணஞ் செய்யலாமென்றோ, எந்த விஷயமாய்ப் பிரயாணஞ் செய்கிறாரென்பதற்கோ ஒருவிதக் கட்டுப்பாடும் கிடையாது.

Hitawada, Nagpur

சுதந்திரம் பெற்றும் அடிமைத் தனத்தை வளர்த்த அம்சம் மறையவில்லை.

வெள்ளையர் போயினும் வேற்றுமை போகவில்லை

●

டில்லியில் இப்போது ஒரு மகாயுத்தம் நடக்கிறது. ஆனால் இது சைனியங்கள், விமானங்கள், குண்டுகள் முதலியவற்றைக் கொண்டு நடத்தப்படும் யுத்தமல்ல.

டில்லியிலுள்ள இந்திய மத்திய சர்க்கார் காரியாலயத்தில் வேலை செய்யும் ஒரு லட்சம் பேர்களில் இரு வகுப்பினர்கள் தான் பெரும்பான்மையோர்கள். இந்த வகுப்பினர் தென்னிந்தியர்களும் பஞ்சாபியர்களும் ஆவார்கள். இந்த இரு வகுப்புக்களுக்கிடையேயுள்ள பிளவு மூலம் டில்லி மத்திய சர்க்கார் காரியாலயத்தில் அடிக்கடி சண்டைகளும் சச்சரவுகளும் ஏற்படுவதுண்டு. இதனால் சர்க்கார வேலைக்கும் பொது மக்களுக்கும் தான் நஷ்டமும் பாதகமும் ஏற்படுகின்றன. தென்னிந்தியரைக் கண்டால் வட இந்தியருக்கு ஆகாது: தென்னிந்தியர் புத்திசாலி, வேலை தேடிக்கொண்டு டில்லி வரையில் போக நேரிட்டதிலிருந்தே அவர் வேலை செய்தே வயிறு வளர்க்க வேண்டியவர் என்பது தெளிவாகிறது. அதனால் தான் அவர் வேலையில் கண்ணுங் கருத்துமா யிருக்கிறார். அவர் தான் செய்யும் வேலை எவ்வளவு அற்பமானாலும் பெரிதானாலும் அதை நன்றாகக் கற்றுக்கொண்டு மேலதிகாரிகளுக்குத் திருப்தியாகுமளவுக்குச் செய்கிறார். காரியாலயத்திற்குக் குறிப்பிட்ட நேரத்தில் ஆஜராகிறார். செய்யும் வேலை பூர்த்தியாகாமல் எந்தக் காரணத்தினாலும் வெளியே செல்ல மாட்டார். மேல் உத்தியோகஸ்தர்களுக்கும் இலாகா

தலைமை அதிகாரிகளுக்கும் தென்னிந்தியர்கள் செய்யும் வேலையைப்பற்றிக் கவலையே கிடையாது. அவரைப்பற்றி ஒரு தனி நம்பிக்கை, ஒரு தனி அபிமானம், அதனால் அவர்கள் சீக்கிரத்தில் வேலையில் உயர்வு அடைகிறார்கள்.

தென்னிந்தியர்கள் சீக்கிரம் உத்தியோகத்தில் உயர்வடைவது தான் வட இந்தியர்கள் இவர்கள் மீது போடும் பழி. வேலைக்கும் வட இந்தியர்களுக்கும் வெகு தூரம். கல்லூரியில் பட்டம் பெற்றவர்களா யிருந்தும் வேலையை ஒழுங்காகக் கற்றுக் கொள்ள மாட்டார்கள்; ஒழுங்காகச் செய்யமாட்டார்கள். நான்கு வரிகள் கொண்ட கடிதம் எழுதினால் அதில் பத்து பிழைகளிருக்கும். மேலதிகாரிகளுக்கு ரிக்கார்டுகளிலிருந்து சரியான தகவல்கள் கொடுக்கமாட்டார்கள். எந்த வேலையானாலும் வட இந்தியனிடம் கொடுத்தால் அந்த வேலை சரியாக முடியாது என்று தான் மேலதிகாரிளும் இலாகா அதிகாரிகளும் கூறுவார்கள். இந்தக் காரணத்தால் முக்கியமான வேலைகளை வட இந்தியருக்குக் கொடுப்பது கிடையாது. வேலை செய்யத் திறமையில்லாதவர்கள் என்ற பெயர் பெயர் பெற்றதனால் இவர்களுக்கு வேலையில் உயர்வும் கிடைப்பதில்லை. இந்தக் காரணத்தால் ஏற்படும் பொறாமை வேலையில் திறமை யுள்ளவர் மீது தானே பாயும்.

பண்டித ஜவஹர்லால் நேரு, மற்ற மத்திய சர்க்கார் மந்திரிகள் போன்ற உயர்தர பதவியிலுள்ளவர்கள் இந்த வகுப்புச் சண்டையைப் பொருட்டடுத்துவதில்லை. அவர்களின் ஒரே நோக்கம், சர்க்கார் அலுவல்கள் சரியாக நடக்க வேண்டியதென்பது தான், அதற்கு பூரண யோக்கியதை உள்ளவர்களுக்குச் சரியான பொறுப்புகளும் பதவிகளும் கொடுக்க வேண்டுமென்ற அபிப்பிராயங் கொண்டவர்கள். இத்தகைய வகுப்புச் சண்டை டில்லியில் மட்டுமா நடக்கிறது? டில்லிக் கடுத்துள்ள கிழக்கு பஞ்சாபில் ஹிந்து - முஸ்லீம் விரோதங்கள் ஓரளவுக்கு மறைந்தாலும் சீக்கியர்கள், ஹிந்துக்கள் இவர்களுடைய பூசல்கள் மிகவும் அதிகரித்து விட்டன. சீக்கியர்கள் தங்களுக்குப் பஞ்சாபி மாகாணம் ஏற்பட வேண்டுமென்று வெகு தீவிரமாகக் கிளர்ச்சி செய்கிறார்கள்.

பம்பாய் மாகாணத்தில் குஜராத்தியர்கள், மராட்டியர்கள், பார்ஸீயர்கள் இவர்களுக்கிடையேயுள்ள வேறறுமைகள் மிகப்

பழைமையானது. நூற்றுண்டுக் கணக்காக வியாபாரத்திலும் மற்றும் அநேகத் துறைகளில் பங்காளிகளாக இருந்தும் ஒருவர் பாஷையை இன்னெருவர் நன்ருக கற்றுக்கொண்டும் இவர்கள் ஒருவருக்கொருவர் வெகு காலமாய் அருகருகே வசித்து திருந்தும் வேற்றுமைகள் நீங்கவில்லை. மகராஷ்டிர மாகாணத் தைச் சிருஷ்டிப்பதற்குள்ள கிளர்ச்சியினுல் விரோதங்கள் மீண்டும் கடுமையாகி விட்டன.

மத வேற்றுமைகள் நீங்கிஞல் ஒற்றுமை வரலாமென்ற அபிப்பிராயம் பாகிஸ்தான் தோன்றியதற்குப் பின் நடந்த நிகழ்ச்சிகளிலிருந்து மாற வேண்டியது தான். பாகிஸ்தான் சம்பவங்களுக்கு நாட்டினர் பொறுப்பில்லை யாயினும் அவற்றி லிருந்து நாம் நல்ல பாடங் கற்றுக்கொள்ளலாம். பாக்கிஸ்தான் முஸ்லீம்களுக்காக ஏற்படுத்திய ஒரு புனித ராஜ்யம் ! [பாக்- புனித மான, ஸ்தான் - ராஜ்யம்] இந்த ராஜ்யத்தில் பெரும்பாலும் முஸ்லீம்களே. ஆனல் அங்கு அடக்கியாளும் அதிகாரத்தை விரும்புவோர் பஞ்சாபியர் இவர்களுக்கு சிந்திக்காரர்களையும் வங்காளிகளையும் கண்டால் ஆகாது. சிந்துவில் அடிக்கடி நடக்கும் அரசியல் கலகங்களுக்கும், கிழக்கு வங்காளத்தில் சமீபத்தில் நடந்த பொது மக்களுடைய அரசியல் உரிமைகளின் படு கொலையும் நிகழக் காரணம் இந்தப் பஞ்சாபியர்களின் அடக்கியாளும் ஆத்திரமே. பொது மக்களிடையே வேற்று மையை உண்டாக்கும் காரணங்கள் இயற்கையிலேயே யில்லா விட்டால் அவற்றைச் சிருஷ்டிக்க கம்யூனிஸ்டுகள் எப்போதும் தயார். அவர்கள் செய்யும் சேஷ்டைகளும் அவற்ருல் பொது மக்கள் படுந் துன்பங்களும் அநேகமாய் எல்லா மகாகாணங் களிலும் காணலாம். நம் மாகாணத்தில் இந்த வேற்றுமை யின்றி மற்றென்றும் தோன்றிப் பரவ ஆரம்பித்து விட்டது. இது டில்லியில் இப்போது நடக்கும் யுத்தத்தின் மறு பக்கமாகும். அங்கு வட இந்தியர்கள் தென்னிந்தியர்களை எதிர்க்கிருர்கள். இங்கு தென்னிந்தியர்கள் வட இந்தியர்களென்ற நினைப்பில் யார் யாரையோ எதிர்க்கிருர்கள்.

சிருஷ்டியிலுள்ள யாவும் ஒன்று என்றும் ஆண்டவன் "அங்கிங் கெனுதபடி எங்கும்" பிரகாசமாய் நிறைந்துள்ளவ

னென்றும் வாழ்க்கைக்கே அடிப்பபடையாகக் கொள்ள வேண்டிய மதத் தத்துவங்கள் தோன்றி ஒரு காலத்தில் பிரபலம் கூட அடைந்த இந்த நாட்டில் நிலவியுள்ள வேற்றுமைகளும் பூசல்களும் எவருக்கும் தீராத விசனத்தை தானளிக்கும். வேற்றுமையினாலேயே அழிந்து வெகு காலம் துயரம் அனுபவித்த இந்த நாட்டு மக்கள் ஒற்றுமையின் அத்தியாவசியத்தை இன்னும் ஏன் கற்றுக்கொள்ளத் தயங்குகிறார்கள்.? ஒற்றுமையைக் கற்றுக்கொள்ளாமலிருந்தால் ராஜ்யத்திற்கு என்ன நேரிடலா மென்பதைப் பற்றிச் சந்தேகமே கிடையாது.

திருப்தியளிக்கும் பொருள்

ஒரு சினிமா நடிகையை பத்திரிகாசிரியர் ஒருவர் பேட்டி கண்டார். அவளிடம் "உனக்குப் பத்து லக்ஷம் ரூபாய்கள் அல்லது பத்துக் குழந்தைகள் கிடைப்பதாயிருந்தால் இரண்டில் நீ எதை விரும்புவாய் ? என்று கேட்டார்.

"பத்துக் குழந்தைகளைத்தான் விரும்புவேன்" என்று பதிலளித்தாள் நடிகை. ஏனென்றால், பத்து லக்ஷம் ரூபாய்களை பெற்ற பின்னும் மேலும், மேலும், பண ஆசை அதிகரித்துக் கொண்டேயிருக்கும். பத்துக் குழந்தைகளைப் பெற்றாலோ போதும், போதும், என்றாகிவிடும்."

பெற்றோர்களின் அனுக்கிரகம்

●

பஸ்ஸில் ஜன நெருக்கடியாயிருந்தது. பிரயாணிகள் ஒருவரோடொருவர் மோதிக்கொண்டிருந்தனர். இம்மாதிரிக் கூட்டத்தில் ஜேப்படிக்காரர்களும் இருப்பதுண்டல்லவா? நெருக்கடியான கூட்டத்தில் ஜேப்படிக்காரர்கள் பிரயாணிகள் போலத் தோன்றுவார்கள். ஒரே பஸ்ஸில் பிரயாணஞ் செய்யும் ஜேப்படிக்காரர்களெல்லோரும் பிரயாணிகளைப்போல் தோன்றினுல் ஒருவரையொருவர் ஜேப்படி செய்ய நேரிடலாமே! திடீரெனப் பிரயாணி என்ற பாவனையில் கூட்டத்தில் கலந்திருந்த ஒரு ஜேப்படிக்காரனின் சட்டைப் பையில் ஒரு கை நுழைவது போல் தோன்றிற்று. அதே விநாடியில் தந்திரக்காரனை ஜேப்படிக்காரன் தன் வலுவுள்ள கரங்களால் அந்தக் கையைப் பிடித்துவிட்டான். கையைப் பிடித்தவுடன் ஜேபடி செய்த உருவத்தைப் பார்த்தான். 'பிக்பாக்கெட்' ஒரு அழகிய மங்கை. இப்படித்தான் இந்த இருவரும் முதல் முதலாக ஒருவரை ஒருவர் தெரிந்துகொள்ள நேரிட்டது. காலப்போக்கில் அன்யோன்யம் அதிகரித்தது. காதலும் வளர்ந்தது. கலியாணமுமாயிற்று.

பிறகு இவர்களுக்கு ஒரு குழந்தை பிறந்தது. என்ன அதிசயம்! குழந்தையின் வலது கை பிறவியிலேயே இறுக மூடப்பட்டிருந்தது. டாக்டர்கள் எவராலும் மூடிய கையைத் திறக்க முடியவில்லை: பெற்றோர்களின் ஜேபடித் தொழிலுக்கு இந்தக் குழந்தை லாயக்கற்றவனோ என்ற சந்தேகம் பெற்றோர்களைத் தீவிரமாகப் பீடித்தது.

முடிவில் ஒரு மனோதத்துவ நிபுணரிடம் குழந்தையைக் காண்பித்தார்கள். நிபுணர் தன் சட்டைப்பையி

லிருந்த தங்கச் சங்கிலியுடன்கூடிய கடிகாரத்தையெடுத்து குழந்தையிடம் நீட்டினர். குழந்தை அதை மிக ஆவலுடன் நோக்கியது. என்ன ஆச்சரியம்! வலது கையை சிறிது சிறிதாக திறக்க ஆரம்பித்தது. கை பூராவும் திறந்தவுடன் அதில் கண்டது ஒரு மோதிரம். அப்போது தான் தாயாருக்கு தன் பிரசவத்தின்போது வந்திருந்த மருத்துவச்சி தன் மோதிரத்தைக் காணவில்லையெனப் புகார் செய்தது நினைவிற்கு வந்தது.



வெற்றியோ தோல்வியோ நல்ல முறையில் செயலாற்று.
—Goldsmith

★

கடன் பெறுதல் நட்புக்கு கத்தரிக்கோல். —Johnson

★

அறிவு வளர வளர ஐயமும் வளர்கிறது. —Goethe

★

ஒரு நல்ல பேச்சாளி மிகவும் பொல்லாதவர். Luther

★

வாழ்க்கை ஒரு பெரும் போராட்டம்; வெறும் பேயாட்டமன்று. —Moore

★

தேச "சேவை" கயவரின் இறுதிப் புகலிடம். —Johnson

★

ஒருவர் பித்து பலரைப் பித்தர்களாக்கி விடுகிறது. —King

★

அழகு கண்களைக் கவர்கிறது. சிறந்த பண்போ உயிரைக் கொள்ளை கொள்கிறது. —Voltaire

★

நாமனைவரும், பெரும்பாலும் பிறர் கருத்திற்கு அடிமைகளே.
—Hazlitt

மனமாற்றம்!

பழங் காலத்து நகரமொன்றில் இரண்டு பெரும் புலவர்கள் இருந்தார்கள்.

அந்த ஊர் ஜனங்கள் அத்தனை பேரும் அவர்கள் இருவரையும் பெரிய படிப்பாளிகள் என்று மதித்தார்கள். ஆனால் அவர்கள் இரண்டு பேருக்கும் ஒருவரைக் கண்டால் மற்றவருக்கு ஆகாது. ஒருவருடைய புலமையைப்பற்றி மற்றவர் எப்போதும் இழிவாகப் பேசுவார். பாம்புக்கும் கீரிக்கும் எவ்வளவு நட்போ அவ்வளவு நட்பு அவர்களுக்கு இருந்தது!

இவ்வளவு கடுமையான பகைக்கு வலுவான காரணமொன்று இருந்தது ஒரு புலவர் நாஸ்திகத் தலைவர்; மற்றொருவர் ஆஸ்திக சிரோமணி.

ஒரு நாள் காலையில் இந்த இரண்டு புலவர்களும் நகரத்து நாற்சந்தியில் சந்தித்தார்கள். ஒவ்வொருவரையும் சூழ நிறையச் சிஷ்யக் கூட்டம் இருந்தது. அரைக் கணத்தில் அவர்களின் விவாதம் உக்கிரமாக வளர்ந்தது. இவ்வளவு பெரிய புலவர்களின் விவர்தம் வேறு எந்த விஷயத்தைப்பற்றி இருக்கும்? 'உலகத்தில் தெய்வம் உண்டா, இல்லையா?' என்பதுதான் விஷயம்.

மணிக் கணக்காக வாக்கியங்களைக் கொட்டித் தர்க்கம் செய்துகொண்டு அந்தப் பெரும் புலவர்கள் நாற்சந்தியிலே நின்றார்கள். நடுப்பகல் ஆகிவிட்டது. அதனால் அவர்கள் இருவரும் வீட்டுக்குத் திரும்பினார்கள். அப்பொழுதும் ஒருவர் சொல்வதை மற்றவர் ஒப்புக்கொள்ளவில்லை!

ஆனால் அன்று மாலையில் ஒரு பெரிய விந்தை நிகழ்ந்தது.

நாஸ்திகப் புலவர் இங்குமங்கும் பார்த்துக்கொண்டே மெதுவாக ஒரு கோயிலுக்குள் புகுந்தார். தெய்வ பிம்பத்தைக் கண்டதும் அவர் சாஷ்டாங்கமாக வணங்கினார். பிறகு இரு கைகளையும் கூப்பித் தலைவணங்கி, "அப்பனே, கருணைக் கடலே, நான் வழி தவறிவிட்டேன்; பிழை செய்தேன்; உன்னை மறந்தேன். இந்தப் பாவியை நீ மன்னிக்க வேண்டும்" என்று பிரார்த்தனை செய்தார்.

அதே சமயத்தில் ஆஸ்திகப் புலவர் தம் வீட்டில் சுமை சுமையாகப் புத்தகங்களைக் கொளுத்திக்கொண்டு இருந்தார். அவை சாதாரணப் புத்தகங்கள் அல்ல; அவர் தம் உயிரைக் காட்டிலும் மேலாக ஆசை வைத்திருந்த தூய்மையான நூல்களே அவை! தெய்வத்திடம் அவருக்கு இருந்த நம்பிக்கை அடியோடு போய் விட்டது.

'மதுகரம்'

அசாதாரண காரியங்கள் பலவற்றைச் சாதித்துள்ள தேசத்தைச் சேர்ந்த ஒரு அசாதாரண மனிதர்.

நிருபரைக் கைவிடாத பத்திராதிபர்

ஒரு நாள் அமெரிக்க நகரத்திலுள்ள ஒரு தினசரிபத்திரிகையில் அந்த நகரத்திலிருந்த ஒரு வியாபாரியைப்பற்றி ஒரு செய்தி வெளியாயிற்று. உண்மையில் அந்தச் செய்தி அந்த வியாபாரியைப் பற்றியதல்ல. வேறொருவரைப் பற்றியதாகும். ஆனால் பெயர் தடுமாற்றத்தால் அந்தச் செய்தி தன்னைக் குறித்தது தான் என்று வியாபாரிக்குத் தோன்றியது. தவறைச் சுட்டிக் காட்டி அந்த வியாபாரியிடமிருந்து கடிதம் வந்தவுடன் பத்திராதிபர் வியாபாரிக்கு மன்னிப்புக் கடிதமெழுதி அதை பத்திரிகையிலும் பிரசுரித்தார். இதனால் வியாபாரி திருப்தியடையவில்லை.

இந்தச் செய்தியைத் திரட்டிய நிருபரைத் தன் காரியாலயத்திற்கு வருமாறு வியாபாரி வேண்டினார். அதற்கேற்ப நிருபர் வியாபாரியின் காரியாலயத்தைச் சேர்ந்தவுடன் வியாபாரியின் ஆட்கள் அந்தநிருபரை நிர்வாணமாக்கி அவர் மீது தாரை ஊற்றி மானபங்கப் படுத்தி வெளியே துரத்திவிட்டார்கள். இதைக் கண்ட பத்திராதிபர் தீராத ஆத்திரமடைந்தார். செய்த தவறுக்கு மன்னிப்புக் கேட்ட பின்பும் நடவடிக்கை யெடுப்பது மனிதத் தன்மையல்ல. பத்திராதிபர் தன் நிருபருக்குத் தகுந்த ஆறுதலை யளித்தபின்பு இவ்வாறு அட்டூழியம் புரிந்த வியாபாரிக்கு ஒரு பாடங் கற்றுக்கொடுக்கத் தீர்மானித்தார். நடந்த விஷயங்கள் முழுவதையும் பத்திரிகையில் பிரசுரித்துவிட்டு இம்மாதிரி ஒரு வியாபாரி இருப்பது அந்த ஊருக்கே பெரும் அவமானம் என்றும் கட்டுரைகளைப் பிரசுரித்தார். தினந்தோறும் இம்மாதிரி ஒரு கட்டுரையைப் பிரசுரிக்கலானார். வியாபாரியின் பல நண்பர்கள் கட்டுரைகளைப்படித்துவிட்டு அவரைக் கண்டித்தார்கள். இதோடு மாதாகோயிலின் நிர்வாகக் கமிட்டியின் அங்கத்தி

னராயிருந்த இந்த வியாபாரியை அவரது நண்பர்கள் கமிட்டியி லிருந்து அகற்றினார்கள். இதை யெல்லாம் கண்ட வியாபாரி ஸ்தம்பித்துப்போனார். தன் அட்டூழியத்திற்காளான நிரு பருக்கு 20,000 ரூபாய்கள் நஷ்ட ஈடு அளித்தார். ஆனால் அந்தப் பத்திரிகையில் வெளி வந்த கட்டுரைகள் அவருக்கு அளித்த வேதனை தாங்காமல் முடிவில் அவர் மாண்டே போனார். "நான்தான் அந்த வியாபாரியைக் கொன்றேன்" என்று பகிரங்கமாக அந்தப் பத்திராதிபர் ஒப்புக்கொண் டார். தன்னிடம் சம்பளம் பெறும் ஒரு நிருபர் மீது இவ்வ ளவு அக்கறையும் அன்பும் காட் டியவர் ஒரு சாதாரண மனிதர் அல்ல. அவர் பெயர் ஸ்கிரிப்ஸ் (Scripps). இவருடைய பெற் றோர்களின் 13 குழந்தைகளில் இவர் ஒருவர். வீதிதோறும் பத்திரிகைகளை விற்றுக்கொண்டு செல்லும் 'பத்திரிகைப்பையனாக' இவர் வாழ்க்கையை ஆரம்பித் தார். இளம் வயதில் தன் சகோ தரர் ஒருவருடன் இங்கிலாந் திற்குச் சென்றார். இவருடைய குடும்ப உறவினர் ஒருவர் அந்தச் சகோதரருக்கு உயில் பத்திரத்தில் சில சொத்துக்களை எழுதி வைத்திருந்தார். இந்தச் சொத்துக்களை யடைய அந்தச் சகோதரர் இங்கிலாந் திற்குச் சென்றபோதுதான் இவ ரும் கூடச் சென்றார். இங்கி லாந்திற்குச் சென்ற சகோதரர் களுக்கிடையே சச்சரவு ஏற்பட் டது. சச்சரவு மூண்டவுடன் பத்திரிகை விற்கும் பையன் "நான் உடனே அமெரிக்கா விற்குத் திரும்பிப் போகிறேன்" என்று சகோதரரிடம் கோப மாய்க் கூறினான். இதற்குச் சகோதரன் "அமெரிக்காவிற் குத் திரும்ப உன் கையில் பண மேது" என்று ஏளனமாய்க் கேட்டவுடன் தன்னுடைய சட்டையின் தையலைப் பிரித்து மூவாயிரம் ரூபாய்களைக் காண் பித்தான். அந்தச் சம்ப வத்திலிருந்து தன் வாழ்க்கையி லேயே ஒரு முக்கிய பாடத்தைக் கற்றுக்கொண்டார், பிற்காலத் தில் பிரபலமான ஸ்கிரிப்ஸ். பணத்திற்கோ, மற்றெதற்கோ பிறரிடம் தொங்கக் கூடா தென்ற தீர்மானத்தை வாழ்க் கைப் பூராவும் கடைப்பிடித் தார். பிறர் தயவிற்குத் தொங்கு வதால் தன் சுதந்திரம் பறிபோகுமென்பதை நன் குணர்ந்தார்.

பிற்காலத்தில் இவர் பிரபல பத்திராதிபரானார். சுமார் 24 பத்திரிகைகளை நடத்தி அநேக அமெரிக்க நகரங்களில் வெளி யிட்டுக்கொண்டு லட்சக்கணக் காய்ச் சம்பாதித்துக் கொண்டி ருக்கும் போது தன் தேவைக் கானபணத்தை கையிலேயே வைத்துக்கொள்வது வழக்கம். ஒரு சிப்பந்தியிடங் கூட இவர் தன் செலவிற்காகப் பணம் வாங்கமாட்டார். தவிர ஏராள மான பணத்தை, பாங்குகள் முறிந்துபோனாலும் மற்றெந்த காரணத்தினாலும் பாதிக்கப்

படாமல் ரகசியமாக வைத்துக் கொண்டிருந்தார்.

தைரியம், மனேதிடம், நாணயம், விடாமுயற்சி முதலிய நற்குணங்களை மற்றவர்களுக்குக் கட்டுரைகள் மூலம் போதிப்பதோடு இவர் நின்றுவிடவில்லை. இவர் தன் வாழ்க்கையிலும் இவற்றைக் கடைப்பிடித்து வந்தார். அமெரிக்காவில் சர்க்காரிலும் மற்ற துறைகளிலும் உள்ள ஊழல்களுக்கு அரசியல் வாதிகளே காரணமாகும். இந்த அரசியல் வாதிகளின் போக்கை அம்பலப்படுத்தும் பத்திராதிபரின் உயிருக்கே ஆபத்துதான். இம் மாதிரி ஒரு அரசியல் வாதிகள் கூட்டத்தின் ஊழல்களையும் அட்டூழியங்களையும் தன் பத்திரிகையில் ஸ்கிரிப்ஸ் வெளியிட்டார். வெளியிட்டவுடன் அரசியல் வாதிகள் இவரைக் கொல்லப் போவதாக இவருக்கு ரகசியத் தகவல் அளித்தார்கள். தகவல் கிடைத்தவுடன் இவர் போலீஸ் காரரிடம் செல்லவில்லை. தானே ஒரு துப்பாக்கியை வாங்கி பயிற்சி செய்ய ஆரம்பித்தார். அரசியல் கூட்டத்தைச் சேர்ந்த காலிகள் இவரருகே சென்றதும் இவர் துப்பாக்கியைக் கண்டு ஓடிவிட்டார்கள்.

தன் பத்திரிகை நிர்வாகத்திலும் இவர் அசாத்திய தைரியங் கொண்டவர். உள்ளதை உள்ளவாறே பிரசுரிப்பார். எவரையும் அஞ்சார். எவ்வளவு லஞ்சம் கொடுத்தாலும் உண்மையை ஒளிக்கமாட்டார். கலியாணஞ் செய்துகொண்டு சொந்த வாழ்க்கை நடத்தத் தொடங்கினுல் தன் பத்திரிகைத் தொழிலுக்குப் பங்கமேற்படுமென்று பிரம்மசாரியாகவே 72 வயது வரை காலந்தள்ளினுர். இவர் இரவில் வெகுநேரங் கழித்துத் தான் படுக்கச் செல்வார்.

இம்மாதிரி பெரிய மனிதர்கள் அநேகருக்குசில விசித்திரகுணங் களுமிருக்கும். தினந்தோறும் 40 'சிகார்கள்'பிடிப்பதும் புட்டி புட்டியாய் 'விஸ்கி' அருந்துவதும் இவரது விசித்திர பழக்கங்கள். ரயில் பிரயாணத்தின் போது கூட இவரிடம் 'விஸ்கி' இருக்கும்.

"25 வருஷகாலம் நான் போதையிலேயே ஆழ்ந்திருந்தேன்'' என்று ஒரு சந்தர்ப்பத்தில் இவர் பெருமையாகக் கூறிக்கொண்டார்.

45-ஆம் வயதில் ஸ்கிரிப்ஸுக்குக் கண்பார்வை அறவே போய் விட்டதென்று கூறலாம். அபரிமிதமானக் குடியால் நரம்புத் தளர்ச்சியும் கை, கால்கள் நடுக்கமும் ஏற்பட்டன. டாக்டர்களின் வற்புறுத்தலினுல் மதுபானத்தை குறைத்துக்கொண்டார். அதனுல்தான் இவர் 72 வயது வரை ஜீவித்திருந்தார்.

ஸ்கிரிப்ஸ் வாழ்க்கையில் நன்கு அடிபட்டவர். உலகத்தின் தன்மையை தன் அனுபவத்தால் நன்கு தெரிந்துகொண்டவர்.

"பணக்காரர்கள் நாணயமாக நடப்பது முடியாத காரியம்" என்று அவர் ஒளிக்காமல் ஒப்புக்கொண்டுள்ளார்.

"பணக்காரர்கள் மற்ற பணக்காரர்களோடுதான் சேருவார்கள்; ஏழைகளால் அவர்களுக்கு பயனே இல்லை; பணக்காரர்களின் நோக்கம் தங்கள் சம்பாத்தியத்தை அதிகரிப்பது எப்படியென்பதுதான்; பொதுமக்களுக்கு நன்மை புரியவேண்டுமென்பதல்ல நான் இவற்றை என் அனுபவத்திலிருந்து நன்கு தெரிந்துகொண்டேன்.

"பணக்காரர்கள் பொதுமக்களுக்கு நன்மை ஒன்றும் செய்யவில்லையே என்று வருந்துவதும் அர்த்தமற்றது. ஏனென்றால் பணம் சம்பாதிப்பதும் பொதுஜனங்களுக்கு நன்மை செய்வதும் ஒன்றுக்கொன்று பொருத்தமில்லாத காரியங்கள்". இவ்வார்த்தைகளில் எவ்வளவு உண்மை பொதிந்துள்ளது?

நீதிபதிக்கு நீதி தெரியாது!

ஒரு வழக்கு கீழ்க் கோர்ட்டில் தோல்வியடைந்த பின் மேல் கோர்ட்டுக்கு அப்பீலுக்கு வந்தது. அப்பீல் விசாரணைக்கு கீழ்க்கோர்ட்டில் வாதித்த வக்கீலே வாதாட வந்திருந்தார். கீழ்க்கோர்ட்டில் அடைந்த தோல்வியைப் பற்றி மனவருத்தமடைந்த வக்கீல் அப்பீல் கோர்ட்டின் நீதிபதிக்கு சட்டங்களை மிகச் சிரமத்தோடும் விரிவாகவும் எடுத்துரைத்துக் கொண்டிருந்தார்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த நீதிபதி சற்று வெறுப்படைந்து "சட்டங்களை இவ்வளவு விரிவாக நீங்கள் எடுத்துக் கூறவேண்டாம். நீதிபதிக்கும் சிறிது சட்டம் தெரியும் என்பது உங்கள் ஞாபகத்திலிருக்கட்டும்" என்று கூறினர்.

"நீதிபதிக்குச் சட்டம் தெரியுமென்று நினைப்பது தவருகும்; அப்படி நான் நினைத்ததால் தான் என் வழக்கில் கீழ்க்கோர்ட்டில் தோல்வியடைந்தேன்" என்ருர் வக்கீல்.

பிறப்பினுலும் உழைப்பினுலும் மிகப்பெரிய மனிதராய் விளங்கின ஒரு மகாராஜா.

மகுடதாரியான மேதை

●

ஆஸ்திகளை ஆளுவதற்குப் பிள்ளை இல்லாமலிருப்பது ஒரு துர்ப்பாக்கியமாகத் தான் பொதுவாகக் கருதப்பட்டு வருகிறது. குடிசையிலாகட்டும் அரண்மனையிலாகட்டும், ஒரு 'எஜமானி'யிருப்பதைவிட, எஜமானர் ஒருவர் இருந்தால் குடும்பத்தினருக்குக் குதூகலத்தையும் தைரியத்தையும் அளிக்கிறது.

150 ஆண்டுகளுக்கு முன் நம் நாட்டில் அமைதியில்லாத காலமாக இருந்தது. பிரிட்டிஷார் சிறிது சிறிதாக தென்னிந்தியாவை ஆக்கிரமித்து தங்கள் ஆட்சியை ஏற்படுத்திக்கொண்டிருந்த காலம். அவர்களை எதிர்த்துத் தோற்கடித்துத் தேசங்களை பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் கொண்டு வருவதைத் தடுத்துக் கொண்டிருந்த தேசபக்தர்களும் அக்காலத்தில் இருந்தனர்.

இம்மாதிரி ஒரு தேசபக்தர் தென்னிந்தியாவில் பிரிட்டிஷாரை எதிர்த்தார். ஆனுல் முடிவில் அவர் தோல்வியடைந்து மாண்டுபோனுர். அவர் தான் திருவிதாங்கூர் திவானுயிருந்த வேலுத்தம்பித் தளவாய்.

இவர் மரணத்தால் மக்கள் பூரண விசுவாசத்திற்குப் பாத்திரமான ஒரு தலைவரை இழக்க நேரிட்டது.

அப்பொழுது அந்த தேசம் மாலுமியற்ற கப்பல் போலிருந்தது. ஏனென்றுல் ராஜ்யத்திற்கு ராஜாவும் கிடையாது. ஆட்சி புரிந்து கொண்டிருந்தது ராணி தான். அவள் அப்போது கர்ப்பிணியாயுமிருந்தாள்.

ஆளுவதற்குப் பிள்ளையில்லாத துர்ப்பாக்கியத்தின் சிகரமென்றுதானே இந்த நிலைமையைப் பற்றிக் கூறவேண்டும்! பிள்ளை இல்லையே என்ற ஏக்கம் ராணிக்கு இருந்ததுபோல் அந்த தேசத்து மக்களுக்குமிருந்தது.

மக்கள், தங்கள் ஏக்கத்தில் ராணி கர்ப்பத்திலிருக்கும்

குழந்தை ஆண் என்றே முடிவு செய்துவிட்டனர். அதுமட்டுமா? அந்தக் குழந்தை முடிசூடின ராஜாவென்றே மக்கள் மனத்தில் எண்ணம் குடிகொண்டது. பிறப்பதற்கு முன்பே இவ்வளவு மகோன்னத பதவியை ஏற்றுக் கொள்ள நேர்ந்த ராஜாவை 'கர்ப்ப ஸ்ரீமான்' என்று அழைக்கத் தொடங்கினர். இப்படி மக்களின் ஏக்கங்களும் அபிலாஷைகளும் ஆசிகளும் கட்டுக்கடங்காமலிருந்த தருணத்தில் ஜனித்த குழந்தைதான் திருவிதாங்கூர் மகாராஜாவும் பிரபல சங்கீத மேதையுமான காலஞ்சென்ற ஸ்வாதி திருநாள் ராமவர்ம மகாராஜா ஆவார்.

சங்கீத உலகத்தில் மட்டும் தான் இவருக்குக் கீர்த்தியானலும் ராஜ்ய நிர்வாகத்திலும் எல்லாத் துறைகளிலும் இவர் நிபுணத்துவம் வாய்ந்தவர். முன் கூறியதுபோல் இவர் பிறந்த சமயத்தில் திருவிதாங்கூர் ராஜ்யத்தில் அநேக குழப்பங்கள் இருந்தன. பிரிட்டிஷாரின் நடவடிக்கைகளினல் ராஜ்யத்தில் எல்லாத்துறைகளிலும் பூசல்கள் மலிந்திருந்தன.

இவர் பதினாறுவது வயதிலேயே ராஜ்ய பரிபாலனத்தை ஏற்றுக்கொள்ள நேரிட்டது. இந்த இளம் வயதில் ராஜ்யத்தின் நிர்வாகத்தை ஏற்றுக் கொண்டு ராஜ்யத்தில் எல்லாத் துறைகளிலுமிருந்து வந்த லஞ்ச ஊழல்களையும் பூசல்களையும் ஒழித்தார். எல்லாப் பிரச்னைகளையும் தானகவே கவனித்து அதற்குவேண்டிய நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண்டார்.

பிரதம மந்திரி, நீதிபதிகள் முதலியோர் அடிக்கடி ராஜாவைச் சந்தித்து ராஜ்ய விவகாரங்களைப் பூரணமாக இவருக்கு தெரிவித்துக்கொண்டிருந்தார்கள். இம்மாதிரி ஏற்பாடுகளால் பொதுஜனங்களிடம் நம்பிக்கையையும் நன்மதிப்பையும் பெற்றார். மனு ஸ்மிருதியைக் கற்றுக்கொண்டு ராஜ தர்மத்தை பூரணமாகக் கடைப்பிடித்த ஓர் உத்தம அரசனுவார் இவர்.

திருவிதாங்கூர் ராஜ்யத்தில் மதிப்பற்றுப்போன சட்டங்களை ஒழுங்குபடுத்தி அவற்றை மக்கள் மதிக்குமாறு செய்தார். திருவிதாங்கூரில் உள்ள வான சாஸ்திர ஆராய்ச்சி நிலையம் இவரால் ஏற்படுத்தப்பட்டதுதான். பொதுமக்களின் கல்விக்குப் பேர்போன திருவிதாங்கூரில் நாடெங்கும் கல்வியைப் பரவத் துவங்கியதற்கு மூலகாரணம் ஸ்வாதி திருநாள் மகாராஜா தான்.

வினோபாபாவேஜீயைப்போல் பலபாஷைகளைக் கற்றுக் கொண்டவர். மலையாளம், சம்ஸ்கிருதம், தமிழ், தெலுங்கு, ஹிந்தி மராத்தி, பிரெஞ்சு, ஜெர்மன், கன்னடம் முதலியபாஷைகளிலெல்லாம் பாண்டித்தியம் பெற்றவர். இதனல் இவருக்கு 'சப்த பாஷா வல்லரி' என்ற பட்டம்

உண்டு. மலேயாள பாஷைக்கு ஒரு நிபுணரைக்கொண்டு இலக்கணம் அமைத்துக் கொடுத்துள்ளார்.

கலே, சங்கீதம், இலக்கியம் முதலியவற்றிற்கு அமோக ஆதரவளித்தார். சம்ஸ்கிருதம், மலேயாளம், தமிழ், தெலுங்கு என்ற வித்திபாசமில்லாமல் எல்லா பாஷைப் புலவர்களுக்கும் இவர் வரவேற்பும் சன்மானங்களும் அளித்தார். உடற்பயிற்சி, வாள்வீச்சு முதலிய கலேகளுக்கு போஷகராயுமிருந்தார்.

இத்தகைய முழு கவனத்தையுஞ் செலுத்தும் பல அலுவல்களேத் தவிர ஸ்வாதித் திருநாள் சுயமாகவே சமாளிக்கவேண்டிய யுத்தம் ஒன்று நடந்து கொண்டிருந்தது. இந்த யுத்தம் சைனியங்களால் நடத்த வேண்டியதல்ல. புத்தி சாதுர்யத்தை உபயோகித்து நடத்த வேண்டியதாயிருந்தது. திருவிதாங்கூரில் அரசியல் சுதந்திரம் மறைந்து கொண்டிருந்த அந்தச் சமயத்தில் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பிரதிநிதியாகவும், திருவிதாங்கூர் திவானுகவும் வெள்ளேக்காரர் ஒருவரே வேலே பார்த்து வந்தார்.

இந்த வெள்ளேக்காரர், மகாராஜாவின் உரிமைகளேப் பாதிக்கும் வண்ணம் நடந்து கொண்டு வந்தார். இவரை எதிர்த்துக்கொண்டும் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கோபத்திற்காளாகாமலும் தப்பித்துக்கொள்வதுமே மகாராஜாவிற்குப் பெருந் தலேவலியாயிருந்தது.

அன்றைய திருவிதாங்கூரை ஒட்டிய அரசியல், பொருளாதாரம் முதலியத் துறைகளில் ஏற்பட்ட சோர்வுக்கு சங்கீதமே இவருக்கு தக்க பரிகாரமாயிருந்தது. பத்மநாபதாஸன் என்ற புகழ்பெற்ற ஸ்வாதித் திருநாள் மகாராஜா தன் அளவற்ற தெய்வபக்தியைச் சங்கீதம் மூலமாக ஆண்டவனுக்குக் காணிக்கையாகச் செலுத்திவந்தார்.

இனிமையான சாஹித்தியங்களே இயற்றியதோடு இலக்கியத் துறைகளிலும் அபார மேதையாகத் திகழ்ந்தார். "பக்தி மஞ்சரி," "பத்மநாபசதகம்" முதலிய-சமஸ்கிருத காவியங்களேயும் இயற்றியுள்ளார். திருவனந்தபுரத்தைப் பற்றிய சரித்திரமும் சம்ஸ்கிருத இலக்கணத்தில் "அலங்காரம்" என்ற பொருளேப் பற்றியும் நூல்கள் வெளியிட்டிருக்கிறார்.

இம்மாதிரி மகத்தான சாதனேகளெல்லாம் செய்த மகுடதாரிகள் இனத்தைச் சேர்ந்த இந்த மேதை 34-வது வயதில் காலமானர். சிலர் பிறவியினல் பெரியவர்களாகிறார்கள். சிலர் உழைப்பினல் பெரியவர்களாகிறார்கள். பிறப்பினுலும் உழைப்பினுலும் மிகப் பெரிய மனிதராய் விளங்கியவராகும் சாஹித்திய இலக்கிய மேதையான ஸ்வாதித் திருநாள் மகாராஜா.

பிறவி-குணம்

●

நம் நாட்டில் சாதாரணமாய் ஒரு குழந்தை பிறந்தால் அது ஐந்து அல்லது ஆறு பவுண்டு எடையுள்ளதாயிருக்கும். மேல் நாடுகளில் பிறந்த குழந்தையின் எடை இதைவிடச் சற்று அதிகம்தான். இருபது அல்லது இருபத்தைந்து பவுண்டு எடையுள்ள குழந்தைகளும் அபூர்வமாக பிறக்கின்றன. ஆனல் இதை மிகவும் அபூர்வமென்று மறுபடியும் அழுத்தமாகக் கூறவேண்டியிருக்கிறது.

இம்மாதிரி அதிகக்கனமுள்ள குழந்தைகள் பெரும்பாலும் ஆண் குழந்தைகளே. இவை முதற் பிரசவத்தில் பிறக்கும் குழந்தைகளுமல்ல.

எடை மிக அதிகமாவது எப்படி அதிசயமோ அதுபோலத்தான் எடை குறைவதும் அதிசயமாகும். ஒரு ஸ்திரீக்குப் பிறந்த குழந்தை ஒன்று முக்கால் பவுண்டுஎடையேதானிருந்ததாம். மோரிஷ் தீவில்பிறந்த மற்றொரு குழந்தையின் எடை ஒரே பவுண்டுதானிருந்ததாம். குழந்தையின் உயரம் 13 அங்குலமும் தலை கிரிக்கட் பந்து அளவிற்கும் இருந்ததாம். ஆனல் இம்மாதிரிக் குழந்தைகளும் ஐந்தாறு மாதங்களில் சாதாரணக் குழந்தைகளின் வளர்ச்சியைப் பெற்றுவிடுகின்றன.

சாதாரணமாய், உயரமும் பருமனு மில்லாதவர்களுக்கும் சாதாரணமான எடையுள்ள குழந்தைகள் பிறக்கலாம். இரண்டே அடி உயரமுள்ள ஒரு ஸ்திரீ மூன்றே முக்கால் பவுண்டு எடையுள்ள சாதாரண குழந்தையைப் பிரசவித்தாளாம்.

பிறக்கும்போது ஒரு குழந்தைக்கிருக்கும் எடையைப் பற்றிய விஷயம் எவ்வளவு ருசிகரமானதோ அதுபோலத்தான் குடும்பப் பெருக்கமும். ஐந்தாறு குழந்தைகள் உள்ள குடும்பம் நம் நாட்டில் மிகவும் சகஜம்.

ஒரு டஜன் குழந்தைகளையுடைய பெற்றோர்கள் அபூர்வமேயல்ல. ஆனல் மேல் நாடுகளில் ஒரு தம்பதிகள் 100 குழந்தைகளைப் பெற்றோர்களாம். ருஷ்யாவில்ஒருவருக்கு 92-ஆம் வயதில் 31-வது குழந்தை பிறந்ததாம். இம்மாதிரி பருவம் தப்பிப்பிறக்கும் குழந்தை மிகப் புத்திசாலிகளாயிருக்குமாம்.

சில மாதங்களுக்கு முன்பு கனடாவில் ஒரு ஸ்திரீ தன்னுடைய 39-ஆம் வயதில் 21-வது குழந்தையைப் பெற்றுளாம்.

ஒரே பிரசவத்தில் இரண்டு, மூன்று, நான்கு குழந்தைகள் பெறுவதிலும் சில அபூர்வ

நிகழ்ச்சிகள் சம்பவிக்கின்றன. எல்லாக் குழந்தைகளும் ஒரே தினத்தில் சிலருக்குப் பிறப்பதில்லை. இங்கிலாந்தில் ஒரு ஸ்திரீ ஒரு குழந்தையைப் பிரசவித்த ஐந்து தினங்களுக்குப் பிறகு மற்றொரு குழந்தையைப் பெற்றெடுத்தாள். ஆஸ்திரேலியாவில்ஒரு ஸ்திரீ ஒரு குழந்தையைப் பிரசவித்து, இருபத்தாறு மணி நேரத்திற்குப் பின் இரண்டாவது குழந்தையையும், அதற்குப் பின் பதினெட்டு மணி நேரங் கழித்து மூன்றாவதுகுழந்தையையும், மறுபடி ஆறு மணி நேரஞ் சென்றபின் நாலாவது குழந்தையையும் பிரசவித்தாள்!

பல்லுடனும் குழந்தைகள் பிறப்பதுண்டு. இஸ்ரேல் ராஜ்யத்தில் 1950-ம் ஆண்டில் ஒரு ஸ்திரீக்குப் பிறந்த குழந்தைக்கு இரண்டு முன் பற்களிருந்தன. 1951-ல் இங்கிலாந்தில் பிரசவித்த ஒரு ஸ்திரீயின் குழந்தைக்கும் இரண்டு முன்பற்களிருந்தன.

சில குடும்பங்களில் பம்ரபரையாக ஆண் குழந்தைகளோ அல்லது பெண் குழந்தைகளோ மட்டுமேபிறப்பது சகஜம். ஹாலந்து தேசத்து ராஜ குடும்பத்தில் நான்கு நூற்றாண்டுகளில் பதிமூன்று ஆண் குழந்தைகள் தான் பிறந்திருக்கின்றன.

ஒரு ஸ்திரீக்குப் பத்து மாதங்கள் கர்ப்பமென்பது இயற்கை. பத்து மாதங்களுக்குமேல் கர்ப்பகாலம் அதிகமானால் விவாகரத்துகள் கூட ஏற்படுவதுண்டு.

சமீபத்தில் இங்கிலாந்தில் ஒரு ஸ்திரீ 317 தினங்களும் மற்றொரு ஸ்திரீ 323 தினங்களும் கர்ப்பம் தரித்திருந்தார்களாம். ஒரு அமெரிக்க ஸ்திரீயின் கர்ப்பம் 375 தினங்களுக்குமேல் தாண்டியதால் தம்பதிகளுக்கிடையே கோர்ட்டு விவகாரம் கூட ஏற்பட்டதாம்!

ஒரு மிகப் புராதன நாட்டில் இருப தாம் நூற்றுண்டு விளைவித்த மாறு தல்கள்.

மந்திர கோஷமும் மோட்டார் வண்டி சத்தமும்

ஏழு லக்ஷம் ஜனத்தொகை கொண்டதும் அநேக நூற்றுண்டுகளாக பிற ராஜ்யங்களுடன்யாதொரு சம்பந்தமற்றது மான தேசமாகும் நேப்பாளம். இரு பிரம்மாண்ட பூதங்களான சீனவிற்கும் இந்தியாவிற்கும் நடுவே அகப்பட்டுக்கொண்டிருக்கும் ஒரு ஆட்டுக்குட்டி போன்ற தோற்றமளிக்கிறது இந்தக் குட்டி ராஜ்யம். உத்தேசமாக கிழக்கு-மேற்காகக் கிடக்கும் இந்த ராஜ்யத்தின் நீளம் 520 மைல், அகலம் 120 மைல் வடக்கே கம்யூனிஸ்டு சீனவைச் சேர்ந்த திபேத். தெற்கே இந்தியா; மேற்கே காஷ்மீர்; கிழக்கே வங்காள பாகிஸ்தான். நடுவே எவரெஸ்டு சிகரம்.

நேபாளத்துத் தலைநகரமான கட்மாண்டுவில் முக்கியமாக இரண்டு சத்தங்கள் எப்போதும் முழங்குகின்றன. ஒன்று புத்த சந்நியாசிகளின் மந்திரகோஷங்கள், இரண்டாவது அமெரிக்க மோட்டார் வண்டிகளின் ஆரவாரம்.

கட்மாண்டு, ஆலயங்கள் நிறைந்த நகரம். ஹிந்து மதம், புத்த மதம் மற்றும் இம்மதங்களை யொட்டின மதக் கிளைகளைச் சேர்ந்த ஆலயங்கள் அநேகம் உள்ளன.

புத்த மதத்தை ஹிந்து மதம் எதிர்க்கத் தொடங்கின தருணத்தில் நேப்பாளம் யுத்தமனப்பான்மையற்றிருந்தது. அதனுல் நேப்பாளிகள் இந்த இரு மதங்களையும் பிணைக்க முயற்சி செய்தார்கள்.

1846-ல் பிரதம மந்திரியாக இருந்த ராணு குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் நேப்பாள ராஜாவின் நிர்வாகத்தின் ஊழல்களைக்கண்டு வெறுப்படைந்தவ

ராகிராஜாவின் அதிகாரங்களைக் குறைக்க ஏற்பாடு செய்தார். மந்திரி பதவியையும் ராஜ பதவியைப்போல் பரம்பரையாக இருக்கவேண்டுமென்றும் கட்டுப்பாடு செய்தார். நூறு வருஷங்களாக இவ்வாறுதான் நடந்துகொண்டுவந்தது. 1950-ல் இப்பொழுதிருக்கும் நேப்பாளத்து அரசர் இந்தக் கட்டுப்பாட்டை நீக்கி ராஜ்ய நிர்வாகத்தை தான் ஏற்றுக்கொள்வதாகவும் தனக்கு உதவியாக மந்திரி இருக்குமாறும் ஆக்ஞாபித்தார். மந்திரி இந்த ஆக்ஞையை எதிர்த்ததால் ராஜ்யத்தில் யுத்தம் ஆரம்பித்தது. முடிவில் மந்திரி ராஜ்யத்தைவிட்டு விரட்டப்பட்டார். ஆனால்ராஜ்ய நிர்வாகத்திற்குத் தகுந்த வேறு ஆள் இல்லாததால் விரட்டப்பட்ட மந்திரியைத் திரும்ப அழைத்து மந்திரி பதவியை ஏற்குமாறு கூறினார் ராஜா. கம்யூனிசம் நேப்பாளத்தில் பரவுமோவென்ற பயம் ராஜாவிற்கும் மந்திரிக்குமிருந்ததால் இருவரும் ஒத்துழைக்க தீர்மானித்து கம்யூனிஸம் ராஜ்யத்தில் பரவாமல் செய்தனர்.

சென்ற அநேக நூற்றாண்டுகளாக இருந்த பிற ராஜ்யங்களோடு சம்பந்தமற்ற நிலையை அகற்றி அமெரிக்காவிடமும் ஜப்பானிடமும் விஞ்ஞானத்துறைகளில் தேவையான உதவிகளை நேப்பாளம் கோரியது. இதன் பயனாய் அமெரிக்கமோட்டார் வண்டிகள் இப்போது நேப்பாளத்தில் ஏராளமாய் வந்துள்ளன.

கார்களின் பாகங்களைப் பிரித்து மூட்டை மூட்டையாக கூலியாட்கள் தலைமீது வைத்து மலையிலுள்ள ஒற்றையடிப் பாதைகள் வழியாக நேப்பாளத்திற்கு வந்து சேர்ந்தவுடன் அவற்றை ஒன்றோடு ஒன்று சேர்த்து திரும்பியும் அழகும் வேகமும் கொண்ட மோட்டார் வண்டிகளாக்கிய அமெரிக்கர்களின் சாதனையை மெச்சவேண்டியதுதானே! இந்தியாவிற்கும் நேப்பாளத்திற்குமிடையே வியாபாரத்திற்கும் பாதுகாப்பிற்கும் ஒப்பந்தமிருக்கிறது.

உலக விவகாரங்களில் ஒரு முக்கிய ஸ்தானத்தை அடைய நேப்பாளம் விரும்புகிறது.

நேப்பாள ராஜ்யத்தில் கலகங்களைச் சிருஷ்டிக்கக் கூடாதென்று சீனத் தலைவரான மாவிடம் நேரு கோரியுள்ளார். ஏனென்றால் உலகத்தின் கூரையைப்போன்றிருக்கும் நேப்பாளத்தில் கலகமேற்பட்டால் ஆகாயத்திலிருந்து மழை பூமியில் விழுவதுபோல கலக மாரியும் பொழியலாமல்லவா?

—*Orient Digest*, Tokyo, Japan.

ஆகாயத்தைத் தொடுவதுபோல் தோன்றும் புகைபோக்கியைப் பாராதவர்கள் உண்டா? ஆனால் அவற்றிலிருந்து வெளிவருவது வினையும் விஷமுமே.



புகை — மனிதனுக்குப் பெரும் பகை

●

சென்ற வருஷக் கடைசியில் லண்டன் நகரம் நாலைந்து தினங்களுக்குத் தொடர்ந்து மூடு பனியால் மூடப்பட்டிருந்தது. அந்தச் சமயத்தில் பகல்வேளையில் கூட அமாவாசை இரவு போல் திக்குத்திசை தெரியாமலும் எதிரில் இரண்டு மூன்று அடிகளுக்கு அப்பால் இருப்பதே என்னவென்று கண்ணுக்குத் தெரியாமலுமிருந்தது. இந்த நாலைந்து தினங்களுக்குள் சுமார் நாலாயிரம் பேர்கள் விபத்துக்காளாயினர். இன்னும் அநேக ஆயிரம் பேர்கள் பல வித வியாதிகளினால் பீடிக்கப் பட்டனர்.

இம்மாதிரி மூடுபனி, தொழிற் சாலைகள் ஏராளமாக இருக்கும் நகரங்களில் சகஜமான ஒரு காட்சியாகும். ஏராளமான தொழிற்சாலைகளிருந்தால் இவற்றிலிருந்துகிளம்பும் ஏராளமான புகை வாயுமண்டலத்தை யடைகிறது. இவ்வாறு தொழிற் சாலைகளிலிருந்து கிளம்பும் புகையில் விஷப்பொருள்கள் கலந்திருக்கின்றன. இவ்விஷப் பொருள்களால் மனிதர்களுக்கும் மற்ற ஜீவராசிகளுக்கும் அநேக விதமான நோய்கள் உண்டாவதோடு கூட நகரங்கள் மூடுபனியால் மூடப்பட்டு அதன் மூலம் மனிதர்களுக்கும் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

அமெரிக்கா முதலான மேல் நாட்டு நகரங்களில் வாயுவில் இவ்வாறு விஷப்பொருள் கலப்பது பெரிய பிரச்னையாக இருந்து வருகிறது. மேல்நாடுகளில் மோட்டார் வண்டிகள் ஏராளமாயிருப்பதும் வாயு அசுத்தமாவதற்கு மற்றொரு காரணமாகும். ஏனென்றால் மோட்டார் வண்டிகளில் உபயோகிக்கும் பெட்ரோலிலிருந்து கொடிய விஷவாயு ஒன்று வெளியாகிறது. இக் காரணங்களினாலெல்லாம் நகர

வாசிகள் சுவாசிக்கும் வாயுவில் நிமோனியா, க்ஷயம், பிளவை, முதலிய கொடிய ரோகங்களுக்குக் காரணமான அநேக விஷக் கிருமிகள் நிறைந்துள்ளன. சென்ற மாதம் ஜாம்ஷெட்பூரில் ஏற்பட்ட ஒரு நூதன வியாதியைப் பற்றிப் பத்திரிகையில் தகவல்கள் வெளிவந்துள்ளன. மேல் நாடுகளில் ஏற்கனவே பரவியுள்ள நோய்களைக் கவனித்தால் இந்தப் புது வியாதிக்கு காரணம் தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் புகையாயிருக்கலாம் என்றே தோன்றுகிறது.

இயந்திரசாலைகள் நாள் தோறும் அதிகரித்துவரும் இக்காலத்தில் மேல்நாடுகள், இயந்திர சாலைகள் மூலம் அனுபவிக்கும் வியாதிகளைப்பற்றியும் அவற்றை நிவாரணஞ் செய்வதற்காகக் கையாளும் வழிகளைப் பற்றியும் நாம் கவனிப்பது அவசியம்.

நியூயார்க் நகரத்திலிருக்கும் தொழிற்சாலைகள் அல்லாமல் அந்நகரத்திலுள்ள குப்பை கூளங்களைக் கொளுத்துவதற்காக ஒரு விசேஷமான ஏற்பாடு உள்ளது. அந்நகரத்தில் பத்தாயிரம் மாளிகைகளில் அந்தந்த மாளிகைகளில் தினந்தோறும் சேரும் குப்பை கூளங்களைக் கொளுத்திச் சாம்பலாக்க பிரத்தியேக இயந்திர அடுப்புகளை அமைத்திருக்கின்றனர். ஒவ்வொரு மாளிகையிலும் சுமார் எழுபதிலிருந்து நூறு மாடிகள் வரையிலும் இருக்கும். இவற்றில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் வசிப்பார்கள். இதனால் இயந்திர அடுப்புகளில் எவ்வளவு குப்பை கூளங்கள் தினந்தோறும் சேருமென்பதை யூகித்துக் கொள்ளலாம். ஒவ்வொரு தொழிற்சாலையிலிருந்தும் ஏராளமான புகை வெளியாகி வாயு மண்டலத்தில் சேர்ந்து விஷப் பொருள்களைப் பரவச்செய்கிறது.

நியூயார்க் சுகாதார அதிகாரிகள், அந்நகரத்தின் வாயுவை மனிதர்கள் சுவாசித்தால் கொடிய வியாதிகள் நேரிடுமென்றுதான் அபிப்பிராயப் படுகின்றனர். வீதியில் நின்றுகொண்டு வாகனங்களின் போக்குவரத்தைக் கண்காணிக்கும் நியூயார்க் போலீஸ்காரர்கள் மயக்கம், பார்க்கும் சக்தி குறைதல், தலைமந்தம் முதலிய வியாதிகளுக்கு அடிக்கடி ஆளாகிறார்கள். நியூயார்க் வாசிகளில் சோகை வியாதியால் பீடிக்கப்படாதவர்கள் கிடையாதென்றே சொல்லலாம். இந்த நகரத்தில் ஐம்பது கோடி ருபாய்க்கு மேல் துணிகள் சலவைக்கு மாத்திரம் செலவிடுகிறார்கள். இந்தச் செலவிற்குக்காரணம் மோட்டார் வண்டிகள் மூலமும், இயந்திர அடுப்புகள் மூலமும் வெளிவரும் புகையும் விஷ வாயுவேயாகும்.

வாயுமண்டலம் அசுத்தமாவதால் அதனால் நேரிடும் தீங்குகளையும் பிணிகளையும் தடுக்க வழிகள் கண்டுபிடிப்பதற்

கென்றே நியூயார்க் நகரசபையில் பிரத்தியேக இலாகா ஒன்று வேலை செய்கிறது.

லாஸ் ஏஞ்சல்ஸ் என்ற இடத்தில் தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் புகை மூலம் அந்த நகரவாசிகள் அநேகர் எலும்பு சதை முதலியவற்றிற்கு ஏற்படும் கோளாறினால் அவதிப்படுகிறார்களாம். டோனோரா, லைமா என்ற நகரங்களில் 1948-இல் ஏற்பட்ட மூடுபனியால் அநேக மக்களுக்கு சுவாசக் கோளாறும் வயிற்றுக்கோளாறும் ஏற்பட்டு பலர் மாண்டுபோனார்களாம்.

அநேக மேல் நாட்டு நகரங்களிலும் எப்பொழுதுமே கண்களிலும், மூக்கிலும், தொண்டையிலும் எரிச்சலால் மக்கள் பாதிக்கப்படுவதற்குக் காரணம் தொழிற்சாலைகளின் புகையும் மோட்டார் வண்டியிலிருந்து வெளியாகும் பெட்ரோல் கியாஸும் தான்.

இங்கிலாந்தில் மான்செஸ்டர் என்ற நகரத்தில் வசிப்பவர்களின் ஆயுள் பொதுவாக இந்தப் புகையினால் 10 வருஷங்கள் வரையிலும் குறைய நேரிடுகிறதெனக்கணக்கிட்டிருக்கிறார்கள். மனிதர்களுக்கு ஏற்படும் வியாதிகளைத் தவிர லண்டன் நகரத்து அநேக கட்டிடங்களும் இந்தப் புகையிலுள்ள கந்தகம்போன்ற ரஸாயனப் பொருள்களாலும் மற்றும் வீர்யமான திராவகப் பொருள்களாலும் கட்டிடங்களிலுள்ள கற்களிலும் கட்டைகளிலும் சுமார் 10 அங்குலத்திற்கு குழிகள் விழுந்து விடுகின்றனவாம்.

புகையினால் ஏற்படும் சேதங்களுக்கு நிவாரணஞ் செய்ய சில ஏற்பாடுகளும் மேல் நாடுகளில் செய்துவருகின்றனர். நிலக்கரிக்குப்பதில் மின்சார சக்தி உபயோகித்தால் புகைக்கிடமிராது. அதனால் அமெரிக்காவில் அநேக புதுத் தொழிற்சாலைகள் மின்சார சக்தியை உபயோகிக்கத் தகுந்தவாறு அமைக்க வேண்டுமென்று சர்க்கார் கட்டுப்பாடுகள் செய்திருக்கிறார்கள். அநேக நகரங்களில் நகர சபைகளின் முயற்சியால் தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் புகையைக் குறைக்க தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. தொழிற்சாலைகளின் புகையைக் குறைப்பதனால் அநேக நகரங்களில் மக்களின் சுகாதாரநிலை முன்புபோல் அவ்வளவாகப் பாதிக்கப்படுவதில்லையாம். தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் புகையினால் அவதிப்படும் பொது மக்களைப் பாதுகாப்பதற்கு மாகாண சர்க்கார்களும் மத்திய சர்க்காரும் சட்டங்கள் கூட இயற்றவேண்டுமென்று கிளர்ச்சியுமிருந்து வருகிறது.

நாற்பதாயிரம் பேர்கள் நாகத்திற்குப் பலி

உலகத்தில் நாள்தோறும், நாற்பதாயிரம் பேர்கள் பாம்புக்கடியால் மாண்டுபோகிருர்களெனக் கணக்கிட்டிருக்கிருர்கள். பாம்புக்கடியால் ஏற்படும் சாவுகளின் பூரா விவரங்களும் கிடைக்க வழியில்லாததால், பாம்புக்கடி மூலம் மாள்வோரின் உண்மையான எண்ணிக்கையைக் கணக்கிடமுடியாது. இன்னும் ருஷ்யா, சீஞ, முதலிய கம்யூனிஸ்டு ராஜ்யங்களிலெல்லாம் பாம்புக்கடியால் சம்பவிக்கும் சாவுகளின் எண்ணிக்கை சரிவரத் தெரியவில்லை.

பாம்புக்கடியால் ஏற்படும் மரணங்களைப் பற்றி உலக சுகாதார ஸ்தாபனம் சமீபத்தில் ஒரு ஆராய்ச்சி நடத்தியது. இந்த ஆராய்ச்சியிலிருந்து பாம்புக் கடிக்குத் தக்க சிகிச்சை முறைகள் உலகத்தில் எல்லா தேசங்களிலும் இப்போதில்லை யென்று தெரிகிறது. இவற்றிற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்ய எல்லாத் தேசங்களின் சர்க்கார்களும் தீவிர முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று உலக சுகாதார ஸ்தாபனத்தார் அபிப்பிராயப் படுகிருர்கள்.

சென்ற ஐம்பது வருஷங்களில் இங்கிலாந்தில் ஏழேபேர்கள் தான் பாம்புக்கடியால் மரணமடைந் துள்ளனரென்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

ஆசிய நாடுகளில் வருஷந்தோறும் பத்தாயிரம் பேர்கள் பாம்புக் கடியால் மரணமடைகிருர்கள். தென் அமெரிக்காகாவில் மூவாயிரத்திலிருந்து நாலாயிரம்பேர்கள் வரையிலும், வட அமெரிக்காவில் முன்னூறிலிருந்து ஐநூறு வரையிலும், ஐரோப்பாவில் ஐம்பது பேர்களும், ஆண்டுதோறும் மரணமடைவதாகக் குறிப்புகள் காணப்படுகின்றன. ஆப்பிரிக்கா தேசத்திலிருந்தோ இவ்விஷயத்தைப் பற்றி ஒரு தகவலையும் காணேம். ஆனல் இங்கே சுமார் ஆயிரம் பேர்கள் மாண்டுபோகலாமென்று உலக சுகாதார ஸ்தாபனத்தார் யூகிக்கிருர்கள்.

சிருஷ்டியில் இரண்டாயிரத்து ஐநூறு ரகப் பாம்புகள் உள்ளனவாம். ஆனால் இவற்றில் இருநூறு ரகப் பாம்புகள் தான் விஷமுள்ளவையாகும்.

இந்தியாவில் பதினையாயிரம் பேர்கள் பாம்புக் கடியால் மரணமடைகின்றனர். நல்ல பாம்பு, விரியன், கண்குத்திப் பாம்பு முதலிய சில ரகங்கள் மூலம் தான் இந்தியாவில் மனிதர்களுக்கு மரணமேற்படுகிறது. கங்காநதி தீர வண்டல் பிரதேசத்தில் தான் இந்தியாவிலுள்ள பெரும்பாலான பாம்பு ரகங்கள் ஜீவிக்கின்றன. அயர்லாந்து, நியூஜீலந்து, க்யூபா, மடகாஸ்கர், ஹாவாய் முதலிய தீவுகளில் விஷமுள்ள பாம்புகளே கிடையாது. சிலி என்ற தென் அமெரிக்க பிரதேசத்திலும் விஷப் பாம்புகளே இல்லையாம்.

தேயு ஸ்தலம்



"உண்ணாமுலை யுமையாளொடு முடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன வருவித்திரள் மழலைமுழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ண மறுமே."

திருப்புகழ் பாடிய அருணகிரிநாத சுவாமிகளுடைய ஜனன பூமியாயும் பஞ்சபூத ஸ்தலங்களில் தேயு ஸ்தலமாகவும் விளங்குகிறது திருவண்ணாமலை க்ஷேத்திரம். சுவாமி அருணாசலேசுவரர், தேவியார் உண்ணாமுலையம்மை. பார்வதி தேவியார் தவஞ்செய்து சிவபெருமானுடைய இடப்பாகம் பெற்ற ஸ்தலம். ஆலயம் நான்கு பெரிய கோபுரங்களைக் கொண்டது. கிழக்குக் கோபுரம் 11 நிலைகள் கொண்டதும், 217 அடி உயரமுள்ளதுமாகும்.

கோயிலுக்கு வடகிழக்கு மூலையில் ஆயிரங்கால் மண்டபமும் அதற்கெதிரில் சிவகங்கை தீர்த்தமும், தீர்த்தத்தின் கரையில் சிவகங்கை விநாயகர் ஆலயமும் இருக்கின்றன. கிழக்குப் பக்கத்தில் உள்நுழையும்போது உள்ள கோபுரம்தான் வள்ளாள மகாராஜன் கோபுரம். இக்கோபுரத்திலிருந்து அருணகிரிநாதர் கீழேவிழ அவரைக் காப்பாற்றிய ஸ்ரீ முருகப்பெருமான் இக்கோபுரத்தின் வடபால் கோயில் கொண்டுள்ளார். அதற்கும் உள்நுழைந்ததும்

பிரம்ம தீர்த்தமும் சக்தி விலாச சபையும் உள்ளன. அதையடுத்து காணப்படுவதுதான் கிளிகோபுரம்.

இக்கோபுரத்தின் ஸ்தூபிக் கலசங்களில் தெற்கு மூலையிலிருப்பதில் கிளி உருவம் இருக்கிறது. அருணகிரியார் கிளியாக இருந்து கந்தரனுபூதி பாடியதை இந்தக் கிளி உருவம் நினைவூட்டுகிறது. கிளிகோபுரத்திற்கு எதிரேயுள்ள மண்டபத்தில் கார்த்திகைத் தீபத்தன்று மேற்கு முகமாய் முருகப்பெருமான் எழுந்தருளி தீப தரிசனக் காட்சி அளிக்கிறார்.

நினைக்குந் தோறும் நினைக்குந் தோறும் முத்தி யளிக்கும் இந்த நிர்மல க்ஷேத்திரம் சிவபெருமான் வள்ளாள மகாராஜனுக்குப் புத்திரராய்த் தோன்றி அனுக்கிரஹித்த ஸ்தலமாகும். யார் பரம்பொருள் என்பதில் தர்க்கஞ்செய்துகொண்டிருந்த பிரம விஷ்ணுக்களுக்கு முன் சிவபெருமான் அக்கினி மலையாய்த்தோன்றி அவர்கள் அன்னமாயும் பன்றியாயும் சென்று முடியையும் அடியையும் தேடிக் காணமல் அகந்தை தீர்ந்து திகைத்து நிற்க, தாமே பரம்பொருள் என்று ஸ்தாபித்த ஸ்தலம்.

இந்த ஐதிகத்தைக் கொண்டே இன்றும் பிரதி வருஷ கார்த்திகையின்போது உலகப் பிரசித்தமான தீபதரிசன உற்சவம் நடந்து வருகிறது.

மலைப்பிரதக்ஷிணம் எட்டு மைல் தூரம். வழியில் அநேக தீர்த்தங்களும் அணி அண்ணமலை என்னுந் தலமும் குகை நமசிவாயரது கோயிலும் உள்ளன.

அருணகிரிநாத சுவாமிகளுக்குத் தனிச்சந்நிதி இருக்கிறது. இவருக்கு அனுக்கிரகஞ்செய்த முருகக்கடவுள் கோயிலுக்குக் கிழக்கேயுள்ள ஒரு ஸ்தம்பத்தில் காட்சியளிக்கிறார். இதனால் இவருக்குக் கம்பத்திளையனார் என்ற பெயர் வழங்குகிறது.

(காளத்தி - நடேச முதலியாரின் ''இறைவனின் உறைவிடங்கள்'')



மனிதன் தன்மைக்கு அறிகுறிகள் அநேகம், ஒன்று முகத்திலுள்ளது. மற்றொன்று கையிலுள்ளது.

கையெழுத்தே தலையெழுத்து

●

ஒருவர் கையெழுத்திலிருந்து அவரைப் பற்றி என்னென்ன தகவல்கள் கண்டுபிடிக்க முடியும்? சிலர் கையெழுத்துக்கள் பார்வைக்கு அழகாயிருக்கும்; சிலருடைய கையெழுத்துக்கள் தெளிவாக, அதாவது நன்றாக வாசிக்கக்கூடியதாயிருக்கும். மற்றுஞ் சிலரின் கையெழுத்துக்கள் தலையெழுத்துப் போன்றது என்று வழங்கும் ரகத்தை சேர்ந்ததாகும். இந்த ரகத்தைச் சேர்ந்த கையெழுத்து சாதாரண மனிதர்களுக்குப் புரியாது. ஒரு அக்ஷரம் இன்னொரு அக்ஷரத்தைப் போன்றிருக்கும். சில அக்ஷரங்கள் என்னவென்று எழுதியவரேதான் கூறவேண்டியிருக்கும்!

கைகளில் உள்ள ரேகைகள் போலத்தான் ஒவ்வொருவரின் கையெழுத்தும் மாறுபட்டு இருக்கும். நிபுணர்களின் ஆராய்ச்சிப் பிரகாரம் ஒவ்வொருவர் கையெழுத்திற்கும் எழுதுபவரின் ஆரோக்கியம், குணதிசயங்கள், மனப்பான்மை முதலியவற்றைக் குறிக்கும் சக்தியுண்டு. ஒருவர் நல்லவரா அல்லது கெட்டவரா என்று கூட அவர் கையெழுத்தைப் பார்த்துக் கூறிவிடலாம்.

ஒருவர் எழுத்தாளரா, அல்லது கொலையாளியா, என்பதை அவர் கையெழுத்து சொல்லும். ஒருவர் சாந்த குணமுள்ளவரா அல்லது சஞ்சல மனமுள்ளவரா வென்பதையும் அவர் கையெழுத்து கூறும். ஒருவர் வியாதியஸ்தரா அல்லது குடிகாரரா அல்லது திடகாத்திரமுள்ளவரா வென்பதற்கெல்லாம் அவர் கையெழுத்தே தக்க அத்தாட்சியாகும்.

சமீப காலம் வரையில் வைத்திய நிபுணர்களுக்குக் கையெழுத்துக்கும் ஆரோக்கியத்திற்கும் சம்பந்தமுண்டு என்ற நம்பிக்கையில்லாமலிருந்தது; ஆனால் இப்போது அப்படியல்ல. பைத்தியத்தால் பாதிக்கப்பட்டவர்களை, பைத்தியம் எந்த அளவில் அவர்களைப் பாதித்திருக்கிறதென்பதை அவர்கள் கையெழுத்துகளிலிருந்து அறிந்துகொள்கிறார்கள். மூளைக் கோளாறு வியாதியால் பீடிக்கப்பட்டவர்களுக்குக் கொடுக்கும் மருந்துகளுடைய பலன்கள் அதிகரிக்க அதிகரிக்க அவர்கள் கையெழுத்துகளின் தெளிவு அபிவிருத்தியடையும்.

வைத்திய நிபுணர்கள் அவர்கள் அனுபவத்திலிருந்து கூறுவதென்னவென்றால் நாம் இழுக்கும் கோடுகள், சுழிகள், ராயஸங்கள் யாவும் நம் இஷ்டத்தைப் பொறுத்ததல்ல; ஆனால் அவை நம் ஆரோக்கியத்தைப் பொறுத்ததாகும்.

பேசும்பொழுது எல்லோருக்குமுள்ள சகஜமான அபிநயங்கள். அவரவருடைய மனத்தில் தோன்றும் விகாரங்களை வெளியாக்குவதுபோல் அவரவருடைய கையெழுத்தும் வெளியாக்குகிறது.

உங்கள் மனத்தில் எழும் எரிச்சல், ஆத்திரம், உற்சாகம் முதலிய உணர்ச்சிகளெல்லாம் உங்கள் கையெழுத்துகளிலும் பிரதிபலிக்கும்.

சில வருஷங்களுக்கு முன் ஒரு தம்பதிகளுக்கிடையே நிகழ்ந்த விரோதம் நிமித்தம் கணவன் மனைவியைப் பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலே தள்ளிவிட்டார். மனைவிக்குப் பைத்தியக்காரச் சின்னங்கள் சிறிதுமில்லாததால் ஆஸ்பத்திரி டாக்டர்கள் அநேகருக்குச் சந்தேகம் தோன்றியது!

அவள் பைத்தியக்காரி அல்லவென்பதற்கு போதிய அறிகுறிகளுமிருந்தன. இவற்றில் முக்கியம் அவளுடைய கையெழுத்துதான். பிறகு ஆஸ்பத்திரி டாக்டர்கள் அவளுடைய கணவனின் கையெழுத்தை சோதித்தார்கள். கணவனின் கையெழுத்து விளக்கியதென்னவென்றால் அவன் ஒரு பிடிவாதக்காரன் என்றும் அவன் மனத்தில் ஏதாவது தோன்றிவிட்டால் அதற்கு எதிராக எதையும் ஒப்புக்கொள்ளமாட்டான் என்பதுமாகும்.

கையெழுத்துப் பரிசோதனை நிபுணர்களுக்கு மனிதரின் கையெழுத்தைப் பார்த்து அவருடைய வரலாறுகளை ஒரே நிமிஷத்தில் கூறமுடியும். ஒரு திறமைவாய்ந்த உத்தியோகஸ்தர் தன்னிடம் வரும் கடிதங்களை தயக்கமின்றி வலுவான கோடுகளோடு கையெழுத்திடுகிறார். ஆனால் அந்த உத்தியோகஸ்தருடைய உதவியாளர் தன் கையெழுத்தைச் சற்றுத் தயக்கத்தோடு வெகு ஜாக்கிரதையாக, தெளிவாக இருக்கவேண்டுமே யென்ற அக்கறையோடு எழுதுகிறார். இவர் கையெழுத்தை ஒரு கணம் நோக்கினாலே இவருக்கு இவர் மேலதிகாரியிடம் எவ்வளவு பயமும் மதிப்பும் இருக்கின்றன வென்பது தெளிவாகும்.

ஒருவரின் கையெழுத்து அழுத்தமாய் இருந்தால் அவர் எல்லா விவகாரங்களிலும் தன் மனோசக்தியை திடமாகப் பிரயோகிப்பவரென்பது நன்கு புலப்படும். அழகாய் அமைந்த எழுத்துக்களை எழுதுபவரின் சிந்தனைகளும் அழகாய் உருவெடுக்கும். நான்கு திக்குகளிலும் ஓடும் கிறுக்கு எழுத்துக்களை எழுதுபவர்கள், மிக ஜாக்கிரதையாக கவனிக்கவேண்டியவர்களாவார்களென்பது நிபுணர்களின் அபிப்பிராயமாகும்.

ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு கையெழுத்து நிபுணரிடம் சில நபர்களின் கையெழுத்துக்களை போலீசார் அனுப்பி வைத்தனர். இந்தக் கையெழுத்துகளை எழுதியவர்களில் ஒருவர் கொலையாளி யென்றும் அவர் யாரென்று கண்டுபிடிக்க சற்று உதவுமாறு போலீசார் அந்த நிபுணரைக் கேட்டனராம். கையெழுத்துக்களைப் பரிசோதனை செய்து அவற்றில் ஒன்றை பொறுக்கி நிபுணர் இவ்வாறு கூறினார் :—

" இந்தக் கையெழுத்தைக் கவனியுங்கள். எவ்வளவு எழுத்துக்கள் அடித்து ஒன்றன்மீது ஒன்றாக எழுதப்பட்டிருக்கின்றன. கோடுகள் எங்கெந்த திசைகளை நோக்கி ஓடுகின்றன. இந்த எழுத்தில் திடமனப்பான்மை, தாக்குதல், கொடூரம், காட்டுமிராண்டித்தனம் முதலியவை யெல்லாம் நன்கு பிரதிபலிக்கின்றன. இந்தக் கையெழுத்தை எழுதியவர் தான் கொலையாளியாயிருக்கவேண்டு மென்று நான் திட்டமாய்க் கூறுவேன்." நிபுணர் குறிப்பிட்ட ஆளைப் போலீசார் பயமுறுத்திக் கேட்டவுடன் அவர் தான் குற்றவாளியென்று ஒப்புக்கொண்டார்.

முன்பக்கமாய்ச் சரிந்துள்ள எழுத்துக்கள் ஒரு மனிதனுக்குத் தன் இனத்தார், நண்பர்கள் மத்தியில் வாழவேண்டியிருப்பதையும், ஒரு தலைவனின் குணாதிசயங்களையும் குறிக்கின்றன.

எழுத்துக்கள் பின்னால் சரிந்தால் அசாதாரணமான தன்னடக்கத்தைக் குறிக்கிறது.

எழுத்துக்களும் எழுதும் வரிகளும் வலது பக்கமாய் மேல் நோக்கியிருந்தால் தன்னம்பிக்கை, குதூகலம், வாழ்க்கையில் உயரவேண்டுமென்ற ஆர்வம் இவற்றைக் குறிக்கின்றன.

கீழ்நோக்கிய வரிகளும் எழுத்துக்களும் அதைரியத்தையும் ஏமாற்றமடைந்ததையுங் குறிக்கின்றன.

நடைமுறையில் அபிநயங்கள் அதிகமாயுள்ளவர்களின் கையெழுத்தில் அலங்காரச் சுழிகளும் வளைவுகளும் ஏராளமாயிருக்கும்.

கொட்டை எழுத்துக்களை எழுதுவோருக்கு எந்த நிலைமையையும் எந்தச் சந்தர்ப்பத்திலும் மனக்கிலேசமின்றி சமாளிக்கச் சக்தியுண்டு.

தெளிவில்லாத எழுத்துக்களை எழுதுவோர்கள் திட்டவட்டமான பேச்சு நடவடிக்கைகள் இல்லாதவராவார்கள்.

இவ்வாறாக ஒருவர் கையெழுத்தில், அவர் வாழ்க்கைத் தரம், மனப்பான்மை, அவருடைய அபிலாஷைகள், அடைந்த ஏமாற்றங்கள் முதலிய தகவல்கள் கண்ணாடியில் முகம் தெரிவதுபோல் நன்கு பிரதிபலிக்கின்றன.

மனிதத்தன்மையில் தரம் குறையும் வழிகளில் முக்கியமான ஒன்று.

மிருகத்திலும் கேடுகெட்ட மனிதர் யார்?

●

தன்னுடைய கடமைகளைக் குறைவறச் செய்பவன் மனிதருள் மாணிக்கம் போன்றவன். மலை உச்சி எவ்வளவு உயர்ந்ததோ அத்தனைக்கு அத்தனை அதன் அடிவாரம் தாழ்ந்ததாகத்தான் இருக்க முடியும். இந்த உண்மையை அறிய அதிகச் சிரமம் தேவை இல்லை. இதேபோல், கடமைகளைக் கைவிட்டவன் மனித குலத்தில் தோன்றியவன் என்று சொல்வதற்கே அருகதை அற்றவன்.

'கடமை, கடமை என்று கண்ணை மூடிக்கொண்டு காரியங்களைச் செய்வது அறிவீனம். செய்கிற செயல்களின் உட்கருத்தை அறிந்துகொள்ளாமல் இயந்திரம்போல் காரியங்களைச் செய்வது அறியாமை' என்றெல்லாம் வாதம் செய்வர் சிலர். இந்த வாதத்தில் ஒரு பகுதி நியாயம் உண்டு. பொருளை அறிந்து கர்மாக்களைச் செய்வது சிலாக்கியந்தான். ஆனால் பொருள் தெரியவில்லை என்பதற்காகக் கர்மாக்களைக் கைவிடுதல் உசிதம் அன்று.

பசி எடுத்தவன் உணவைப்பெற முயற்சிகள் செய்யவேண்டும். முயற்சியின்றி சும்மா இருந்துகொண்டே பசி, பசி என்றால் உணவு கிட்டாது; பசி தீராது; கர்மாக்களின் உட்பொருளைக் காண ஆர்வமும் முயற்சியும் அவசியம். அவை சிறிதுமின்றி 'பொருள் தெரியவில்லை; அதனால் நான் கர்மாக்களைச் செய்யவில்லை. பொருள் தெரியாத கர்மாக்களில் எனக்கு நம்பிக்கை இல்லை'

என்பது விதண்டாவாதம். இயந்திர வாழ்க்கையை மேற்கொண்ட மனிதனுக்கு அலுப்பும் சலிப்பும் அதிகம் ஆகின்றன. அதனால் அவனுக்கு எந்த ஒரு நூதன விஷயத்திலுமே ஆர்வமும், முயற்சியும் இல்லாது ஒழிகின்றன. அப்படிப்பட்டவன் கர்மாக்களைப் பற்றின விவரங்களை அறிவது எங்ஙனம்?

மனிதனை மனிதன் ஏமாற்ற முயலலாம்; ஏமாற்றலாம், அதில் ஓரளவு வெற்றியைக்கூடக் கண்டுவிடலாம். ஆனால் பேராசை பிடித்த மனித உள்ளம் பரம்பொருளையுங்கூட ஏமாற்றிவிடலாம் என்று எண்ணுவது இருக்கிறதே, அந்த எண்ணம் மிகவும் பரிதாபகரமானது. ஏனெனில் மனிதனைப்போல் அன்று தெய்வம்; இது யாவரும் அறிந்த உண்மை. தெய்வம் என்றும் எங்கும் வியாபித்துக்கொண்டு எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு இருக்கிறது. ஜீவன், மனச்சாட்சி என்றெல்லாம் நம்மால் அடிக்கடி குறிப்பிடப்படுபவைகள், மரம், மண்போன்ற பொருள்கள் அன்று. ஜீவன் கடவுள், மனச்சாட்சி கடவுள், ஜீவனே மனச்சாட்சி. மனிதனுக்குள் உயிராக கடவுள் வாழ்கிறான். ஆலயம் எத்தனை புனிதமானதோ அத்தனை புனிதமானது உடல். அதை அறியாது அந்த உடலை அசுத்தங்களுக்கு உள்ளாக்குதல் அறிவீனம். ஆலயத்துள் சிலா ரூபத்தில் ஆண்டவன் வாழ்ந்தால் உடலுக்குள் உயிராக அவன் வாழ்ந்துகொண்டிருக்கிறான். உடல் பிறந்தது முதல் மறைந்துபோகும் வரையில் கடவுள் அந்த உடலுக்குள் வாழ்ந்துகொண்டு நம்முடைய ஒவ்வொரு செயலையும் பார்த்துக்கொண்டே இருக்கிறான். ஆகவே மனிதன், மனிதனுக்குத் தெரியாமல் செய்வதைக் கடவுளுக்குத் தெரியாமல் செய்ய முடியாது. அதை அறியாத மனிதன் மனிதனுக்குத் தெரியாமல் மறைவாகத் தவறுகளைச் செய்துகொண்டே போகிறான். அறியாதவன் செய்வது அதிசயம் அன்று; அறிந்தவனே கூடச்செய்கிறான். அப்படிச் செய்யும் தவறுகளில் மிகச் சாதாரணமானது கடமைகளில் வழுவுவது ஆகும்; கடமைகளை அறவே கைவிடுவது மிகச் சாதாரணமானது என்பது செயலில் மிகச் சுலபமானது என்பதைக் குறிப்பதாகும். ஆனால் தன்மையிலே இது தான் மிகமிக முக்கியமானது.

'பிரார்த்தனை செய்துவிட்டாயா?' என்று தகப்பன் கேட்கிறபோது, 'செய்துவிட்டேன்' என்று பிள்ளை சுலபமாகப் பொய்

சொல்லித் தகப்பனை ஏமாற்றிவிடலாம். ஆனால் தெய்வத்தை ஏமாற்றமுடியாது. அவன் அந்தப் பொய்யைச் சொல்கிறபோதே அவனுடைய உடலுக்குள் மறைந்திருக்கும் தெய்வம் அதைக் கேட்டுச் சிரித்துக்கொள்கிறது. அதை மனிதன் ஓரளவு உணரவே செய்கிறான். 'குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கிறது' என்பது இதற்குத்தான். மனச்சாட்சிக்குப் புறம்பாகச்செய்யும் எதுவும் பாவச் செயலாகவே முடியும்.

மக்கள் அனைவருக்கும் அவரவர்கள் மதப் பண்பாடுகளை அனுசரித்துக் கடவுளை வணங்குவதற்கு சில விதிகளும் பழக்கங்களுமுண்டு.

விஸ்தாரமாக விதிகளையும் வழக்கங்களையும் அனுஷ்டிக்காதவர்கள் இரண்டல்லது மூன்றுதடவைகள் கடவுள் வணக்கம் என்ற ஒரு அனுஷ்டானத்தையாவது கைக்கொள்ளலாமல்லவா? இந்த அனுஷ்டானங்களைக்கூட செய்யாவிட்டால் என்னஎன்ற கேள்விக்குப் பதில் உண்டு; ஆனால் மிக விரியும். மனிதனால் ஆக்கப்பட்ட சட்டம் மனிதன் செய்கிற தவறுகளுக்குத் தண்டனை அளிக்கிறது. அந்தச் சட்டத்திற்கு அடங்கி ஒழுங்காக நடந்துகொள்ளவேண்டும் என்று எண்ணுகிற மனிதன், அநேகமாக ஒழுங்காக நடந்துகொள்கிற மனிதன் அனுஷ்டானங்களைக் கைவிடுவதன் மூலம் தெய்வத்தினால் வகுக்கப்பட்ட சட்டங்களைப் புறக்கணிக்கிறான்.

குறித்த நேரத்தில் காரியாலயத்திற்குச் செல்லாவிட்டால், அங்கே சென்று உரிய அலுவல்களை ஒழுங்காகச் செய்யாவிட்டால் காரியாலயத்தின் அதிகாரி கோபிக்கிறான், எச்சரிக்கை விடுக்கிறான். தவறு அளவைக் கடக்கும் போது வேலையிலிருந்தே நீக்கிவிடுகிறான். அந்த நிலைக்குப் பயந்து, பயந்து மிக ஒழுங்காக நடந்துகொள்ளுகிற மனிதன் கேட்பார் இல்லை என்கிற எண்ணத்தோடு தனது ஆத்மார்த்தச் செய்கைகளில், கடமைகளில், தேவ கடன்களில் மண்ணைப் போடுகிறான்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்று குறள் கூறும் உண்மை இங்கே எண்ணுதற்குரியது. எப்பேர்ப்பட்ட தவறுகளுக்கும் கருணை பாலித்து மன்னிப்பு அருளும் கடவுள் நித்திய கர்மாக்களை விட்டவன்பால் தயையே காண்பிப்பதில்லை. தீர்த்தயாத்திரை போகா

விட்டால், தன்மதக் கோட்பாடுப்படியுள்ள விஸ்தாரமான அனுஷ்டானங்களைச் செய்யாவிட்டால் மனிதன் மனிதத்தன்மையினின்றும் கீழ் இறங்குவதில்லை. ஆனால் நித்திய கர்மாக்களை விட்டவனே மிருகத்தினும் கேடு கெட்டவனாகிறான். ஆம், மிருகத்தினும் கேடு கெட்ட நிலைதான். ஏனெனில் மிருகங்களின் போக்கு வரையறையற்றது என்று சொல்வதே தவிர அவற்றிற்கும் சில வரையறைகள் உண்டு; அவை அவற்றை மீறி நடப்பதில்லை மனிதன் தனக்குரிய வரையறையினின்றும் இழிகிறபோது அவன் மிருகங்களிலும் கேடுகெட்டவன் தானே?

நித்திய கர்மாக்களை விட்டவனுக்குக் கடவுளின் கருணை அடியோடு அற்றுவிடுவதால் அவனுக்குப் புகலிடமே இல்லை.

'நீங்கள் ஏன் தினந்தோறும் பிரார்த்தனை செய்வதில்லை.'

"நான் அந்தப் படிகளையெல்லாந்தாண்டி இன்னும் மேல் படியை எட்டிவிட்டேன்."

இது பிதற்றல். ஸ்வகர்மாவை விட்டவனுக்கு எந்தக் கர்மாவும் பலிப்பதில்லை. பலித்துவருவதாக அவன் எண்ணிவருவது வீண் பிரமை. ஆகாரம், விவகாரம், மானம், அவமானம், தூக்கம், விழிப்பு, நன்மை, தீமை ஆகியவற்றில் பற்றற்ற நிலையை எய்தியவனுக்குத்தான் மேற்கூறிய நிலை. மனித இச்சைகளில் புரள்பவன் இவற்றிலிருந்து விடுதலைபெறும் வரையில், மரணவாயிலை எட்டும் வரையில் நித்தியகர்மாக்கள் அவனை விடா; செய்தே தீரவேண்டும்.

"தினமும் ஒரு வேளையாவது கடவுள் பிரார்த்தனை செய்வதுண்டா?"

'எனக்கு ஏது ஸார் அதற்கெல்லாம் நேரம்?'

இரவும் பகலும் கூடிய இருபத்து நான்குமணி நேரத்தில் கடவுள் பிரார்த்தனை செய்ய அவகாசம் இல்லை. வயிறு புடைக்கச் சாப்பிட, பார்த்துப் பார்த்து, தடவித்தடவி, வழுவழுப்பாகச் சொந்தமாகவோ நாவிதனிடமோ க்ஷவரம் செய்துகொள்ள, கண்டோர் மயங்கவேண்டும் என்கிற ஆர்வத்தோடு நிலைக்கண்ணாடியின் எதிரே நின்று பார்த்துப் பார்த்து அலங்காரஞ் செய்துகொள்ள, கூலிக்காகப் பாடுபட்டு உழைக்க, மேலதிகாரியின்

தயவைப்பெற அடிக்கடி அவன் வீடு செல்ல, அவனோடு பேசிப் பேசி அவனைத் திருப்திசெய்ய, மனைவி மனங் கோணலாகாதென்று கடற்கரை, நாடகம், சினிமா, சங்கீதக் கச்சேரி முதலியவற்றுக்குச் செல்ல, நண்பர்களோடு வீண் அரட்டை அடிக்க ஆகிய அனைத்திற்கும் போதுமான அளவு நேரங் கிடைக்கிறது. தினசரி இரண்டு அல்லது மூன்று வேளைகளில் பத்து நிமிஷங்கள் வீதம் முப்பது நிமிஷங்கள் நித்திய கர்மாக்களுக்காகச் செலவிட அவகாசம் கிட்டுவதில்லை. உலகத்தின் மாபெரும் அதிசயங்களுள் ஒன்றாக இதை ஏன் குறிப்பிடக்கூடாது?

—"ஆஸ்திகன்"

A. K. SHERIFF

5/7, KALMANDAPAM ROAD

Rayapuram, Madras-13.

MANUFACTURER OF

READY MADE DRESSES
FIRST - CLASS CLOTHES
MADE OF SUPERIOR B. & C.
MATERIALS

Prices Moderate

தன்னுயிருக்குச் சமானம்

•

நாயையும் பூனையையும் வீட்டு மிருகங்களாய் வளர்த்து, அவற்றை மிகவும் அன்புடனும் ஆதரவுடனும் வைத்துக் கொள்வது நம் நாட்டில் சகஜம். ஆனல் தன் சொந்தப் பெற்றேர்களுக்காகவோ, சொந்தக், குழந்தைகளுக்காகவோ செய்வது போன்ற தியாகங்களையும் தொண்டுகளையுங் கூட இம்மாதிரி வீட்டு மிருகங்களுக்காகச் செய்வது மேல் நாட்டில் அடிக்கடி நிகழும் சம்பவங்களாகும்.

இங்கிலாந்தைச் சேர்ந்த ஒரு கிராமத்தில் ஒரு கிழவர் வசித்துக் கொண்டிருக்கிருர். இந்தக் கிழவர் அந்தக் கிராமவாசிகள் ஒருவரிடமும் பேசுவதுகூடக் கிடையாது. தன் வீட்டைவிட்டு வெளியே வந்து மற்றவர்களோடு கலந்துகொள்ளும் வழக்கமுமில்லை; தினந்தோறும் இரவுவேளைகளில் இவர் தன் தோட்டத்தின் ஒரு மூலையில் உட்கார்ந்துகொண்டு பிரார்த்தனை செய்வதைக் கிராமவர்சிகள் அனைவரும் கவனித்திருக்கிருர்கள். அந்த இடத்தில்தான் அவர் மிகவும் அன்புடன் நேசித்து வந்த ஒருநாய்க்குட்டியை அடக்கம் செய்யப்பட்டிருக்கிறது. இவரை சில வருஷங்களுக்கு முன்பு ஏதோ ஒரு குற்றம் புரிந்ததாகச் சிறையில் அடைத்தார்கள். இவரைச் சிறையிலடைத்த பின்னர் இவர் வசித்துவந்த வீட்டின் சொந்தக்காரி இவர் அன்புடன் வளர்த்து வந்த நாய்க்குட்டியை சிறைக்குக் கொண்டுவந்து இவரிடம் ஒப்படைத்துவிட்டாள். சிறையில் கைதிகள் வீட்டு மிருகங்களை வளர்ப்பது சட்ட விரோதமாயினும் இவர் ஒளித்து

வைத்திருந்த நாய்க்குட்டியைக் கண்டுபிடித்து சிறைக் காவலன் அதிகாரியிடம் புகார் செய்யாமல், நாய்க் குட்டியை ஒரு வீட்டில் வளருவதற்கு ஏற்பாடு செய்து விட்டான். இந்த நாய்க்குட்டி தினமும் சிறைவாயிலில் வந்து காத்திருக்கும். சிறை தண்டனை முடிந்ததும் ஒரு நாள் மாலையில் சிறைவாயிலில் இவருக்காகக் காத் திருந்த தன் நாய்க்குட்டியுடன், இவர் தன் வீட்டிற்கு வந்து சேர்ந்தார். பிறகு நாய்க்குட்டியைப் பிரியாமலே வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தார்.

நாய்க்குட்டி வயதடைந்ததால் இறந்துவிட்டது. அதன் சவத்தை அடக்கஞ்செய்த இடத்தில் பெற்றோர் களை அடக்கஞ்செய்த இடத்தில், பிரார்த்தனை செய்வது போல் இரவு தோறும் இவர் இன்னமும் பிரார்த்தனை செய்துகொண்டிருக்கிறார்.

இங்கிலாந்தில் இன்னொரு கிராமத்திலிருக்கும் ஒரு கிழவி, ஒருநாய், பூனை, கிளி, ஆகிய மூன்றையும் வெகு நாட்களாய் வளர்த்து வருகிறாள். இவள் இருக்கும் கிரா மத்தைவிட்டு கடலோரத்திலுள்ள ஒரு சுகவாசஸ்தலத் திற்குச் சென்று சிறிது காலமிருந்தால் தான் இவளுக் கிருக்கும் வியாதி குணமடையுமென்று டாக்டர் எச்சரிக்கை செய்தும் இந்த நாய், பூனை, கிளி இவற்றின் நிமித்தம் சுகவாசஸ்தலத்திற்குப் போகமலே இருக்கிறு ளாம். தனக்கே சாப்பாட்டிற்கு வழியில்லாமலிருந்தா லும் இந்தக் கிழவி இவற்றிற்காக வாரத்தில் சுமார் நாற் பது ரூபாய்கள் வரை, செலவு செய்கிறாள். இந்த மூன்று பிராணிகளைத் திருப்தியாகவும் குஷியாகவும் வைத்துக் கொண்டிருப்பதில் "நான் வயிறு நிறையச் சாப்பிட்டு விட்டு, நல்ல ஆடைகள் அணிவதைவிட அதிக மகிழ்ச்சி கொள்கிறேன்" என்று இவள் கூறுகிறாள்.

அமெரிக்காவில் ஒரு ஸ்திரீ தான் இறந்த பின்பு தன் நாய்க்குச் சகல வசதிகளுமிருக்க வேண்டுமென்ற கருத்தில், தன் பொருளைச் சாப்பாடு முதலியவற்றிற்குப் போதிய அளவு செலவிடாமலேயே இருந்தாள். இவள் இறக்கும்போது இவளிடமிருந்த 30,000 ரூபாய்களையும் தன் அருமை நாய்க்காக உயில் எழுதி வைத்தாள். அந்த உயில் பத்திரத்தில் நாய்க்குச் செய்யவேண்டிய வசதிகளைப் பற்றிக் கட்டுப்படுத்தி யிருந்ததென்னவென்றால், நாய்க்கு அடிக்கடி குளிக்க வசதி செய்வது, அதன் நித்திரைக்கு ஜமுக்காளம், கம்பளங்கள், வாங்குவது, வருஷந்தோறும் கிறிஸ்துமஸ் பண்டிகையை விமரிசையாகக் கொண்டாடுதல் முதலியவையாகும்.



ASOKA SCENTED BETELNUT POWDER

கொடிய குறும்பு

●

நியூயார்க் நகரத்திலிருந்து மெக்ஸிகோ நகரத்திற்குத் தினந்தோறும் செல்லும் ஆகாய விமானம் புறப்படத் தயாராயிருந்தது. விமானி, தன் ஆசனத்தில் அமர்ந்தாய்விட்டது. இன்னும் சில நிமிஷங்களில் விமானம் கிளம்பிவிடும். அந்தச் சமயத்தில் பதினைந்து வயதுள்ள ஒரு சிறுவன் விமான நிலையத்திற்கு ஓடோடியும் வந்தான். விமான நிலையத்தின் வாயிலில் நின்றிருந்த காவலாளி சிறுவனிடம் விமான டிக்கட்டைக் கேட்டான். அதற்கு சிறுவன் தன் கால்சட்டைப் பையிலிருந்து ஒரு துப்பாக்கியையெடுத்து "இதுதான் என் டிக்கட்" என்று காண்பித்து ஆகாய விமானத்திற்குள் நுழைந்தான். நேரே விமானியிடம் ஓடினன். அவன் கையில் துப்பாக்கி இருப்பதைக் கண்ட விமானி பயந்து தன் துப்பாக்கியை எடுத்துச் சிறுவனைச் சுட்டுக் கொன்றுவிட்டான். பிறகு நடந்த போலீஸ் விசாரணையில் இந்தச் சிறுவன் விமானியிடம் துப்பாக்கியைக் காண்பித்துப் பயமுறுத்தித் தன்னை அமெரிக்காவில் ஒரு நகரத்திற்குக் கொண்டுபோக முயற்சித்ததாக வெளிவந்தது.

சிறுவர்கள் கூட சிப்பாய்களைப்போல் துப்பாக்கிகளைப் பிரயோகித்து அக்கிரமங்கள் புரிவார்களா வென்று நாம் சந்தேகப்படலாம். ஆனல் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் இப்போது வளரும் சிறுவர்கள் அநேகர் காலிகளும், குண்டர்களுமாய் இருக்கிறர்களென்பதாக அநேக தகவல்கள் வந்துள்ளன.

சமீபத்தில் அமெரிக்காவில் ஐந்தாறு நகரங்களில் பள்ளி மாணவர்கள் ஏககாலத்தில் அநேக அக்கிரமச் செயல்களைச் செய்தார்களாம். ஒரு பள்ளிக்கூடத்தில் ஆறுவது மாடியிலிருந்த தண்ணீர் குழாய்களை யெல்லாம் திறந்து அந்தக் கட்டிடத்தை ஜலப் பிரளயத்திற் காளாக்கினராம். ஆசிரியர்கள் ஓய்வெடுக்கும் அறைகளிலுள்ள, நாற்காலி, மேஜைகளை யெல்லாம் உடைத்துவிட்டனராம். பள்ளியின் வாசகசாலையின் புத்தகங்களை யெல்லாம் கிழித்து எறிந்துவிட்டனராம்.

இன்னொரு பள்ளிக்கூடத்தில் ஒரு வகுப்பு அறையிலிருந்த மேஜை, நாற்காலி, பெஞ்சுகள் யாவையும் கொளுத்திவிட்டனராம். ஆசிரியர்களையும் அடித்தனராம். மற்றொரு பள்ளிக்கூடத்தில் மாணவர்கள் தங்கள் ஆசிரியர்களை அடித்து மூக்குகளையும் பற்களையும் உடைத்துவிட்டனராம்.

லண்டனில் சிறுவர்களுக்கென்றே பிரத்தியேகமாய் அமைக்கப்பட்ட ஒரு கிளப்புக்கு பள்ளி மாணவர்கள் சென்று அந்தக் கட்டிடத்திலுள்ள மரச்சாமான்கள் யாவையும் உடைத்து மற்ற அநேக பொருள்களையும் வெளியே தூக்கி எறிந்து அநேக ஆயிரம் பவுன்களுக்கு நஷ்டமாக்கிவிட்டனராம்.

பள்ளி மாணவர்கள் செய்யும் அக்கிரமங்களைப்பற்றி ஒரு நடவடிக்கையும் இந்தப் பள்ளிக்கூட அதிகாரிகள் எடுக்கவில்லையாம். அடிபட்ட ஆசிரியர்கள் தங்கள் தலைமை ஆசிரியரிடஞ் சென்று புகார் செய்வதற்குப் பயம். ஏனென்றால் மாணவர்களைக் குறித்துப் புகார்செய்தால் மாணவர்களை அடக்கும் சாமர்த்தியம் இவர்களுக்கு இல்லையா என்று தானே தலைமை ஆசிரியர் கேட்பார். தலைமை ஆசிரியர்களுக்கும் கல்வி இலாகா அதிகாரியிடம் இதைப்பற்றிக் கூறுவதற்குப் பயம். கல்வி இலாகா அதிகாரிகளுக்கோ, இம்மாதிரி அக்கிரமங்கள் நடக்கின்றனவென்று ஒப்புக்கொள்வதற்கே பயம். இப்படி ஒப்புக்கொண்டால் கல்வி கற்றுக் கொடுப்பதற்காக ஒரு இலாகாவே இருந்து என்ன பயன் என்ற கேள்வி தானே எழும்.

பயமற்றவர்கள், அக்கிரமங்கள் செய்யும் பள்ளி மாணவர்கள் மட்டும்தான். இவர்களுக்குத் தங்கள் பள்ளிக்கூட ஆசிரியர்களைக் கண்டால் பயமில்லை. கல்வி இலாகாவிடமும் சர்க்காரிடமும் பயமில்லை, தங்கள் குடும்பங்களுக்கும், தங்கள் நாட்டுக்கும், நன்மை புரியும் நல்ல மனிதர்களாக வளரவேண்டுமென்று அக்கறைகொண்ட அருமையாக பெற்றெடுத்த பெற்றோர்களிடமும் பயமில்லை. இப்படி ஒரு கொடிய துரதிருஷ்டத்திற்கு மேல்நாடுகள் ஆளாகிவிட்டது மிகவும் பரிதாபகரமானது தானே ?

எல்லோரும் இன்புற்றிருப்பதற்காக
ஓயாமல் உழைக்கும் மன்றங்கள்

வியாதிகளை விரட்டும் ஸ்தாபனங்கள்

•

ஐக்கிய நாட்டு ஸ்தாபனம் என்ற பெயரைக் கேட்டவுடன் நம் நாட்டாருக்கு காஷ்மீர் தகராறு தான் ஞாபகத்திற்குவரும். ராஜ்யங்களிடையேயுள்ள சச்சரவுகளை நிரந்தரமாக்கி உலகத்திற்கே நாசம் விளைவிக்கும் ஒரு ஸ்தாபனமாகும் என்று கூட ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தைச் சிலர் கண்டிக்கலாம்.

அரசியல் விவகாரங்களில் உலகத்திற்கு அதிகமான நன்மையை யளிக்காவிட்டாலும் வேறு துறைகளில் ஐக்கிய நாட்டைச் சேர்ந்த ஸ்தாபனங்களால் விளைந்துள்ளதும், விளைந்து கொண்டிருப்பதும், பிற்காலத்தில் விளையப்போவதுமான நன்மைகளுக்களவேயில்லை.

சிசுக்கள் பாதுகாப்புக்கென்றே பிரத்தியேகமாக உழைக்கும் ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தின் சிறந்த தொண்டுகளைப் பற்றி வாசகர்கள் முன் ஒரு இதழில் படித்தது நினைவிருக்கலாம். வேறு சில துறைகளில் பொது ஜன நன்மைக்கு மிகத் தீவிரமாக உழைக்கும் ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தைச் சேர்ந்த சில சங்கங்களின் தொண்டுகளைப் பற்றி இப்போது கவனிப்போம்.

தினந்தோறும் ரேடியோ சங்கீதத்தைக் கேட்போர்களின் காதில் சில கர்ண கடூரமான சப்தங்கள் அடிக்கடி விழுவதுண்டு. இவை பெரும்பாலும் உலகத்தில் அநேக ராஜ்யங்களில் சில சமயங்களில் பரவியுள்ள தொத்துவியாதிகளைப்பற்றி கப்பல்களுக்கும் ஆகாயவிமானங்களுக்கும் கொடுக்கும் எச்சரிக்கையாகும். ஒரு கப்பல் ஒரு துறைமுகத்திலிருந்து புறப்பட்டு மற்றொரு துறைமுகத்திற்குப்

போய்ச் சேரப் பிடிக்கும் தினங்களில் இக்கப்பல் அடையவேண்டிய தேசத்தில் ஏதாவது தொத்து வியாதிகள் பரவிக் கொண்டிருக்கலாம்.

இந்த நிலைமையைக் கவனிக்காமல் அந்த தேசத்திற்குக் கப்பல் சென்று கப்பலிலுள்ளவர்கள் தொத்து வியாதிகளால் பீடிக்காமலிருப்பதற்காகத்தான் இந்த எச்சரிக்கை கொடுக்கப்படுகிறது. ஆகாய விமானங்களுக்கும் எச்சரிக்கை கொடுப்பதும் இதே காரணத்தால்தான்.

இந்தஎச்சரிக்கை கொடுப்பது ஐக்கிய நாட்டு ஸ்தாபனக்கிளைகளில் ஒன்ருன உலக சுகாதார சங்கமாகும். (W. H. O.) இந்த ஸ்தாபனத்தில் 81 ராஜ்யங்கள் அங்கத்தினராயிருக்கின்றன. இதைச் சேர்ந்த 740 சுகாதார நிபுணர்கள் அநேக ராஜ்யங்களில் இந்தத் துறையில் ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கிருர்கள். இவர்கள் மூலம் அந்தந்த ராஜ்யங்களிலுள்ள சுகாதார நிலையைப் பற்றிய தகவல்கள் உலக சுகாதார மன்றத்திற்குக் கிடைக்கின்றன.

உலகத்திலுள்ள வெப்ப மண்டலப் பிரதேசங்களிலெல்லாம் கோடிக்கணக்கான மக்கள் மலேரியா ஜுரம், காலரா, பிளேக், க்ஷயம், இன்புளுயென்ஸா முதலிய கொடிய வியாதிகளுக்காளாகிக் கொண்டிருக்கின்றனர்.

மனிதர்களை இப்பிணிகள் பீடிப்பதற்கும், பரவுவதற்கும் ஆராய்ச்சி செய்து அவற்றிற்குத் தகுந்த நிவாரணங்களைத் தேடுகிருர்கள். தொத்து வியாதிகள் ஏதாவதொரு ராஜ்யத்தில் பரவத் தொடங்கியவுடனே அவற்றிற்குத் தேவையான மருந்துகளும் போதிய அளவுக்கு வைத்திய உதவியும் எந்த ராஜ்யத்தில் கிடைக்குமோ அங்கிருந்து விமானங்கள் மூலம் கொண்டுவரப்படுகின்றன.

மலேரியாவால் பாதிக்கப்பட்டிருக்கும் இந்தியா, கிரீஸ் பாகிஸ்தான், தாய்லாந்து முதலிய நாடுகளிலுள்ள கொசுக்களின் இருப்பிடங்களை விஷ மருந்துகள் மூலம் அழித்து வருகிருர்கள். இப்படிச் செய்ததால் கிரீஸ் தேசத்தில் மலேரியாவே ஒழிந்துபோயிற்று.

இந்தியாவிலும் வேறு அநேக ராஜ்யங்களிலும் பரவியுள்ள க்ஷயரோகத்தை உலக சுகாதார மன்றமும் உலக சிசு சம்ரக்ஷணை கழகமும் ஒன்று சேர்ந்து ஒழிக்க முயற்சித்து வருகின்றன. குழந்தைப்பருவத்திலேயே க்ஷயரோகத் தடுப்பு முறையான ஒரு இஞ்செக்ஷனை செய்வதன் மூலம் அநேக லக்ஷம் குழந்தைகள் இந்த ராஜ்யங்களில் பிற்காலத்தில் க்ஷயரோகத்திற்குப் பலியாகமாட்டார்கள்.

அநேக வெப்ப மண்டலப் பிரதேசங்களில் பரவியுள்ள ஒரு சரும தொத்து வியாதியிலிருந்தும் பென்ஸிலின் இன்செக்ஷன் மூலம் அநேக மக்களை இந்த ஸ்தாபனங்கள் காப்பாற்றுகின்றன. இந்தத் தொண்டில் முக்கியமான அம்சமென்னவென்ருல்

இந்த வியாதிகளால் பீடிக்கப்பட்ட ராஜ்யங்களிலுள்ள மக்களுக்கு, இந்த ரோகங்களைத் தீர்க்க மருந்துகளும் மருந்துகளைச் செலுத்துவதற்குப் போதிய அளவில் டாக்டர்களும் நர்ஸுகளும் மிகச் சொற்பச் செலவில் கிடைப்பதாகும்.

அநேக ராஜ்யங்களில் பரவும் தொத்து வியாதிகள்மூலம் பலியாகும் ஜனத்தொகை, ஒரு மகாயுத்தத்தில் மாண்டுபோகும் ஜனத்தொகையைவிட அதிகமாயிருக்கும். அதனால் வியாதி பரவும் காரணங்களை நன்ருக ஆராய்ச்சி செய்வது மிகவும் முக்கியமான விஷயம். இந்த முக்கிய ஆராய்ச்சிக்காகவே லண்டன் நகரத்தில் ஒரு கழகத்தை உலக சுகாதார ஸ்தாபனம் நடத்துகிறது. ஆராய்ச்சி நடத்தி ஆராய்ச்சியின் முடிவுகளை உலகமெங்கும் பரவச் செய்யஏற்பாடுகளும்செய்துவருகின்றனர் இந்த ஸ்தாபனத்தார்.

தேகத்தைப் பாதிக்கும் பிணிகளைமட்டும் ஆராய்ச்சி மூலமும் சிகிச்சை மூலமும் மக்களுக்கு நன்மை புரிவதோடு உலக சுகாதார ஸ்தாபனம் நின்றுவிடவில்லை. மதுபானத்தால் உலகமெங்கும் அளவற்ற தீங்கு விளைகிறது. இதற்கும் ஒரு நிவாரணம் தேட உலக சுகாதார ஸ்தாபனம் முயற்சிக்கிறது.

இயற்கையின் அதிசய லீலையைச் சற்றுக் கவனியுங்கள்! உலகத்திலுள்ள மக்களில் முக்கால் பங்கு விவசாயிகளாயிருந்தபோதிலும் உலக ஜனத்தொகையில் அரைப்பங்குக்கு மேல் அரைப் பட்டினிக்காளாகின்றனர். இதிலிருந்துவிவசாய முறைகளின் தரத்தை உயர்த்துவது எவ்வளவு முக்கியமென்பது தெரிகிறது. இதனால் இந்தத் துறைகளில் வேலை செய்வதற்காகவே உணவு—விவசாய ஸ்தாபனம் (F. A. O.) என்ற ஸ்தாபனமும் அமைந்துள்ளது.

இந்தக் கழகத்தின் முக்கிய வேலை எந்தெந்த ராஜ்யங்களில் எந்தெந்த தானிய ரகங்கள் உணவுப் பொருள்களாக உபயோகப்படுத்தப்படுகின்றன, இவற்றின் போஷாக்குச் சக்தியை எப்படி அதிகரிப்பது என்பது போன்ற அநேக அம்சங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்து தகுந்த முறைகளைக் கையாள்வதாகும். உதாரணமாக அரிசியை முக்கிய உணவுப் பொருளாக உபயோகிக்கும் ஜனத்தொகைக்கு இந்த ஆகாரம் மூலம் போதிய போஷாக்கு கிடைப்பதில்லை. இதனால் புஷ்டிச் சக்தி அளிப்பதற்கென்றே இந்த ராஜ்யத்து ஜனங்களுக்குச் சில தனி உணவுப்பொருள்களை அளிக்கவேண்டியிருக்கிறது. சில மலிவான மீன் ரகங்களில், சத்துள்ள உணவு அதிகமாக இருக்கும். அந்த ரக மீன்களைப் பற்றி ஆராய்ச்சி செய்து அந்த ராஜ்யங்களுக்கு உணவு, விவசாய ஸ்தாபனம் தகவல்களை அளிப்பதன்மூலம் அந்த ராஜ்யத்து மக்கள் நன்மையடைகின்றனர்.

நன்னடத்தைக் குறிப்புகள்

மேல் நாட்டார் வாழ்க்கைத் தகவல்களில், ஒரு சுவையான விஷயம் அவர்கள் சமூக விஷயங்களில் நடந்து கொள்ளவேண்டிய முறைகளாகும். நம் நாட்டிலும் பெரியோர்களிடமும், மற்றும் பெற்ரோர்களிடமும், நண்பர்களிடமும், பொதுவாக எல்லோரிடமும் நடந்துகொள்ளவேண்டியமுறைகளைப் பற்றி பெரியோர்களின் கட்டுப்பாடுகளும் உபதேசங்களும் உண்டு. ஆனால் இந்தக் கட்டுப்பாடுகளும் உபதேசங்களும் நம் மதங்களையும் ஆசாரங்களையும் சேர்ந்த அனுஷ்டானங்களாகும்.

ஆனால் மேல் நாடுகளில் சமூக விஷயங்களில் நடந்துகொள்ள வேண்டிய கட்டுப்பாடுகள் மதாசாரங்களைச் சேர்ந்ததல்ல. மத நூல்களில் இவற்றைப் பற்றிக் குறிப்புகளுமில்லாததால் சமூக விஷயங்களுக்குத் தனியாகச் சில நூல்களை இயற்ற வேண்டியதாயிற்று. சமூக விஷயங்கள் என்பதில் பெற்ரோர்களிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும். ஆசிரியர்களிடம் மதிப்புக் காண்பிப்பதெப்படி, புரோகிதரிடம் எப்படி பேச வேண்டும், அவருக்கு எப்படி கடிதம் எழுதவேண்டும், ராஜ்யத்து அரசரையோ ராணியையோ பார்க்க நேரிட்டால் அவர்களிடம் எப்படி நடந்து கொள்ளவேண்டும், காதலர்கள் எவ்விதம் நடந்துகொள்ளவேண்டும், எவ்வாறு ஒருவருக்கொருவர் கடிதமெழுதிக்கொள்ள வேண்டும், இவைபோன்ற நூற்றுக்கணக்கான அற்ப விஷயங்களும், பெரிய விஷயங்களும் சேரும்.

இவ்விஷயங்கள் சம்பந்தமான நூல்கள் இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் அநேகம் வெளிவந்துள்ளன. இதில் சில நூல்களை நூற்ருண்டுகளாகப் பொதுமக்கள் அணுவளவும் வழுவாமல் அனுசரித்தும் ஆதரித்தும் வருகிருர்கள்.

விக்டோரியா மகாராணி இங்கிலாந்தில் ஆட்சி புரிந்து வந்த போது வெளியான சமூக நன்னடத்தை நூல் (Book of Etiquette) ஒன்றில் அன்ருட அனுஷ்டானங்களைப் பற்றியும் சிறுமிகளின் அனுஷ்டானம் பற்றியும்வாழ்க்கை நடவடிக்கைகளைப் பற்றியும் கீழ்க்கண்ட

வாறு விரிவான உபதேசங்கள் உள்ளன.

ஸ்நானம்

எழுந்திருந்தவுடன் பூரணமாகக் குளிப்பது நலம். கண்களை மட்டும் சுத்தஞ் செய்துகொண்டால் போதாது. தினந்தோறும் ஒரு தடவை தேகம் முழுவதையும் சுத்தஞ்செய்து கொள்வது மிகவும் முக்கியம். இதற்கு ஒரு சொம்புத் தண்ணீருக்குமேல் தேவையில்லை.

மாதம் ஒரு தடவையாவது தலை ரோமத்தைச் சுத்தஞ் செய்யாமலிருக்கக்கூடாது. பிறவியிலேயே உங்கள் தலை ரோமம் எண்ணெய் பசையில்லாவிடில் கரடி நெய்யைத் தடவேண்டும். வாசனைத் திரவியங்களை உபயோகிக்காமலிருப்பது மிகவும் நலம்.

சரும பாதுகாப்பு

இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கொருமுறை அடுப்புக்கரியைப் பொடியாக்கி அதை பாலில் கலந்து தோல் மீது தடவினல் தோல் சுத்தமாகவும் பளபளப்பாகவுமிருக்கும்.

வணக்கஞ்செய்வது

ஒரு ஆண் வீட்டிற்குள் ஒரு ஜன்னல் அருகில் நின்றுகொண்டிருக்கும்பொழுது வீதியில் செல்லும் ஒரு பெண் சிநேகிதியைக் கண்டால் அவளுக்கு வணக்கஞ் செலுத்தக்கூடாது. ஆனல் வீதியில் செல்பவன் ஆணுயிருந்தால் ஜன்னல் அருகே நிற்கும் ஸ்திரீ அவனுக்கு லேசாக வணக்கஞ் செலுத்தலாம்.

சம்பாஷணை

நான்கு பேர்கள் கூடும் போது மிக ருசிகரமான விஷயத்தைப் பற்றிச் சம்பாஷிக்கக் கூடாது. ஏனெனில் இவற்றிலிருந்து தர்க்கங்கள் விளையலாம்.

சீட்டு விளையாட்டு

விளையாட்டின் கட்டுப்பாடுகளை மீறக்கூடாது. ஒருவரையும் ஏமாற்றக்கூடாது. இன்னொருவன் ஏமாற்றுவதைக் கண்டால் மிகவும் அமைதியான இரவில் அவன் தவறை அவனுக்குச் சுட்டிக்காட்டவேண்டும். ஆத்திரமும், கோபமும் அதிகமுள்ளவர்கள் சீட்டாட்டத்தில் கலந்துகொள்ளாதிருப்பது உசிதம்.

விவாகம்

செம்பட்டைத் தலை ரோமமுள்ளவர்களும் சிவப்பான முகம் படைத்தவர்களும் கறுத்த தலை ரோமமுள்ளவர்களைத்தான் மணந்துகொள்ள வேண்டும்.

பருத்த சரீரம் படைத்தவர்கள் மெலிந்த தேகம் படைத்தவர்களை மணப்பதே உத்தமம். மெலிந்த தேகம் படைத்தவர்கள் உருண்டை முகத்தையும் நேச மனப்பான்மையும் கொண்டவர்களைத்தான் மணஞ் செய்துகொள்ளவேண்டும்.

கணவர்களுக்கு

கணவர்கள் வீட்டைவிட்டு வெளியே செல்லும்போது மனைவிகளிடம் பிரியமான வார்த்தைகள் சொல்லிவிட்டுப் போக வேண்டும். ஏனெனில் வீட்டை விட்டு வெளியே சென்றவர் வீடு திரும்புவது திடமில்லையே!

ரயில் பிரயாணம்

கண்பார்வை சரியாயில்லாதவர்கள் ரயில் பிரயாணத்தின் போது படிக்கக்கூடாது. சுவாசக் கோளாறு உள்ளவர்களும் பிரயாணத்தின் போது பேசக்கூடாது.

வீதி மரியாதை

வீதியில் ஒரு பக்கத்திலிருந்து இன்னொரு பக்கத்திற்கு தாண்டும்போது ஸ்திரீகள் தங்கள் வலது கையால் ஆடைகளை உயர்த்திக்கொள்வது மரியாதைக் குறைவாகும்.

USE **BINNY'S COTSWOL**

For year - round comfort
Available in smart and attractive colours
An excellent material to keep you comfortable in any weather.

AVAILABLE WITH ALL GOOD CLOTH DEALERS.

Manufactured by :—

The Bangalore Woollen Cotton & Silk Mills Co., Ltd., Bangalore City.

Distributors :— **H. A. R. MOHAMED & SONS,**
6 - A, Godown Street, MADRAS - 1.

குருடு, செவிடு, ஊமை, முடம் போன்ற ஒரு துர்ப்பாக்கியம் தான் இனிமை யற்ற குரலும்.

குறையற்ற குரல் அளவற்ற அருள்

சிருஷ்டியில் சில மனிதர்களுக்கு அநேகவிதக் கோளாறுகள் ஏற்படுகின்றன. எல்லாவித அழகும் பொருந்திய ஒரு மனிதனுக்கு ஒரு கால் நொண்டியாக இருக்கலாம்; ஒரு கை முடமாக இருக்கலாம்; அல்லது ஒரு கண் குருடாயிருக்கலாம்; சிலருக்கு ஒரு கையிலோ காலிலோ ஆறுவிரல்களிருக்கலாம் இப்படி ஏதாவது கோளாறுகள் நேரிடுவதை நம் நாட்டில் துரதிருஷ்டமாகவோ, விகாரமாகவோ கருதுகிறார்கள்.

தேகத்திலுள்ள அங்கங்கள் யாவையும்போல் மிகவும் முக்கியமானது தான் ஒரு மனிதனின் குரலும். ஒரு மனிதனின் தோற்றத்திற்குப் பொருந்தாததாயிருக்கலாம் அவன் குரல். பார்வைக்குக் கவர்ச்சியான தோற்றமளிக்கும் ஒரு ஆணுக்கோ, அல்லது பெண்ணுக்கோ இனிமையான குரலிருக்குமென்று எதிர்பார்க்கிறோம். பேசும்பொழுது இந்த மாதிரி தோற்றமுள்ளவரின் குரல் கர்ணகடூரமாயிருந்தால் அதை கேட்பவருக்குச் சற்று வெறுப்புதான் உண்டாகும். முடமாயிருக்கும் கைகால்கள், குருடாயிருக்கும் கண் முதலியவற்றைப்போல இனிமையற்ற குரலும் கடவுளின் சிருஷ்டியே. இந்த உண்மையை தெரிந்தவர்கள்கூட ஒரு மனிதனுக்கு ஏற்ற குரலில்லாமலிருப்பதைப் பற்றி வருந்துகிறார்கள். மேல் நாடுகளில் இதை ஒரு பெருந்துர்ப்பாக்கியமாகக் கருதி நிவாரணங்களுக்குக் கூட ஏற்பாடுகள் செய்திருக்கின்றனர்.

சங்கீதத் துறையில் ஈடுபடுபவர்களுக்கும் நாடகத் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கும் தான் இனிமையான குரல் தேவை யென்று கருதுவது

தவரும். வாழ்க்கையை நடத்துவதற்காக மனிதன் எந்தெந்தத் துறைகளில் ஈடுபட வேண்டியிருக்கிறதோ அந்தந்தத் துறைகளுக்கெல்லாம் இனிமையான குரல் அவசியம்தான். இனிமையான குரலினால் நற்பலன்களுமுண்டு.

நிரந்தரமாய் மனிதர்கள் சந்தித்துக் கொண்டிருக்கும் வியாபாரத் துறையிலும், நோயாளிகளைத் தினந்தோறும் பரிசோதித்துக்கொண்டிருக்கும் டாக்டர்களுக்கும், கடைகளில் ஓய்வில்லாமல் பொருள்களை விற்றுக்கொண்டிருக்கும் கடைச் சிப்பந்திகளுக்கும், மாணவர்களுக்குத் தினந்தோறும் பாடங்களைக் கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்களுக்கும், இனிமையான குரல் ஒருபெரும் ஆஸ்தியென்றே கூறவேண்டும்.

மேல் நாடுகளில் இந்தத் துறைகளிலெல்லாம் ஈடுபடுபவர்களுக்கு தொழில் கற்றுக் கொடுக்கும் ஸ்தாபனங்களில் குரலுக்கு இனிமையளிக்கும் பிரத்தியேக பயிற்சிகளைக் கையாளுகிறார்கள்.

ஒரு மனிதனுடைய குரலில் நாம்என்ன எதிர்பார்க்கிறோம்? காதுக்கு இன்பம். இது இல்லாத குரலுடையவனைப் பற்றி மனத்தில் சற்று வெறுப்பு தோன்றுகிறது. சற்று வெறுப்பு தோன்றினால் அவனுக்கு நாம் அளிக்கும் மரியாதையின் தரம் குறையலாம். அவன் எந்த வேலைக்காக நம்மிடம் வந்தானோ அந்த வேலையை நாம் சரிவரச் செய்யாமலும் அவனை மகிழ்விக்காமலும் அனுப்பவேண்டுமென்ற எண்ணந்தான் நம் மனத்தில் தோன்றும்.

இத்தகைய துர்ப்பாக்கியத்திலிருந்து தப்பித்துக்கொள்ளும் வழி தான் குரலுக்கு இனிமையளிக்கும் பயிற்சிகள். பிரபல கவிஞர்களின் கவிதைகளை உரக்கப்படிப்பது, கடின வார்த்தைகளமைந்தசாஹித்தியங்களை அப்பியசிப்பது, சாதாரண சம்பாஷணைகளில் வார்த்தைகளை ஸ்பஷ்டமாக உச்சரிப்பது முதலியவை பயிற்சியின் அம்சங்களாகும். ஒருவரிடம் பேசும்போது அவரைப்பற்றி மனத்தில் பயமில்லாமலும் படபடப்பில்லாமலும் பேசவேண்டும். நமக்கு அநேக அசௌகரியங்களும், கஷ்டங்களுமிருக்கலாம். மற்றவர்களுக்கும் நமக்கிருக்கும் கஷ்டங்களோ அல்லது வேறு அசௌகரியங்களோ இருக்குமென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டால் மற்றவர்களைப் பற்றி பயமிருக்காது.

பயிற்சியினால் அடையும் பலனை சோதிப்பதற்கும் மேல் நாடுகளில் எற்பாடுகளிருக்கின்றன. ரேடியோ, கிராமபோன் முதலிய வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் கடைகளுக்குச் சென்றால் நம் குரலை ரிக்கார்டு செய்துவிடலாம். வீட்டிலேயே குரல்களை ரிக்கார்டு செய்யும்

இயந்திரங்களும் மலிவான விலைக்குக் கிடைக்கும். இம் மாதிரி ரிக்கார்டுகளிலிருந்து அவரவர்கள் குரல்கள் எத் தன்மையதா யிருக்கிறதென் பதை தெரிந்துகொள்ளலாம்.

குரலின் குறைகளை நிவர்த்தி செய்துகொள்வதற்கு வேறொரு வழியையும் பயிற்சி நிபுணர்கள் கண்டுபிடித்திருக் கிறார்கள். இது ஒரு மனித னின் நடையிலுள்ள குறைபாடு களை நிவர்த்தி செய்துகொள்வ தாகும்.

தேகத்தின் கனத்தை இரு கால்களும் சமமாகப் பகிர்ந்து கொள்ளும்படி செய்யவேண் டும். நடக்கும்போதோ நிற்கும் போதோ ஒரு பக்கம் சாய் வதும், பொதுவாக மனிதர்கள் நடையில் அழகுள்ளதென்பதை மறப்பதும் மனத்திற்குப் போதிய நிம்மதி யில்லாததற்கு அறிகுறிகள். குரலுக்கு இனிமை என்பதை நாம் அற்ப விஷய மென்று தள்ளலாம். ஆனால் மேல் நாடுகளில் இந்த விஷயத் தைப் பற்றி ஆராய்ச்சி செய்து இந்தக் குறையை எந்த அள விற்கு நிவர்த்தி செய்ய முடி யுமோ அவ்வளவுக்கு நிவர்த்தி செய்யும் வழிகளைக் கண்டுபிடிக் கும் வேலையில் கலாசாலைகள், உடற்கூற்று நிபுணர்கள் முத லியவர்கள் தீவிரமாக ஈடுபட் டிருக்கின்றனர். இவர்கள் ஆராய்ச்சியின் முடிவுகளும் கண்டறிந்த உண்மைகளும் பொதுமக்களுக்கு அளவற்ற நன்மையளித்துள்ளதென்று தான் தகவல்களிலிருந்து தெரி கின்றன.

எப்போதும் உற்சாகம் அளிப்பது
அசோகா சுகந்த பாக்குத்தூள்

[ஒரு சிறுவர் கதை]

சுண்டெலி சுண்டெலியாயிற்று

ஒரு பருந்திடமிருந்து தப்பித்துக்கொண்ட சுண்டெலி ஒன்று ஒரு சந்நியாசியிடம் அடைக்கலம் புகுந்தது. சந்நியாசி அந்தச் சுண்டெலிமீது இரக்கப்பட்டு தன்னுடைய யோக சக்தியால் அதை ஒரு சிறு பெண்ணாக மாற்றினார். இந்தப் பெண் சந்நியாசியின் ஆஸ்ரமத்திலேயே வளர்ந்து அழகிய பருவ மங்கையானாள். சந்நியாசி இந்தப் பெண்ணை மிகவும் பராக்கிரமசாலியான ஒருவனுக்கு மணஞ் செய்துவைக்க விரும்பினார். உடனே சூரியனை வரவழைத்தார். சூரியனிடம் "இந்தப் பெண்ணை நான் ஒரு நல்ல பலவானுக்கு மணஞ் செய்து கொடுக்க விரும்புவதால், நீ அவளை மணந்துகொள்" எனக் கூறினார்.

சூரியன், "ஒரு கணத்தில் என்னை மறைத்து விடும் மேகம் தான் என்னை விட மிகவும் பராக்கிரமம் வாய்ந்தவன். அவனே இவளுக்குத் தகுந்தவனென்று கூறவே, சூரியனை அனுப்பிவிட்டு சந்நியாசி மேகத்தை வரவழைத்தார்.

மேகம் "என்னைவிடக் காற்றுத்தான் அதிகப் பலசாலியாவான்; என்னை நினைத்த மாத்திரத்தில் ஆகாயத்தில் எங்கு வேண்டுமென்றாலும் அவன் இழுத்துச் செல்கிறான். அவனே இந்தப் பெண்ணை மணக்கத் தகுதியானவன்' 'எனக்கூறவே மேகத்தையும் அனுப்பிவிட்டு காற்றை வரவழைத்தார். காற்றிடம் நீ இந்தப் பெண்ணை மணந்துகொள்ள வேண்டும்" என்றார்.

காற்றோ "என்னைவிட மலை தான் அதிகப் பலம் பொருந்தியது. மலைகளை என்னால் அசைக்க முடியாதல்லவா? ஆகவே மலை தான் உங்கள் விருப்பத்திற்கு ஏற்றவன்" என்று கூறிற்று. சந்நியாசி ஹிமாலய பர்வதத்தையும் அழைத்து அவருடைய விருப்பத்தைக் கூறவே ஹிமாலயமோ "சுண்டெலிகள் தான் என்னைவிட அதிகப் பலம் பொருந்தியவை அவை என் போன்ற மலைகளைக் கூடக் குடைந்து விடுகின்றன அல்லவா" என்று கூறியது.

இவ்வாறு பதில்களைப் பெற்ற இந்தச் சந்நியாசி முடிவில் ஒரு

ஆண் சுண்டெலியைக் கூப்பிட்டார். அதனிடம் இந்தப் பெண்ணை மணந்துகொள்ளக் கோரினர்.

அதற்கு ஆண் சுண்டெலி "இந்தப் பெண்ணை நான் மணந்தால் என்னுடைய வீடான பொந்துக்குள் இவள் எப்படி நுழைய முடியும்? அதற்கு வழி உங்களால் செய்யமுடியுமானல் நான் இந்தப் பெண்ணை மணஞ் செய்துகொள்கிறேன்" என்றது. உடனே சந்நியாசி மறுபடி அந்தப் பெண்ணை சுண்டெலியாக்கி விடுவதுதான் தகுந்த வழி என்று தீர்மானித்து அவளைச்சுண்டெலியாக்கி அதை ஆண் சுண்டெலியோடு அனுப்பிவிட்டார்.

வைத்தியருக்கு வைத்தியம்!

ரயில் வண்டியில் பிரயாணஞ் செய்துகொண்டிருந்த இருவர்களில் ஒருவர் ஜலதோஷத்தினல் பாதிக்கப்பட்டிருந்ததால் சதா மூக்கைச் சிந்திக்கொண்டும் தும்மிக்கொண்டுமிருந்தார். இன்னொரு பிரயாணி மிக அக்கறையோடு "உங்கள் ஜலதோஷம் மிகவும் கடுமையாயிருக்கும் போலிருக்கிறதே" என்ருர்.

ஜலதோஷக்காரர் "ஆம்" என்று மூக்கைச் சிந்தியவாறே பதிலளித்தார். மற்றவர் பின்னும் தொடர்ந்து "ஜலதோஷத்திற்கு நல்ல மருந்து வெந்நீரில் உப்பைப்போட்டு உட்கொள்ளவேண்டும். நிறைய ஆரஞ்சு ரசம் அருந்தவேண்டும். இரவு நித்திரைக்கு முன்பு கள்ளைச் சூட்டோடு அருந்தவேண்டும். இப்படிச் செய்தால் ஜலதோஷம் உடனே நின்றுவிடும்" என்று யோசனை கூறினர். ஜலதோஷக்காரர் தும்மியவாறே இதற்கு நன்றி கூறினர்.

ரயிலை விட்டு இறங்கும்போது யோசனை கூறியவர் "நான் இந்த ஊரில் மளிகை வியாபாரஞ் செய்கிறேன்" என்று கூறினர். ஜலதோஷக்காரர் "நான் தான் பக்கத்து ஊரில் பிரபல டாக்டரான மார்த்தாண்டம்" என்று பதிலளித்தார்.

சர்க்காரும் பட முதலாளிகளும் மற்றுமுள்ள பிரமுகர்களும் கவனிக்க வேண்டிய ஒரு முக்கிய விஷயம்.

சிறுவர்களுக்குச் சினிமா இல்லை

●

இந்தியாவிலுள்ள எல்லா பிரபல பத்திரிகைகளும் மாத, வார சஞ்சிகைகளும், பாலர்களுக்கென்று ஒரு தனிப் பகுதி நடத்துகின்றன. புத்தகப் பதிப்பாளர்களும் இலக்கிய வியாபகர்களும், இந்த 'ஜூனியர்' ஜனசங்கத்தின் அங்கத்தினர்களுக்கு காட்டவேண்டிய சலுகையை நடைமுறையிலும் காட்டிவருகின்றனர். பாலர்கள் கல்விமுறையிலும், கலை வளர்ச்சியிலும் அச்சிட்ட புத்தகங்கள் தங்கள் வேலையைச் செய்யும் பொழுது, பேசும் படங்களும். சலனப்படங்களும் இச்சிறுவர்கள் விஷயத்தில் அவ்வளவு அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை. பேசும் படங்களுக்குத்தான், போதனை முறைகளையும் பொழுதுபோக்கும் வேடிக்கைகளும் ஒன்ருகப் பிணைத்து, சிறுவர்களுக்கு ஒரு திரட்டாக அளிக்கும் சக்தி உண்டென்று கூறலாம். வேறு எந்த சாதனத்திற்கும் இம்மாதிரி சக்தி கிடையாது.

நம் அகில இந்திய சினிமா தொழில், உலகச் சினிமாதொழிலில் இரண்டாவதாகக் கருதப்படுகிறது. ஆனல் இத்தொழிலிஞல் இந்தியச் சிறுவர்களுக்காக எடுக்கப்பட்ட படங்களை விரல் முனையில் எண்ணிவிடலாம். சிறுவர்களுக்காக தனிப்பட்ட முறையில் எடுக்கப்பட்ட படங்கள் மிகக் குறைவாக இருப்பதஞல், சிறுவர்கள்வீட்டில் சோம்பேறிகளாய் உட்கார இஷ்டமில்லாமல், பெரியவர்கள் பார்க்கவேண்டிய படங்களை, தாய் தந்தையர்களுக்குத் தெரியாமல் பார்த்துவிட்டு வருவது சகஜமாகிவிட்டது.

அமெரிக்காவில் ஒவ்வொரு வாரத்திலும் 3000 சினிமா தியேட்டர்களில் சிறுவர்களுக்காக, அவர்கள் மனப்பான்மைக்கேற்ற படங்களாக காட்டப்படுகின்றன. சிறுவர்களுக்கு ஏற்றதா என்பதை ஒரு சங்கம் கடுமையாகக் கண்காணிக்கின்றது. பிரிட்டன் போன்ற

தேசங்களில் 100-க்கு 95 வீதம் சினிமா தியேட்டர்களில், சிறுவர்களுக்காக வாரத்தில் ஒரு முறை, அவர்கள் ரசிக்கும்படங்கள் காண்பிக்கப்படுகின்றன. அறிவு புகட்டும் விதத்திலும் பொழுது போக்கும் விதத்திலும் இந்தியாவில் பேசும் படம் பிடிப்போர் சிறுவர்களுக்கு ஒன்றுமே செய்யவில்லை எனக்கூறவாம்.

இந்தியாவில் சுமார் 3000 சினிமா தியேட்டர்கள் இருக்கின்றன. இவற்றிற்கு வருஷத்தில் 6 கோடி ஜனங்களுக்கு மேல் விஜயஞ்செய்கின்றனர். இதில் நூற்றுக்கு 10 வீதம், அதாவது 60 லக்ஷம் சிறுவர்கள் பேசும் படங்களைப் பார்க்கின்றனர்.

இந்த 60 லக்ஷம் சிறுவர்கள், பெரியோர்கள்மட்டும் பார்க்க வேண்டிய படங்களையும், பெரியோர்கள்கூடப் பார்க்கத்தகாத ஆபாசப் படங்களையும் பார்க்க வேண்டியதாகிறது.

வருடத்தில் சராசரி 300 முதல் 320 வரை புதிய படங்கள் வெளிவந்தும் அவற்றில் குறைந்தது 30 படங்களாவது சிறுவர்களுக்காக இல்லாததற்குக் காரணம் இந்தியசர்க்கார், மாகாண சர்க்கார்கள் கல்வி அதிகாரிகள், இந்திய சினிமாத் தொழில் முதலாளிகள் முதலியோர் இந்த விஷயத்தில் இதுவரை கவனஞ் செலுத்தாமலிருந்ததுதான்.

இந்திய சினிமாத் தொழிலுக்கு சாதகமாக பல யோசனைகள் கூற சிலர் முன்வந்துள்ளனர். பத்திரிகைகள், சிறுவர்களுக்கு ஆதரவு கொடுக்கின்ற மாதிரி சினிமாப் பட முதலாளிகள் ஆதரவு கொடுக்காமல் இருப்பதற்குக் காரணம் அவர்களுக்கு ஏற்படும் லாபம் இல்லாமையும், அதிகச் செலவுமே யாம். லாபமில்லாத வேலைக்கு எந்த முதலாளி பணத்தை அள்ளிக்கொடுப்பான்? அதுவுமல்லாமல் அகில இந்திய முறையிலே எந்த பாஷையில் சிறுவர்களுக்கு மட்டும் படத்தை தயாரிப்பது.

சிறுவர்கள் கொடுக்கும் பணத்தைக்கொண்டு மாத்திரம் முதலாளிகளுக்கு, அவர்கள் எதிர்பார்க்கும் லாபம் கிட்டுமா? படம் ஆங்கில பாஷையில் எடுக்கக்கூடாது. அப்படி எடுத்தால் இந்தியச் சிறுவர்களில் அநேகருக்கு புரியாமல் போய்விடும். அந்தந்த மாகாண பாஷையை படம் எடுப்பதற்கு உபயோகித்தால், இதர மாகாணங்களில் செல்லுபடி ஆகாது போய்விடும். கண்டிப்பாய் முதலாளிகளுக்கு நஷ்டத்தை உண்டாக்கும். ஹிந்தி பாஷையை அகில இந்தியா முழுவதும் பள்ளிக்கூடங்களில் கற்றுக்கொடுக்கும் வரையில் ஹிந்தி பாஷையில் படம் சிறுவர்களுக்கு எடுக்க முடியாத நிலைமையில் இருக்கிறது. ஆனால் ஹிந்தி பாஷையில் படம் எடுத்தால், ஹிந்தி தெரிந்த, தெரியாத

மாகாணங்களில் கூட அதிகக் கிராக்கியும் வரும்படியும் இருக்கும்.

ஆனல் ஒரு பட முதலாளியாவது, சிறுவர்களுக்காக, அவர்கள் ரசிப்பதற்காக படம் எடுக்கத் தைரியத்துடன் முன்வரவில்லை. பாஷை கஷ்டத்தை நிவர்த்தி செய்துகொண்டாலும் கூட இதர கஷ்டங்களும் இருக்கின்றன. பட விநியோகஸ்தர்களும், தியேட்டர்காரர்களும் ஒரு ஒற்றுமை மனப்பான்மையுடன், பாலர்களுக்காக குறைந்த கட்டணத்துடன் படம் பார்க்க அனுமதிக்கவேண்டும். காலஞ் செல்லச் செல்ல சிறுவர்கள் அதிகப்படியாக படம் பார்க்க வருவார்கள். அப்பொழுது எல்லோருக்கும் நல்ல வருவாய் கிடைக்கும்.

இப்பொழுது இருக்கும் நிலைமையில் யார் படம் பிடிக்க முன்வரவேண்டும்? இங்கே சர்க்கார் தங்கள் ஊழியத்தைக் காண்பிக்க வேண்டும். நல்ல செல்வாக்குள்ள மாகாண சர்க்கார்களும், மத்திய சர்க்காருடன் சேர்ந்து 'பிலிம் டிவிஷன்' மூலமாக, சிறுவர்களுக்கேற்ற படம் பிடிப்பதற்கு உதவிசெய்யவேண்டும். அப்பொழுது லாபங் கருதுகின்ற விநியோகஸ்தர்களும், படம் காட்டுபவர்களும் முன் வருவார்கள். ஆனல் தயாரிக்கும் படங்கள் முதல் தரமாக இருக்கவேண்டும். சிறுவர்களுக்கென்று ஒரு நல்ல படம் எடுக்கப்பட்டு அது சினிமா உலகில் பரவ ஆரம்பித்துவிட்டால் சினிமா பார்க்காத சிறுவர்கள் கூட படம் பார்க்க ஆரம்பித்து விடுவார்கள். படித்த பெற்றோர்கள் அம்மாதிரி போதனா முறையில் எடுக்கப்பட்ட படத்திற்கு தங்கள் மக்களை அனுப்பிவைக்கத் தவறமாட்டார்கள். பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் கூடத் தங்கள் பள்ளிப்பிள்ளைகளை படம் பார்க்க அழைத்துச் செல்வார்கள்.

இந்தியக் கல்வி அதிகாரிகள், நல்ல நிலையிலுள்ள பாடசாலைகளிலும், கலாசாலைகளிலும், படம் காண்பிக்கும் ப்ரொஜக்டர்கள்(Projectors) வாங்கி உபயோகிக்குமாறு வற்புறுத்த வேண்டும். மத்திய சர்க்காரின் கல்வி இலாகா, இப்பொழுது "கேட்பது பார்ப்பது" (Audio-visual Education) என்ற போதனா முறையின் கீழ் ஒரு திட்டம் வகுத்திருக்கின்றனர்.

அத்திட்டத்தின் கீழ் "மத்திய பிலிம் லைப்ரரி" ஒன்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். படம், பிலிம்கள், "டாக்குமெண்டரி" படங்கள் முதலியவைகளை பாடசாலைகளுக்கும் ஜன சமூக நல ஊழியர்களுக்கும், விநியோகம் செய்கின்றார்கள். இப்பொழுது உபயோகத்திற்கு கொடுக்கப்படும் படங்கள், பிலிம்கள் முக்கால்வாசிக்குமேல் எல்லாம் அமெரிக்க, பிரிட்டிஷ் தயாரிப்பாகும். ஒரே அளவில், இந்நாடு

கள் குழந்தைகளுக்குத் தயாரிக்கும் படங்கள் போற்றத் தகுந்தவையாகும்.

ருஷ்யாவில் படம் பிடிக்கும் தொழில்கள்யாவும் சர்க்காரைச் சார்ந்ததாகும். தனிப்பட்ட முதலாளிகள் லாபத்தை அமோகமாக எதிர்ப்பார்க்கும் விநியோகஸ்தர்கள் அங்கே கிடையாது. ஆகையால் சிறுவர்களுக்காக அநேக நல்ல படங்களை ருஷ்ய சர்க்கார் தயார் செய்கின்றனர்.

நம் சிறுவர்கள்சமூகத்தையும் அவர்கள் நலனையும் நினைத்து இந்திய படமுதலாளிகள், மத்திய, மாகாண சர்க்கார்களின் ஆதரவினாலும், கல்வி நிபுணர்களின் உதவியையும் கொண்டு, சிறுவர் சமூகத்திற்கு ஏற்றபடங்களை எடுத்தால், நம் நாட்டுச் சிறுவர்களுக்கு அவர்கள்பெரியதொரு சேவை செய்தார்களென்று கருதலாம்.

—எம். கே. எஸ்.

மாடுகளுக்கும் மண்டைக்கிறுக்கு !

வீண் ஜம்பமும் பகட்டும் மனிதர்களின் சுபாவத்தைச் சேர்ந்ததல்ல. இந்தத் துர்க்குணம் வேறு ஜீவராசிகளையும் பீடித்துள்ளதாம்.

விவசாயப் பண்ணைகள், கால் நடைப் பண்ணைகள் முதலியவற்றிலுள்ள கால்நடைகளின் நடத்தையைப் பற்றி ஆராய்ச்சி நிபுணர்கள் பால் பண்ணைகளிலுள்ள பசுக்கள் தனிப்பட்டவர்களிடமிருக்கும் பசுக்களை அவமதிப்பது சகஜம் என்று கூறுகிறார்கள். பண்ணைப் பசுக்கூட்டத்தில் எந்தப் பசு நீண்டகாலமாயிருந்திருக்கிறதோ அந்தப் பசு தான் மற்றபசுக்களின் ராணி. இந்த ராணியைவிட வயதில் முதிர்ந்ததோ அல்லது பால் அதிகமாய்க் கறக்கும் பசுக்களோ இந்தப் பண்ணையில் சேர்ந்தாலும் அவற்றிற்கு மதிப்புக் கிடையாது!

கால் நடைகளிடையே இருக்கும் ஜம்பம் போன்றே மற்ற விலங்கினங்களுக்கும், பறவையினங்களுக்கும் ஜம்பம் உண்டாம். ஒரு பறவையினத்தில், சில பறவைகள் தான் மற்ற பறவைகளை கொத்தலாம். கொத்த உரிமையில்லாத பறவைகள் மற்ற பறவைகள் கொத்துவதைப் பொறுத்துக் கொண்டிருப்பதுதான் நியதி. கோழி வர்க்கத்திலும் இந்த சுபாவமுண்டு. ஒருவர் மற்றவரை அடக்கியாளும் தன்மை மனிதர்களுக்கிடையேயுள்ளது போலவே மீனினங்களிலும் ஆமையினங்களிலும் கூட உண்டு.

பிற நாட்டுப் பழமொழிகள்

காலையில் மலர்ந்த மலர் மத்தியானம் வாடிவிடுகிறது.

[அதாவது பருவத்திற்கு முன் முதிரும் குழந்தை பருவமடைவதற்கு முன்பே கிழமாகிவிடுகிறது.]

★ மௌனமே விவேகத்தின் சிகரம்.

★ பெருந்தன்மை யுடையவன் பாரபட்சமற்ற நியாய முடையவன். பெருந்தன்மையில்லாதவன் நியாயமற்ற பாரபட்ச முடையவன்.

★ உடைந்த கண்ணாடி உபயோகமற்றது.

[அதாவது தீய மனம் உண்மையைப் பிரதிபலிக்காத கண்ணாடி போன்றது. தவறான உருவங்களைக் காட்டும் கண்ணாடி இது.]

★ பாம்பின் நடவடிக்கை பாம்புக்குத் தான் தெரியும்.

[அதாவது ஒரு திருடனின் சூழ்ச்சி இன்னொரு திருடனுக்குத் தான் தெரியும்.]

★ சுவர் மறைவிலிருப்பவருக்குச் சுவரேதான் தெரியும்.

[அதாவது 'புத்தகப் புழு'க்கள் அனுபவமற்றவர்கள்.]

★ புத்தரை நரகத்தில் கண்டதுபோல்.

[அதாவது கடுந்துயரத்தில் மூழ்கிக்கிடக்கும் போது எதிர்பாராத உதவி கிடைத்ததுபோல்.]

★ வாயால் பேசுவோர்கள் கையால் அடிக்கமாட்டார்கள். கையால் அடிப்போர்களுக்குத் தோல்வியில்லை.

★ வாயிலே தேன்; கையிலே வாள்

[அதாவது உதட்டிலே புன்னகை; உள்ளத்திலே பகை.]

★ தன் செய்கை தன்னையே சேரும்

[அதாவது தன்வினை தன்னைச்சுடும்.]

கொரியா, ஜப்பான் தேசங்களில் வழக்கத்திலுள்ள வசனங்கள்.

ஒரு பழங்கால ஜப்பானியக் கதையிலிருந்து—

பீதியளிக்கும் பறவை

காக்கை கத்தினால் வீட்டுக்கு விருந்து வரும் என்ற நம்பிக்கை நம் நாட்டில் சகஜம். காக்கை வலமிருந்து இடம் பறக்கும் போது வீட்டிலிருந்து புறப்படுவதற்கு நல்ல சகுனமென்றும் சொல்வார்கள். ஜப்பானிலோ காக்கைகளைப் பற்றிப் பொதுவாக வெறுப்பும் பயமும் தான் குடிகொண்டுள்ளது. காக்கையைக் கண்ணால் காண்பதே ஒரு அபசகுனம். தீங்கு ஏதாவது நேரிடுமென்பதற்கு காக்கை தரிசனம் முன்னறிவிப்பாகும்.

காக்கை கத்துவதைக் கேட்டால், கேட்பவர்களுக்கு மரணஞ் சம்பவிக்கும் என்ற ஒரு நம்பிக்கையுமுண்டு. ஆனால் காக்கையின் சித்திரத்தை காகிதத்தில் அச்சடிப்பதை நம் நாட்டில் ஸ்ரீராமஜெயம் என்று அச்சடித்து வைத்துக்கொள்வது போன்று ஒரு சுபச் சின்னமாகக் கருதுகின்றனர். காக்கையின் சித்திரத்தை நூற்றுக்கணக்காய் ஒரு காகிதத்தில் அச்சடித்து வீட்டில் வைத்திருந்தால் அந்த வீட்டிற்குத் திருடர்களும், துஷ்டர்களும் வரமாட்டார்களாம்.

நம் நாட்டில் பிரமாணஞ் செய்வதற்கு, கீதையையோ, கிறிஸ்துவ வேதத்தையோ, அல்லது குர்ஆனையோ உபயோகிப்பதுபோல் காக்கையின் சித்திரம் அச்சடித்த காகிதத்தை ஜப்பானியர்கள் உபயோகிக்கின்றனர். ஆனால் ஜப்பானில் பிரமாணம் எடுப்பவர்கள் காக்கையின் சித்திரம் அச்சடித்த காகிதத்தை தலைமீது வைத்

துக் கொள்வதில்லை. காகிதத்தை எரித்து அதன் சாம்பலை விழுங்கி விடுகிறார்கள். இந்தச் சாம்பலை விழுங்கியவர் சொல்லும் வார்த்தைப் பொய்யாயிருந்தால் காக்கை அவரை விழுங்கிவிடுமென்பது பொதுவான நம்பிக்கை.

இன்றைக்கும் ஜப்பான் தேசத்துக் கிராமங்களில் ஏதாவது விலை உயர்ந்த பொருள்கள் திருட்டுப் போனல் திருடனைப் பிடிக்கக் கையாளும் வழி, சந்தேகப்பட்டவர்களை காக்கையின் சித்திரம் அச்சடித்த காகிதச் சாம்பலை விழுங்கச் சொல்வதுதான். கிராமங்களில் மூடநம்பிக்கை மிகவும் சகஜமானதால் அநேக திருடர்கள் சாதாரணமாகத் தாங்கள் களவாடியதாக ஒப்புக் கொண்டு விடுவார்கள். திருடவில்லை என்று பொய் கூறி இந்தச் சாம்பலை விழுங்குபவர்கள் இரத்தமாக வாந்தி யெடுப்பார்களாம்.

ஒருநாள் ஒரு பிரபு ஏராளமான பணத்தோடு ஒரு கடைக்கு வந்தாராம். தான் எடுத்துவந்திருந்த பணத்தை கடையில் வைத்துவிட்டு மறதியாகச் சென்றுவிட்டார். சிறிதுநேரங் கழித்து தன் பணத்தைத் தேடிக்கொண்டு பிரபு மீண்டும் இந்தக் கடைக்கு வந்தார்.

கடைக்காரர், பிரபுவின் பணத்தைத் தான் காணவில்லையென்றும் அதைப் பற்றித் தனக்கொன்றும் தெரியாதென்றும் கூறிவிட்டார். பிரபு ஒரு காக்கையைப் பிடித்துக்கொண்டு அந்தக் கடைக்குத் திரும்பவும் வந்து, "உனக்கு இப்போது என்ன நேரிடப்போகிறது பார்" என்று கோஷமிட்டார். காக்கையின் கண்களைத் தோண்டி யெடுத்து அந்த காக்கையைக் கடைக்காரர்மீது எறிந்துவிட்டுச் சென்றார்.

பணத்தை பறிகொடுத்ததால் பிரபு தற்கொலை செய்து கொள்ள நேரிட்டது. இதனல், அன்றைய தினத்திலிருந்து கடைக்காரரின் வியாபாரம் க்ஷீணிக்கலாயிற்று. அவர் குருடனகி விட்டார். கடைசியாக வீட்டுக்கு வீடு சென்று பிச்சையெடுத்து வாழ நேரிட்டது.

பொதுவாக காக்கையும் அதன் குரலும் அபசகுனங்களாகக் கருதப்பட்டிருந்தாலும், அதிகாலையில் ஆறு மணிக்கும் நடுப்பகலி

லும் காக்கையின் குரலைக் கேட்பது சுபசகுனமாம். அதிகாலை யில் காக்கையின் குரலைக் கேட்டால் தனலாபமுண்டாகுமாம். நடுப்பகலில் கேட்டால் சந்தோஷமும் சுபிட்சமும் ஏற்படுமாம்.

சீன தேசத்தில் ஒரு மூன்று கால்கள் கொண்ட காக்கை தான் சூரியனுக்குச் சின்னமாகும். அதிகாலையில் வேறு பறவைகள் விழித்துக் கொள்வதற்கு முன் காக்கை விழித்துக்கொண்டு கத்து வது வழக்கமல்லவா?

சீனவிலும், ஜப்பானிலும் பெற்றோர்களிடம் அன்புடனும் அனுசரணையுடனும் நடந்துகொள்ளும் குழந்தைகளுக்குக் காக்கை யைத்தான் உதாரணமாகக் கூறுவார்கள். காக்கைக்குத் தன் இனத்தின் மீதுள்ள பற்றுதல் சிருஷ்டியில் வேறெந்த ஜீவராசிகளி டையேயும் இல்லை.

சிப்பாய் ஒருவன் வீட்டுத் தோட்டத்தில் இரு காக்கைகளிருந் தனவாம். இந்த இரு காக்கைகளும் தன் குஞ்சுகளோடு கூடுகட்டி வசித்துக்கொண்டிருந்தனவாம். ஆண் காக்கை தன் குஞ்சுகளுக் காகத் தினந்தோறும் வெகுதூரஞ் சென்று இரைதேடிக்கொண்டு வருமாம். ஒருநாள் பெண் காக்கை வேறொரு ஆண் காக்கை மீது காதல் கொண்டு தன் குஞ்சுகளையும் மறந்து அந்த ஆண் காக்கை யுடன் எங்கோ சென்று விட்டது. இரை தேடிக்கொண்டு ஆண் காக்கை வரும்போது குஞ்சுகள் சாகும் நிலைமையிலிருந்தனவாம். இதைக்கண்ட ஆண் காகம் அடைந்த விசனத்தால் அது உயிரிழந்தது.

இந்தக் காட்சியைக் கண்ட சிப்பாய் உலகத்தின் மீது வெறுப் படைந்து ஒரு புத்த சந்நியாசியாகிவிட்டான்.

———

அசோகா சுகந்த பாக்குத்தூள்

[ஓர் உண்மை சம்பவம்]

தயையற்றவனுக்குத் தண்டனை

ஒரு நாள் இரண்டு நண்பர்கள் திபேத் தேசத்தை நோக்கி சென்றுகொண்டிருந்தார்கள் அவர்களிலொருவன் சுந்தர்சிங் என்ற கிறிஸ்துவ சாது. திபேத் ஒரு மலைப்பிர தேசமானதால் அவர்கள் நடப்பதற்கு மிகவும் கஷ்டப்பட்டார்கள். பனிப்பாறைகள் மீது நடக்கவேண்டியதாயிற்று. காற்றும் மிகவும் கடுமையாக வீசிற்று. தூரத்தில் ஒரு கிராமம் தெரிந்தது. அதைச் சென்றடைந்தாலன்றி இருவரும் உயிர் பிழைக்கமுடியாது என்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது. இருவரும் மேலும் நடந்தார்கள்.

இப்படி நடக்கையில் இருவரும் வழியிற் பசியாலும், வியாதியாலும், பயத்தாலும், பலவீனத்தாலும் நடக்கமுடியாமல் பனியில் விழுந்து விறைத்துக் கிடந்த ஒரு மனிதனைப் பார்த்தனர். அவனால் பேச முடியாவிட்டாலும் அவனுடைய முகம் உதவியை வேண்டி நிற்பதைக் காட்டியது. இதைப் பார்த்த சாதுவுக்கு மனம் உருகிவிட்டது. ஆனால் அவருடைய நண்பனுக்கு இதைப் பற்றி யாதொருவிதமான உணர்ச்சியும் உண்டாகவில்லை.

அவன் சாதுவைப் பார்த்து, "நண்பா! நீ இவனுக்கு உதவி செய்ய முயற்சி செய்ய வேண்டாம். ஏனென்றால் இவன் சீக்கிரத்தில் இறப்பது நிச்சயம். இவனைக் காப்பாற்றப் போனால், ஒரு வேளை நமக்கும் அந்த வியாதி வரும். மேலும் இவனைக் காப்பாற்றுவதற்கு வேண்டிய பலமும் நம்மிடம் இல்லை. எனவே நீ இவனை இப்படியே விட்டுவிட்டுச் சீக்கிரத்தில் கிராமத்திற்குப் போய்ச் சேரும் வழியைப் பார்" என்றான். உடனே சாதுவின் பதிலைக்கூட எதிர்பாராமற் கிராமத்தை நோக்கி நடந்து விட்டான்.

ஆனால் சாது அப்படிச் செய்யவில்லை. அவர் மெல்லக் குனிந்து அம்மனிதனைத் தன் தோள்மேலேற்றிக் கொண்டார். மிகுந்த கஷ்டத்துடன் பனிப் பாறைகளின்மேல் நடந்தார். என்ன ஆச்சரியம்! மெல்ல மெல்ல சாதுவுக்குப் பலம் வரத்

தொடங்கியது. "இதுவும் கடவுளுடைய அருளே!" எனக் கருதிய சாது, முன்னிலும் பன் மடங்கு ஊக்கத்துடன், நடந்தார். கிராமவாசிகள், உலகப் பெரியாரான சாது சுந்தர் சிங் ஒரு மனிதனை அந்தக் கஷ்டத்திலும் சுமந்துகொண்டு வருவதைக் கண்டு அளவில்லாத ஆனந்தத்துடன் அவரை வரவேற்று, உணவும் உடையும் இடமும் அளித்தனர். உயிரிழக்கும் தறுவாயிலிருந்த அம் மனிதனும் அவனுக்காகத் தம் முயிரைத் தியாகஞ் செய்யத் துணிந்த அப் பெரியாரும் மரணத்தினின்றும் விடுபட்டனர்.

தன்னுயிரைப் பெரிதாக மதித்து ஓர் அற்ப உதவிகூடச் செய்யமாட்டேன் என்று மறுத்து, வியாதிக்கும் மரணத்திற்கும் அஞ்சிய அச் சிநேகிதன் கிராமத்தை அடையு முன்பே மரணமடைந்தான்.

இவ்வளவு ஜீவகாருண்யம் வாய்ந்த சாது சுந்தர் சிங் என்பவர் பஞ்சாப்பிலே சீக்கிய வம்சத்திலே பிறந்தார். இவர் இளவயதிலேயே கிறிஸ்துவரானார். இவர் ஐரோப்பா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா முதலிய தேசங்களுக்கெல்லாம் சென்றிருக்கிறார். இவர் உலகப் புகழ்பெற்ற பெரியார்களுள் ஒருவராவார்.

WOMEN OF TASTE ALWAYS INSIST ON

BINNY'S

Pure Spun Silk & Georgette Sarees

In attractive GOLD BORDERS and shades

Manufactured by:

The Bangalore Woollen Cotton and Silk Mills Co., Ltd., Bangalore City.

Distributors:

H. A. R. Mohamed & Sons

No. 6-A, GODOWN STREET, Madras-1.

வனமகோற்சவம் நாட்டின் நன்மைக்கே

●

ஓர் அரசு ஆலும் வேம்பும்
ஒரு பத்துப் புளியும் மூன்று
சீருடன் விளவும் வில்வம்
மூன்றுடன் சிறந்த நெல்லி
பேர் பெறும் ஐந்து தென்னை
பெருகு மா ஐந்தும் என்றும்
யார் பயிர் செய்தா ரேனும்
அவர்க் கில்லை நரகம் தானே

இந்தப் பாடல் கார்த்திகைப் புராணத்தில் உள்ளது. ஒவ்வொரு வரும் கார்த்திகை மாதத்தில், சுக்லபட்சத்தில் ஓர் அரசு, ஒரு ஆல், ஒரு வேம்பு, மூன்று விளாமரம், மூன்று நெல்லி, பத்துப் புளி, ஐந்து மா, ஐந்து தென்னை ஆகிய ஒன்பது புண்ணிய மரங்களையும் வைத்து வளர்த்தால், அவருக்கு நரகம் இல்லையாம். மரங்களின் பெரும்பயனை இந்தப் பாடல் வைதீக முறையில் விளக்குகிறது. மரங்கள் வைத்து வனமகோற்சவம் கொண்டாடவேண்டிய காலத்தையும் நமது முன்னோர்கள் குறித்திருக்கிறார்கள். முக்கனி களில் பெருங்கனியைத் தரும் பலாவை இந்தப் பாடலில் காண வில்லை. ஆயினும் இதனைப் படிக்கும் அன்பர்கள் மேலே கண்ட ஒன்பது மரங்களுடன் பலாவையும் சேர்த்து வகைக்கு ஒன்று வீதமாவது, பத்துவகை மரங்களையும் தங்கள் தோட்டங்களில், கார்த்திகை மாதத்தில் அல்லது எந்த மாதத்திலாவது சுக்லபட்சத் தில் வைத்து வளர்ப்பது நலம். இது அன்பர்கள் தங்கள் சுய நலத்தையும் நாட்டின் பொது நலத்தையும் கருதிச் செய்யவேண் டிய திருப்பணியாகும்.

வாழ்க மரங்கள்
செடி கொடி வாழ்க !

"பாரி"

வல்லவனுக்கும் வல்லவன்

தேவ நகர் என்று ஒரு பட்டிணம் இருந்தது. அது மிகவும் அழகிய நகரம். ஊரின் மூன்று பக்கங்களிலும் ஆறுகள், மற்றொரு பக்கம் உயர்ந்த மலை. செல்வத்தில் சிறந்து விளங்கிய அந்த நகரின் நடுவில், அழகிய அணிகலன்போலிருந்தது கோட்டை ஒன்று. அந்தக் கோட்டையின் மதில் மேகமண்டலத்தைத் தொட்டு விடுவதுபோல் மிகவும் உயரமாக இருந்தது.

அந்த நகருக்குப் பெருமை யளித்ததே அந்தக் கோட்டைதான். அந்தக் கோட்டையை எவ்வளவோ அரசர்கள் கைப்பற்ற முயன்று தோல்வியடைந்தனர்.

ஆகாயத்தை தொடும்போலிருந்த அதன் உயரத்தாலும் அதன் உறுதியான அமைப்பாலும், எந்த எதிரியும் அதை அடைய முடியாதிருந்ததாலும் மதில் அளவற்ற கர்வமடைந்திருந்தது. அது யாரையும் விரும்பாது. அது, ஆசையுடன் தன்னை நோக்கி வரும் பறவைகளைக்கூட அருகே சேர்ப்பதில்லை.

ஒரு நாள், எதற்காகவோ ஏணி வைத்து அதன் மீதேறிய வீரர்கள், இறங்கும்போது, அதை எடுக்காமலேயே மறந்துவிட்டுச் சென்று விட்டார்கள்.

"கோட்டை மதிலே நான் இன்று மட்டும் உன் நண்பனாக இருக்கலாமா?'' என்றது ஏணி.

''சீச்சீ, என்னுடன் நட்புக்கொள்ள உனக்கு என்ன தகுதி இருக்கிறது— ஒரு கையால் அசைத்தால்கூட வேருடன் வந்து விடும் அற்ப மூங்கில் இனம் நீ, நானோ...ஆயிரம் யானைகள் வந்து முட்டினாலும்கூட அசையாது இருப்பவன். என்னுள்ளே, செங்கல் லும், சுண்ணாம்பும் உறுதியாக உள்ளது'' என்று கூறி, ஏணியை

அவமதித்துவிட்டது, அகம்பாவம் கொண்ட கோட்டை மதில். பாவம், அதன் ஏச்சைப் பொறுக்காமல் கீழே சாய்ந்தது வணி.

அடுத்தநாள் மாலை நேரம். வானவீதியில் வந்துகொண்டிருந்த கருமுகில் ஒன்று வானளாவ உயர்ந்து நின்ற கோட்டை மதிலைக் கண்டது. அதன் பலமும், கம்பீரமும், தோற்றமும் கருமுகிலின் உள்ளத்தினைக் கொள்ளை கொண்டது. அதனுடன் நட்புக்கொள்ள விரும்பிக் கீழே இறங்கியது.

"கம்பீரமுள்ள கோட்டை மதிலே, நான் உன்னுடன் நண்பனாக இருக்க ஆசைப்படுகிறேன்" என்றது கருமுகில்.

அகம்பாவம் கொண்ட கோட்டை மதில் "கடகட" வென்று சிரித்து, "நல்ல கேள்வி கேட்டாய்! எறும்பு யானையைப் பார்த்து நாம் இருவரும் ஒரே வீட்டில் வசிக்கலாமா என்று கேட்டதாம்; அதைப்போலல்லவா இருக்கிறது..." என்றது.

"என்ன! அப்படியானால் நான் உன்னைவிடத் தாழ்ந்தவனா...' என்று கேட்டது கருமுகில்.

"சந்தேகம் என்ன? நீயோ கேவலம் காற்றடித்தால்கூட விழுந்தடித்துக்கொண்டு பறந்துபோய் விடுவாய். ஆனால் நானோ ஆயிரம் யானைகள் வந்து ஒரே சமயத்தில் முட்டினால்கூட சிறிதும் அசையாதவன். எனது நீண்ட பரந்த உடலைப்பார், ஏதாவது ஒரு விரிசல், விள்ளல் உண்டா? நான் உன்னுடன் நண்பனாக இருக்க முடியாது. போ, போ" என்று விரட்டியது அகம்பாவம் கொண்ட கோட்டை மதில்.

பாவம், கருமேகத்தின் முகம் சுண்டிவிட்டது.

"நண்பா, என்னை அவமதித்தாலும் பாதகமில்லை. நான் வருகிறேன்" என்று கூறிக் காற்றில் பறந்துவிட்டது கருமுகில். அன்றிரவு கழிந்து, மறுநாள் காலையில் கோட்டை வீரர்கள் சிலர் மதில்மீது ஏறினார்கள்; அதன் உச்சியில், கொடியை நாட்டுவதற்காக, ஒரு சிறு குழி தோண்டினார்கள். அதில் கொடிக் கம்பத்தை நட்டுவிட்டுச் சென்றார்கள். ஆனால் அன்றிரவு வீசிய பலத்த புயல் கொடிக்கம்பத்தைக் கீழே தள்ளி விட்டுச் சென்றது. குழி காலியாக இருந்தது. மறுநாள் இரவு பெய்த மழை குழியில் நீரையும் மண்ணையும் நிரப்பிச் சென்றது. ஒரு வாரத்தில் குழி நிரம்ப ஈரமண்

காட்சி யளித்தது. அன்றிரவு மறுபடி மழை பெய்தது. குழியில் நீரும், மண்ணும் கலந்திருந்தன.

காலையில், இரவு பெய்த மழையில் நனைந்த காகம் ஒன்று, தனது ஈர சிறகுகளை உலர்த்திக்கொள்ள விரும்பி வந்தது; கோட்டை மதிலின் உச்சியில் வெயிலிருப்பதைக் கண்டதும், "கோட்டை மதிலே, உன்மீது அமர்ந்து சிறிது நேரம் வெயிலில் என் நனைந்த சிறகுகளை உலர்த்திக் கொள்ளலாமா?" என்று கேட்டது காகம். இவனோ, அற்பன், இவனை சேர்க்கலாமா கூடாதா என்று கோட்டை மதில் சிறிதுநேரம் யோசனை செய்தது. அதற்குள் ஏதோ, மேலே சத்தம் கேட்டது. கோட்டை மதில் நிமிர்ந்து பார்த்தது. கருமுகில் காட்சியளித்தது.

"என்ன, கறுப்பு மேகமே, 10 நாட்களுக்குள் மூன்று முறை இறந்து, மறுபடி பிறந்திருக்கிறீரா" என்று ஏளனஞ் செய்தது மதில்.

"அது இருக்கட்டும், என் வாழ்வே அப்படித்தானே, கோட்டை மதிலே, இந்தக் காகம் அற்பன். இவனைச் சேர்க்காதே...அற்பர் சகவாசம் ஆபத்தில் முடியும்" என்றது கருமுகில்.

"ஆயிரம் யானைகளால் கூட அசைக்கமுடியாத என்னை இது என்ன செய்துவிடும். கேவலம் பறவைதானே...இதைச் சேர்ப்பது என் மரியாதைக்குக் குறைவாக இருந்தாலும், உன் சொல்லைப் பொய்யாக்க இதற்கு இடம் அளித்தே தீருவேன். இந்த அற்பக் காக்கை என்னை என்னசெய்யப்போகிறது பார்ப்போம்" என்றது கோட்டை மதில்.

"வேண்டாம் நண்பா, வல்லவனுக்கு வல்லவன் உலகத்தில் உண்டு. மனிதர்களாலும் அசைக்கமுடியாத மலைப் பாறைகளை ஒரு சிறு சிற்றுளியால் சிதற அடித்துவிடலாம். அற்பர் சகவாசம் ஆபத்தில் விளையும். வேண்டாம், காகத்தை சேர்க்காதே" என்று கதறியது கருமுகில்.

ஆனால், கருமுகிலின் உபதேசத்தை உதறிவிட்டு, காகத்தை அனுமதித்தது கோட்டை மதில். பாவம், கருமுகில் வருத்தப்பட்டுக் கொண்டே பறந்து சென்றுவிட்டது.

தனது சிறகுகளை உலர்த்திக்கொண்ட காகம் சும்மா இராமல் அங்குமிங்கும் மதில் மேல் உலாவியது. அப்பொழுது அங்கிருந்த

குழி, அதன் கண்ணில் பட்டது. உடனே அதில் எச்சமிட்டுப் பறந்து சென்றுவிட்டது. அப்படி இட்ட எச்சத்தில், முந்திய நாள் விழுங்கி ஜீரணமாகாத ஆலம் வித்தொன்று முழுசாக வெளி வந்து குழியில் தங்கி, குழியில் நிரம்பியிருந்த தண்ணீரில் ஊறியது.

“என்னவோ மேகம் உளறியதே, காகத்தைச் சேர்த்தால் ஆபத்து என்று, இப்பொழுது ஒன்றும் நேரவில்லையே, என்று கூறி ஏளனமாகச் சிரித்துக்கொண்டது மதில்.

மறுநாள், தண்ணீரில் ஊறிய ஆலம் விதை முளைவிட்டது, அடுத்த நாள் வேர் விட்டது, துளிர்விட்டது. அடுத்த மாதம் அதன் வேர் அந்தக் குழியை நிரப்பி, மேலே படர வழியில்லாது, மதிலைப் பிளந்துகொண்டு கீழ்நோக்கி வளர்ந்தது. அவ்வப்பொழுது பெய்தமழை அது வளர்வதற்கு உதவியாக இருந்தது.

மூன்று மாதங்களுக்குள் மதிலில் மேலிருந்து கீழ் வரை, ஆலம் வேர் சென்றதன் பயனாக ஒரு சிறு பிளவு உண்டாகிவிட்டது. இதை, அந்நியநாட்டு வேவு படையைச் சேர்ந்தவன் கவனித்து விட்டான் அடுத்த நாளே அவர்களுடைய அரசன் தேவ நகரின் மேல் படையெடுத்து, யானைகளைக்கொண்டு, கோட்டையின் பிளவு பட்ட இடத்தில் முட்டச் செய்தான். அன்று ஆயிரம் யானைகளுக்கும் அசையாத கோட்டைமதில், இன்று ஐந்தே யானைகள் முட்டின உடனே விழுந்து வழிவிட்டுவிட்டது; எதிரிகள் வெற்றி பெற்று விட்டனர்.

பாவம், கோட்டை மதிலின் அகம்பாவம் அழிந்தது. நண்பன் கருமேகம் கூறிய, “வல்லவனுக்கும் வல்லவன் உண்டு.” “அற்பர் சகவாசம் ஆபத்து” என்பதை உண்மை என்று அறிந்து கொண்டது. அன்று முதல் அடக்கமாக இருந்தது மதில்.

—ரேவதி

கையெழுத்துக்குப் பத்து பவுன்!

•

அவன் ஒரு பன்னிரண்டு வயதுள்ள ஆங்கிலச் சிறுவன். அவன் பெயர் ஜார்ஜ். கடற்படையில் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தான். சகல சம்பத்தும் நிறைந்த வீட்டில் வளர்ந்த சிறுவனுக்கு வெளியே சென்று தனியாக இருந்து கண்டிப்பான செலவில் காலந்தள்ளுவது மிகவும் கடினமாயிருந்தது.

சிறுவனின் பாட்டியோ பெரிய பணக்காரி. ஆனால் வீண் செலவை மிகவும் வெறுப்பவள். கடற்படையில் பயிற்சி பெறும் மற்ற சிறுவர்கள் பெற்றுவந்ததுபோல கைச் செலவிற்காக மாதந்தோறும் ஐந்து பவுன்களே தான் இவள் தன் பேரன் ஜார்ஜுக்கு அனுப்பிக் கொண்டிருந்தாள். இந்த ஐந்து பவுன்கள் எத்தனை நாளைக்கு வரும்? சாதாரணமாக அந்தந்த மாதத் தொகை கைக்குவரும் முன்பே அந்தத் தொகைக்குச் சரியாகவோ அல்லது அதற்கு மேலோ தங்களுக்கு வேண்டிய பொருள்களைக் கடற்படையில் பயிற்சி பெறும் சிறுவர்கள் கடனாக வாங்கிக்கொண்டிருப்பார்கள். மிகச்சிக்கனமாக உள்ள சிறுவர்களிடமிருந்து ஜார்ஜ் சிறு தொகைகள் கடனும் வாங்கியிருப்பான். பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்த ஜார்ஜுக்கு இதெல்லாம் மிகவும் வேதனையாயிருந்தது. அதனால் ஒரு தினம் பாட்டிக்கு விவரமாக ஒரு கடிதமெழுதித் தன் செலவிற்குப் போதுமான தொகையைப் பெற்றுக்கொள்ளத் தீர்மானித்தான். மாதாமாதம் ஐந்து பவுன்கள் தனக்குப் போதாது என்று அடித்துக்கூறிவிட்டால் பாட்டி அதைக் காதிலேயே வாங்கிக்கொள்ளமாட்டாள் என்ற பயம் மனத்திலிருந்ததால் அவன் தன் செலவுகள் அதிகரிக்க காரண

மென்ன வென்றும் அவற்றிற்குப்போதிய பணத்தைபாட்டி அனுப்ப வேண்டியது நியாயந்தானென்றும் விரிவாகக் கடிதமெழுதினன். பயபக்தியோடும் பாட்டிக்கு மனத்தில் இரக்கம் தோன்றும் வண்ணமும் மிக உருக்க மாக இக்கடிதத்தை எழுதினன் ஜார்ஜ். வெகு சீக்கிரத்தில் பாட்டியிடமிருந்து ஜார்ஜுக்குப் பதில் வந்தது. "கண்ணே, எந்தக் காரணத்தாலும் செலவை அதிகரிப்பது மிகவும் தவறு; அது பாவமுமாகும். அதனல் உனக்கு வழக்கமாய் அனுப்பும் ஐந்து பவுன் களுக்குமேல் அனுப்பமாட்டேன்" என்று பாட்டி தன் கடிதத்தில் எழுதியிருந்தாள்.

மிக அன்புடன் எழுதியிருந்த இந்தக் கடிதம் ஜார்ஜின் மனோவேதனையைப் பின்னும் அதிகரித்தது. ஆனல் இந்த மனோவேதனையை அதிகநாட்கள் தாங்க நேரிடவில்லை. பிறகு ஒரு வாரத்திற்குள் அவன் பாட்டிக்கு ஜார்ஜ் எழுதிய மற்றொரு கடிதம் கீழ்வருமாறு:

"உங்கள் கடிதம் எனக்கு மிகவும் பொறுக்க முடியாத ஏமாற்றத்தையே அளித்தது. தற்செயலாக அந்தக் கடிதத்தை என்னுடைய நண்பர் ஒருவர் பார்க்க நேரிட்டது. இவர் பிரபலஸ்தர்களின் கையெழுத்துக்களை யெல்லாம் சேகரித்து வைப்பவர். இவர் தங்கள் மேன்மை தங்கிய கையெழுத்தைப் பார்த்ததும் அதற்குப் பத்து பவுன்கள் கொடுத்து அந்தக் கடிதத்தை வாங்கிச் சென்று விட்டார். என்னுடைய தற்காலீக கஷ்டங்களெல்லாம் இத்தோடு நீங்கிவிட்டதென்று நான் உங்களுக்கு மிக மகிழ்ச்சியோடு அறிவித்துக் கொள்கிறேன்."

பத்து பவுன் விலைமதிப்புள்ள இந்த மேன்மை தங்கிய கையெழுத்து இங்கிலாந்தை ஆண்டுகொண்டிருந்த சக்ரவர்த்தினியான விக்டோரியா மஹாராணியினுடைய தாகும். அவள் பேரன் ஜார்ஜ், பிற்காலத்தில் இங்கிலாந்து தேசத்தை ஆண்ட ஐந்தாம் ஜார்ஜ் மன்னர்.

ஞானசம்பத்து

கு. ப. சேது அம்மாள்

(சென்ற மாத தொடர்ச்சி)

அன்றைய யுத்தத்தில் பகைவனை வெற்றிகொண்டு ஜயலக்ஷ்மி குடிகொண்ட முகப் பிரகாசத்துடன் காண்டீபத்தைச் சுற்றிக்கொண்டு தனது பாசறைக்குத் திரும்பிக்கொண்டிருந்தான் விஜயன்.

வரும் வழியில் தீயின் செந்நிற நாக்குகள் வானை நோக்கி யெழு-சுடர் விட்டுக்கொண்டு எரியும் அக்னி குண்டத்தையும், அதனைச் சுற்றிவரும் வயோதிக அந்தணரையும் கண்டு ஒரு விநாடி திகைத்து நின்றான்.

தீயினை வலம் வந்த அந்தணர் கைகளை உயரத் தூக்கி பிரார்த்தனை புரிந்து தீயில் இறங்க ஆயத்தமாக நிற்பதைக் கண்டு ஓடோடியும் சென்று அந்தணருடைய கரங்களைப் பற்றிக்கொண்டு "-விப்ர சிரேஷ்டரே, என்ன காரியம் இது?" என்று கேட்டான் விஜயன்.

"என்னவோ காரியம்—நீ உன் காரியத்தைப் பார்த்துக் கொண்டு போமய்யா" என்று பார்த்தன் பற்றி இருந்த தமது கரங்களை உதறி விடுவித்துக்கொள்ள முயன்றார் அந்தணர்.

"என் காரியத்தைப் பார்க்கத்தான் வந்திருக்கிறேன்' நீர் யார், ஏனிப்படி அக்னியில் புகத் துணிந்தீர்கள்?" என்று பிடித்திருந்த கரங்களைப் பின்னும் இறுக்கினான் அர்ஜுனன்.

அந்தணர் தமது சிவந்த விழிகளில் நீர்பெருக, "யாரையா நீர் குறுக்கே வந்து என் உத்தேச காரியத்தை தாமதிக்கச் செய்வது? எனக்கு யாருடன் என்ன பேச்சு வேண்டியிருக்கிறது. போம் உம் வழியைப் பார்த்துக்கொண்டு, விடும் கையை" என்று கோபத்தோடு தன் கைகளை இழுத்தார் அந்தணர்.

அர்ஜுனன் நகைத்துக்கொண்டு, "பிராம்மண சிரேஷ்டரே என் வழி அந்தணர்கள் க்ஷேமமாக இருக்கிறார்களா என்று பார்ப்பதுதான்! உமக்கு என்ன ஆயிற்று சொல்லும், நான் நிவர்த்தி செய்கிறேன்..."

"செய்வீர், செய்வீர்! செய்யமாட்டீரோ......விடுமையா கையை."

"நான் தர்மருடைய தம்பி, அர்ஜுனன்...உமக்குற்ற துயரத்தைச் சொல்லும்..."

"தர்மரே வந்தாலும் என் துக்கம் தீராதையா; நீர் எனக்கு செய்யும் உபகாரமாக என் கைகளை விட்டுவிடும்," என்று எரிந்து விழுந்தார் அந்த அந்தணர்.

"தீராவிட்டால் போகிறது. இறந்துபோகத்தான் போகிறீரே, உமது துக்கத்தைச் சொல்லிவிட்டுப் பிறகு தீப்புகுமேன், நான் தடுக்கவில்லை."

"அதையெல்லாம் உமக்குச் சொல்லிக்கொண்டிருந்தால், அக்னி அவிந்தே போய்விடும், நீர் போய்வாரும்."

"அவியாது! ஏ அப்பா, எவ்வளவு தீ! உமது நொந்த சரீரம் வேக இவ்வளவு தீயா வேண்டும்?"

"ஓய், புத்திர சோகத்தால் தவித்துக்கொண்டு தீப்புகுந்து உயிரை மாய்த்துக்கொள்ள வந்தால், என்னை அதற்கு விடாமல் நிறுத்திக்கொண்டு கதைபேசி, பரிகாசம் செய்கிறீர், ராஜ குமாரனா, நீர்?"

"பிராம்மணோத்தமரே, உம்மைப் பரிகாசம் செய்யவில்லை. அக்கினி அவிந்துபோகும் என்றீரே என்று சொன்னேன்; அது போகிறது, எதற்காக தீக்குளிக்கிறீர் என்றால் பதில் சொல்லமாட்டேன் என்கிறீர்?"

"ஐயா, என்மகன்...என் ஒரே குலத்தோன்றல் மடிந்துவிட்டானையா, அப்பா, என் கண்மணி..." என்று வாயிலும், வயிற்றிலும் அறைந்துகொண்டு தீயில் விழக் கருதி வெறிபிடித்தவர்போல ஓடமுயன்றார் அந்தணர்.

அர்ஜுனன் அவரை வலித்திழுத்து "விப்பிரரே, உட்காரும். சொல்லுகிறேன். மகன் இறந்துவிட்டானென்று தீயில் விழுகிறேன் என்கிறீர்?"

"விழாமல் இனி எனக்கென்ன இருக்கிறது வாழ்வில். புத்திர சோகத்தை அனுபவித்துக்கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக சாவதைவிட ஒரே அடியாக இவ்வுயிரை அழித்துவிடுகிறேன்..."

"நன்றாயிருக்கிறதே உமது தீர்மானம். மகன் காலமாகிவிட்டது அவன் போய்விட்டான். உம்காலம் முடிந்தால் நீரும் தன்

ஞலே போகிறீர்! இதற்காக ஆத்மஹத்தி செய்துகொள்வார்களா, யாராவது?

"ஆத்மஹத்தியாவது, அத்துவானமாவது, வேதாந்தம்இங்கே யாருக்குவேண்டும்? விடுமையா கையை."

"எல்லாருக்கும் வேண்டும்—வேதாந்தம்! அதிலும் வேத மோதும் அந்தணரான நீர் - வேதாந்தத்தின் பொருளை—வாழ்வின் நித்தியா, அநித்திய விவேகத்தை மற்றவர்களுக்கு உணர்த்த வேண்டிய வல்லுவரான விப்பிரர் இப்படி அநீதி செய்தால்—மற்ற வருணத்தார் வேதாந்தத்தை கௌரவிப்பது எங்ஙனம்? தகப்பனிருக்கும்போது மகன் இறப்பது தகாதுதான்! ஆனல்—ஏதோ காலகதி நேர்ந்துவிட்டால்...

"என்ன காலகதி, பிரம்மசரியத்திலிருந்து கிரஹஸ்தா சிரமம் கூட புகாத என் குழந்தை..."

"என்ன செய்யலாம்..."

"என்ன செய்யலாமா, இதுதான் செய்யலாம். புத்திர சோகம் என்ற துக்காக்னியில் தினம் கொஞ்சம் கொஞ்சமாக நீராவதைவிட இந்தச் சிதையில் க்ஷணத்தில் துயரை நீத்துவிடு கிறேன், வேதம்—விப்பிரன்...எல்லாம்..."

"எல்லாம் நீர் பொறுத்தேஆகவேண்டும். மனத்தை தைரியப் படுத்திக்கொள்ளும்...இகலோகப்பற்று உள்ளவரையில் புத்திரன், பிதா, பத்தினி, புருஷன் எல்லா பந்தங்களும், பரகதியடையுங் கால்...மகனுவது, தந்தையாவது—அவன் யாரோ—நீர் யாரோ?" என்று நீளப் பேசிக்கொண்டே வந்த அர்ஜுனனை அந்தணர் கனல் கக்கும் கண்களால் பார்த்து," ராஜகுமாரா, துக்கத்தின் அனுபவம் இன்னதென்று உனக்குத் தெரியாததால் என் துக் கத்தை நீ விளையாட்டாக—புத்திரசோகத்தை சாமானியமாக நினைத்து ஆறுதல் கூறுகிருய்..."

"அந்தணரே, அப்படிக்கேளும். இந்தப் பாரத யுத்தத்தில் எனது கணக்கற்ற பந்துக்கள் மாண்டிருக்கிருர்கள். இன்னமும் மாளவிருக்கிருர்கள்.

"பந்துக்கள் மாளுவதும், மகன்—பெற்றமகன்—வாலிப வயதில் மடிவதும் ஒன்றுதானு?"

"ஒன்று தான் என்று கூறவில்லை நான்! புத்திரசோகம் பொல்லாதது தான் ஆனல் அதை சகித்துத்தான்..."

"எல்லாம் பிறருக்குச் சொல்லலாம்...தனக்கு வந்தாலல்லவா தெரியும்?"

"அந்தணரே, எனக்கும் வரலாம்... என் மைந்தர்கள் யுத்த களத்தில் இருக்கிருர்கள்..."

"வேண்டாமையா, எனக்கு வந்தது போதும். விஷயத்தைச் சொல்லிவிடு. பிறகு கைகளை விடுகிறேன்' என்ருயே, சொல்லிவிட்டேன் விடு கையை."

"ஐயோ பாவம்! வேதமோதிய விப்பிரருடைய விவேகம் இப்படியாச் சிதறிப்போய்விடும்! பிராம்மணரே, சொல்வதைக் கேளும். பேசாமல் திரும்பிப்போம்."

"முடியவே முடியாது, என் துக்கம் உமக்கென்ன தெரியும்? பெற்ற பிள்ளை போனபிறகு ஜீவித்துக்கொண்டிருக்க முடியாது என்ருல்."

"அந்தணரே—சிறிது சிந்தித்துப்பாரும். ஜன்மாந்திர வினை யாரை விட்டது? உம்மை விட, மகளுவது, தந்தையாவது எல்லாம் மாயை, சொப்பனம், ஜகத் மித்யை."

"ஜகத்தாவது, மித்யையாவது, கையை விடுகிருயா இல்லையா இப்பொழுது?"

"விடமாட்டேன்."

"ஏன் விடமாட்டாய்?"

"நீர் வேத விதியை மீறுவதால்."

"என்னை என்ன செய்யச் சொல்லுகிருய்?"

"அனைத்தும் அவன் செயல் என்று திரும்பிப்போம்."

"ராஜகுமாரா, வீணுக என் துக்கத்தைத் தூண்டுகிருய். நாளை யுத்தத்தில் உன் மகன் அபிமன்யுவை நீ இழந்தால் அப்பொழுது தெரியும் உனக்கு, புத்திரசோகம் என்ன என்பது..." என்று துக்கமும், ஆத்திரமும் பொங்கக் கூறிஞர் விப்பிரர்.

அர்ஜுனன் சாவதானமாக "சிறந்த அந்தணரே, பிறப்பும், இறப்பும் மானிட இயல்பு. அபிமன்யுவை நாளை யுத்தத்தில் இழக்க நேரிட்டால் நான் உம்மைப்போல தீயில் விழமாட்டேன்!"

"இப்பொழுது சொல்கிருய் சிரித்துக்கொண்டு..."

"எப்பொழுதும் சரி. வேண்டுமாஞல் பாருமேன்..."

"ஆமாம். என்னைத்தேடி என்னுடன் சொல்லிவிட்டு பிறகு தானே அக்கினியில் குதிப்பாய்..."

"மகன் காலமானுன் என்பதற்காக மற்ற கடமைகளைக் கைவிட்டு அக்கினியில் மூழ்கிவிட அவ்வளவு அஞ்ஞானியல்ல நான்."

"எல்லாம் வாயால் சொல்லலாம்."

"சத்தியம் செய்து தருகிறேன் பிராமண! வேடிக்கையல்ல, என் காண்டீபத்தின் மீது ஆணை அது".

"நிஜம்தாஞ ?"

"சத்தியம் என்றேன்."

"அப்படியானல்...என்னைக் காலம் முடியுமட்டும் புத்திர சோகத்தோடு தவித்துக்கொண்டு கிட' என்று கூறுகிருய். ஐயோ, எப்படி இருப்பேன் ?......"

"சுகம், துக்கம், எல்லாம் வாஸுதேவனிடம் ஒப்புவியும். அப்புறம் சிந்தை யேது? போம் திரும்பி. வாரும் போவோம்... என்று புறப்பட்டான் அர்ஜுனன்".

"எனக்கு இப்படி இந்த வழியல்லவா போகவேண்டும்... என்னவோ கொஞ்ச நாளைக்கு...பார்ப்போம்...?"

"கொஞ்சமும், நிரம்பவும் உமது இஷ்டமன்று. அது அவன் செயல். தைரியமாக வீடு போய்ச் சேரும்" என்று கூறிவிட்டு விர்ரென்று நடந்தான் பார்த்தன்.

கௌரவ சேனையின் ஜயபேரிகை முழக்கத்தைக் கேட்டதுமே பார்த்தனுக்கு அபிமன்யு இறந்துவிட்டான் என்ற விஷயம் விளங்கி விட்டது. கையிலிருந்த காண்டீபத்தை கீழே போட்டுவிட்டு "அபிமன்யு, என் கண்மணீ !" என்று அலறியவாறு தேரிலிருந்து கீழே குதித்து ஓட்டமாக ஓடினுன் பார்த்தன்.

தேர்த்தட்டிலிருந்த பகவானுடைய நெஞ்சம் கலங்கிற்று; 'சுபத்திரே, வீரசிகாமணியான உன் புதல்வனை இழந்துவிட்டாய்' என்று நினைத்த மாத்திரத்தில் அர்ஜுனனுக்குத் தான் ஆற்ற வேண்டிய செயலை நினைத்து தேர்த்தட்டிலிருந்து இறங்கி அவனைத் தொடர்ந்து ஓடினுர்.

பாசறைக்குச் செல்லும் வழியில் பெரியதொரு அக்னிப் பிழம்பைக் கண்டார். துக்கத்தாலும், சினத்தாலும், உடலும் உள்ளமும் துடிக்க அக்னியில் மூழ்கத் தயாராக நின்று, "நிகரில்லாதவனே! என் குழந்தாய்! உன்னை இழந்துவிட்டு இனியும் இவ்வுயிரை வைத்திருக்கமாட்டேன்......" என்று புலம்பியவாறு

ஜொலிக்கும் அக்னியைப் பார்த்து, "செல்வமே, இரு. நீ செல்லுமிடத்திற்கு இதோ நானும் வருகிறேனடா......" என்று உரக்கக் கூவியபடி தீயில் குதிக்க உயர எழும்பினுன்.

பலமான கை ஒன்று தன் கையைப் பற்றி நிறுத்தியதைக் கண்டு திரும்பிப் பார்த்து, "ஸ்ரீதரா, போதும் உன் பரிவு விடு கையை" என்று சீறினுன் பார்த்தன்.

"அர்ஜுனு, என்ன காரியம் இது, க்ஷத்திரியனு நீ ?"

"நல்ல காரியம் தான் வாசுதேவா, என்னிடமே உன் கபட நாடகத்தைக் காட்டிவிட்டாய்......"

"இருக்கட்டும், வா பாசறைக்குச் சொல்வோம்." ஆண் மகனுன நீயே இக்கதிக்குத் துணிந்திருக்கும்போது, அங்கே ஸ்திரீகள் என்ன ஆனுர்களோ......"

"என்ன வேண்டுமானுலும் ஆகட்டும். என் உயிர்நிலையான அபிமன்யுவை இழந்து விட்டு......"

"பெண்களைப்போல புலம்பி அழ வெட்கமில்லை பற்குனு உனக்கு ?"

"இல்லை, விடு கையை. சாகும் சமயத்தில் வெட்கமென்ன, மானமென்ன ? டேசிப் பொழுதைப் போக்காதே. போய் உன் தங்கையைக் கவனி, போ !"

"அதற்காகத் தான் உனக்குக் கலியாணம் செய்து கொடுத்தேனே ?"

"கிருஷ்ணு, பரிஹாஸம் செய்வதற்கும் தருணமில்லையா, விடு என்னை ?"

"ஊம், அப்போது அக்கினியில் மூழ்கிவிடுகிறேன் என்கிறுய்?"

"ஆமாம் விடேன் கையை—?"

"அழகாக இருக்கிறது உன் யோக்கியத்தை ! உனக்கு ஒரு நீதி, உன் ராஜ்யத்திலுள்ள அந்தணருக்கு ஒரு நீதியோ !"

திடுக்கிட்டு பிரமை தட்டி நின்றுன் பார்த்தன்.

முதல் நாள் மாலையில் நடந்த சம்பவம் அவன் நினைவிற்கு வந்தது.

"மாதவா, அது உன் சூது: உன் கபடநாடகம், உன் வேலைத் தனம்...இந்த அனர்த்தத்தை முன்னதாக அறிந்து...நீ செய்த அக்கிரமம்..." "பகைவரை வெல்லும் விஜயனே, சாந்தியடைவாயாக, கர்மகதியின் விளைவை எவ்வளவு எடுத்து ஓதியும் நீ இப்படி

பேடியாகி பெண்ணைப்போல உயிரழிவுக்காகப் பரிதவித்து அழுது கொண்டு அக்கினிப்பிரவேசம் செய்ய நினைத்தாயே.........பகைவர்கள் கைதட்டிச் சிரிக்கமாட்டார்களா உன்னைப் பார்த்து ?" என்று அர்ஜுனன் கையைப்பற்றி "வா, பாசறைக்குச் செல்வோம், பாவம். அங்கே சுபத்திரையும், உத்தரையும், பாஞ்சாலியும் எப்படித் தவிக்கிறார்களோ—" என்று கூறியபடி அர்ஜுனனுடன் வேகமாக நடந்தார்.

ASOKA SCENTED BETELNUT POWDER

C. C. JACOB

Tailors, Dress Manufacturers & Contractors
(Specialists in B & C Quality Textile Dresses)
10, Thambu Chetty St, Madras - 1.

★

For Readymade garments fabricated out of India's best clothing materials
—B. & C. Mills cloths

Contact us for your requirements.

வாழ்க்கையில் குற்றங்குறையுள்ள வர்களும் நேர் வழியில் இன்ப மடைய முடியாதவர்களும் புரியும் ஒரு கொடிய செயல்.

சிலருக்குக் கொண்டாட்டம் பலருக்குத் திண்டாட்டம்

●

லாகிரிப் பொருள்களின் வியாபாரம் எல்லா தேசத்து சர்க்காராலும் தடைசெய்யப்பட்டுள்ளது. இந்த வியாபாரத்தைச் செய்பவர்கள் அதிகாரிகள் வசம் அகப்பட்டுக்கொண்டால் கடுமையான தண்டனைக்காளாவதுண்டு.

சட்டப்பிரகாரம் தடைகளும் கடுமையான தண்டனைகளும் விதிக்கப்பட்டிருக்கும் எந்தத் துறைகளிலும் கள்ள வியாபாரம் செழிப்பது மனித சுபாவத்திற்கேற்றதுதானே! அதனால் லாகிரிப் பொருள்களிலும் மனிதர்கள் மிகச் சிரமத்தோடு வியாபாரஞ் செய்து அமோக லாபம் சம்பாதிக்கின்றனர்.

இந்த வியாபாரத் துறையில் சரக்குகள் வாங்கி வியாபார ஸ்தலத்திற்குக் கொண்டு வருவது கஷ்டம். வியாபாரியிடம் சேர்ப்பது அதைவிடக் கடினம். வியாபாரியிடம் சரக்கு வந்தால் அதை உபயோகிக்கும் வாடிக்கைகாரர்களிடம் கொண்டு சேர்ப்பதும் மிகவும் சிரமம். இந்த மூன்று கண்டங்களையும் தாண்டி, திண்டாடும் பாபிகளான மக்களிடம் சேர்த்து விட்டால் அதிருஷ்டக்காரரான வியாபாரியின் பாடு கொண்டாட்டம் தானே!

இந்த வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் முதலாளிகளும் பணத்திற்காகச் சுதந்திரத்தையும் உயிரையும்கூட

இழக்கத் தயாராக இருக்கும் மற்ற கையாள்களும் மிகவும் தைரியசாலிகளாகவும், தந்திரசாலிகளாகவுமிருக்கவேண்டும். சில சந்தர்ப்பங்களில் போலீசாரை எதிர்த்துக் கொல்லக் கூட வேண்டியிருக்கும். எப்போதுமே கள்ளத்தனமாக சரக்கை மறைத்து வைத்துக் கொள்வதற்கும் துணிவோடு பிரயாணஞ் செய்வதற்கும் திறமை பெற்றிருக்க வேண்டும். தான் ஈடுபட்டிருக்கும் வியாபாரத்தின் தன்மையை இரவிலோ, பகலிலோ ஒரு நிமிஷம் மறந்துவிட்டால் அந்த நிமிஷமே ஆபத்து நேரிடும்.

வெளி நாட்டுக் கப்பல் ஒன்று துறைமுகத்தை யடைகிறது. அந்த ஊரில் இறங்கவேண்டிய பிரயாணிகள் யாவரும் இறங்கிவிட்டனர். இரவு நெருங்கியதும் கப்பலில் சந்தடியற்றுஇருந்தது. திடீரென அந்த காரிருளில் சப்தஞ் செய்யாமல் ஒரு உருவம் கப்பலுக்குள் பிரவேசிக்கிறது. ஐந்து நிமிஷங்களில் அதே உருவம்கப்பலைவிட்டு வெளியேறுகிறது. ஒருவருமே தன்னைக் கவனித்திருக்கமாட்டார்களென்ற எண்ணமிருந்தாலும் மிக ஜாக்கிரதையாய்த் தான் அந்த உருவம் கப்பலைவிட்டு வெளியேறுகிறது. கப்பலைவிட்டுப் பூமியில் அந்த உருவம் காலடியெடுத்துவைத்தமாத்திரத்தில் இருவர் அதை நோக்கிப் பாய்கின்றனர்.

இவர்களைக் கண்டதும் அந்த உருவம் அதிவேகமாக ஓட முயற்சிக்கிறது. தப்பமுடியாதென்று கண்டவுடன் ஆத்திரமடைந்து அவர்களிருவரையும் தாக்க முயற்சிக்கிறது அந்த உருவம். அதிலும் தோல்வி. உடனே அந்த உருவத்தின் ஆடையிலிருந்து ஒரு பொட்டலம் கீழே விழுகிறது. அந்தப் பொட்டலத்திலிருந்து வெள்ளைப் புகை கிளம்புகிறது.

இந்தச்சம்பவத்தின் அர்த்தம் லாகிரிப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் ஒருவன் போலீசாரிடம் சிக்கிக் கொண்டான் என்பதாகும். சிக்கிக் கொண்டவர்களுக்கு ஒரு வருஷமோ அல்லது இரண்டு வருஷங்களோ சிறைத் தண்டனை கிடைக்கிறது. இவன் சிக்கிக் கொண்டதால் எவ்வளவோ வியாபாரிகளுக்குப் பெருத்த நஷ்டம். எத்தனையோ துரதிருஷ்ட மக்களுக்குச் சில நாட்களுக்கோ, சில வாரங்களுக்கோ இன்பமில்லாது போய்விடுகிறது.

லாகிரிப் பொருள்களில் அபின், கஞ்சா, முதலியபல ரகங்களுண்டு. பெரும்பாலும் இவற்றைப் புகையாய் தான் உபயோகிப்பது வழக்கம். சிலவற்றை இஞ்செக்ஷன்மூலம்தான் உபயோகிக்கலாம். புகையாய் உபயோகிப்பவற்றைச் 'சிகரெட்டு'களாகச் செய்து விற்கிறார்கள். 'சிகரெட்டு' செய்வதற்காக உபயோகிக்கும் பொருளின் (கஞ்சாவோ, அபினோ) விலை ஐம்பது ரூபாயானால் அவற்றிலிருந்து செய்யப்படும் சிகரெட்டுகளின் விலை பத்தாயிரம் ரூபாய்களுக்கு மேலாகிறது. இதிலிருந்து இந்த வியாபாரத்தில் எவ்வளவு லாபமிருக்கிறதென்பதை அறிந்துகொள்ளலாம்.

லாகிரிப் பொருள்கள் பெரும்பாலும் இந்தியா, சீனா, ஆப்பிரிக்கா முதலிய வெப்பமண்டலப் பிரதேசங்களில் தான் பயிராகின்றன. இந்த தேசத்து மக்கள் தான் இப்பொருள்களைமேல் நாட்டு வியாபாரிகளிடம் மிகச் சிரமப்பட்டுக்கொண்டு எடுத்துச் செல்கிறார்கள்.

அந்த நாட்டுப் போலீசார்களிடம் சிக்கிக்கொள்ளும் குற்றவாளிகள் பெரும்பாலும் இந்தியர்களும் ஆப்பிரிக்கர்களும் தான்.

இவற்றை உபயோகிக்கும் பரிதாப நிலையிலுள்ள பாபிகளுக்கு இந்தப் பொருள்களால் தான் சற்று நிம்மதியும், மகிழ்ச்சியும் கிடைக்க வேண்டியிருக்கிறது. இவற்றை உபயோகிக்கும் மனிதன் இவற்றின் போதையில் ஆழ்ந்துகிடக்கும்போது தான் ஒரு சக்தி வாய்ந்த மனிதனென்றும் தன்னை எவராலும் வெல்லமுடியாதென்றும் வாழ்க்கையிலுள்ள கஷ்ட நஷ்டங்கள் ஒன்றுமே தன்னைப் பாதிக்க முடியாதவொரு உயர்ந்த நிலையை அடைந்தவனென்றும் பிரமைதோன்றுகிறது. சித்திரக்காரர் ஒருவர், தான் லாகிரிப் பொருள்களை உபயோகிப்பதனால் தான் தனக்குச் சித்திரமெழுத மனத்தில் தூண்டுதல் ஏற்படுகிறதென்று கூறுகிறார். இருபது வயதான ஒரு வாலிபன் மதுவை விட இம்மாதிரிப் பொருள்கள் விலையில் மலிவாயுள்ளதென்று கூறினானாம். பதினேழு வயதடைந்த ஒரு பெண் லாகிரிப் பொருளுள்ள சிகரெட்டைப் பிடிப்பதால் தான் தனக்கு காமமுண்டாகிறதென ஒப்புக்கொண்டாளாம். ஒரு சங்கீத வித்வானுக்கு லாகிரிப் பொருள்களை இஞ்செக்ஷன் செய்துகொண்டால் தான்

ஸ்வரங்களை நன்ருகப் பாட முடியுமாம்.

மேற்கூறிய பித்தர்களின் வார்த்தைகளிலிருந்து லாகிரிப் பொருள்களுக்கு மனிதன் எவ்வாறு அடிமையாகிவிடுகிருனென்பது தெளிவாகிறது.

லாகிரிப் பொருள்களை எந்த ராஜ்யத்திற்கும் கொண்டுபோவது மிகச் சிரமமான காரியமென்று கூறிேேமல்லவா? கோக்கோ காபி, பிஸ்கட் முதலிய பொதுமக்கள் தினந்தோறும் உபயோகிக்கும் டப்பாக்களில் இந்தப் பொருள்களை அடக்கஞ்செய்து பிஸ்கட், கோக்கோ, என்ற பாவனையில் கொண்டுவருவது ஒரு வழி. உடுக்கும் ஆடைகளின் தையலுக்குள் பொட்டலங்களாக வைத்துத் தைத்துக் கொண்டுவருவது மற்ருெரு வழி. குழந்தைகளுக்கு விளையாடக்கொடுக்கும் ரப்பர் பொம்மைகளுக்குள் அடக்கஞ் செய்தும் லாகிரிப் பொருள்களைக் கொண்டு வருவார்கள். மிகத் துணிவு படைத்த வேறு சிலர் ஏராளமான லாகிரிப் பொருள்களை ரப்பர் பாய்களில் தைத்து கப்பல்கள் துறைமுகத்தில் வந்து சேர்ந்தவுடன் கப்பல்களின் கக்கூஸ் ஜன்னல்கள் வழியாகச் சமுத்திரத்தில் எறிந்து விடுகிருர்கள். லாகிரிப் பொருள்கள் வியாபாரிகளின் தூதர்கள் சமுத்திரத்திலிருந்து இந்தப் பொட்டலங்களை யெடுத்து வியாபாரியிடஞ் சேர்ப்பித்துவிடுவார்கள்.

கப்பலில் கொண்டுவருவதற்கு வேறு ஒரு வசதியும் கிடைக்காவிட்டால் கப்பல் அதிகாரிகளுக்குத் தெரியாமல் கப்பலின் அடிபாகத்தில் லாகிரிப் பொருள்களின் பொட்டலங்களைப் பதுக்கிவிடுவார்கள். லாகிரிப் பொருள்கள் செல்ல வேண்டிய துறைமுகத்தை யடைந்ததும் லாகிரிப் பொருள் வியாபாரியின் ஆட்கள், கப்பல் அதிகாரிகளுக்கும் போலீசார்களுக்கும் தெரியாமல் நிசி வேளையில் சமுத்திரத்தில் நீந்திச் சென்று கப்பல் அடிப்பாகத்தில் பதுக்கப்பட்டிருக்கும் லாகிரிப் பொருள்களை எடுத்துக்கொள்வார்கள்.

இந்தக் குட்டுகள் எல்லாம் தெரிந்த போலீசார் எல்லாத் துறைமுகங்களிலும் கப்பல்கள் சேர்ந்தவுடன் லாகிரிப் பொருள்களுக்காகக் கப்பல்களின் அடிபாகத்

தையும், உள்பாகத்தையும் சோதனை செய்வது வழக்கம்.

சமீபத்தில் பத்திரிகைகளில் வெளிவந்த ஒரு தகவலிலிருந்து லாகிரிப் பொருள்கள் வியாபாரிகளின் பணவசதியும் துணிச்சலும் வியாபார சாமர்த்தியமும் நன்கு புலனுகிறது.

கெயிரோவிலுள்ள ஒரு லாகிரிப் பொருள் கள்ள வியாபாரி ஒரு ஆகாய விமானக் கம்பெனி உத்தியோகஸ்தரிடம் தன் உபயோகத்திற்காக ஒரு விமானத்தை ஒருதினம் ஏற்பாடு செய்ய முடியுமானல் 3000 ரூபாய் லஞ்சம் கொடுப்பதாகக் கூறினாராம்.

இந்த விமானக் கம்பெனி அதிகாரி இதைப் பற்றிப் போலீசாரிடம் தெரிவித்தார். போலீசார் ஒரு விமானத்தை இந்த லாகிரி வியாபாரி உபயோகத்திற்காக ஏற்பாடு செய்தனர். ஒரு லக்ஷம் ரூபாய்கள் விலை மதிப்புள்ள லாகிரிப் பொருள்கள் செல்லவேண்டிய இடத்திற்கு விமானம் பறந்துகொண்டிருக்கும் போது, விமானக் கம்பெனியின் சிப்பந்திகளைப்போல் வேஷந்தரித்திருந்த போலீசார் வியாபாரியின் ஆட்களைப் பலவந்தமாகப் பிடித்துவிட்டனர்.

இவ்வளவு பணவசதிகளோடும் உலகமெங்கும் பரவியுள்ள ஒரு வியாபாரமாகும் லாகிரிப் பொருள்களின் கள்ளக்கடத்தல்.

அரியும் சிவனும் ஒன்றே

ஒரு காலத்தில் பண்டரிபுரத்தில் நரஹரியென்ற பெயர்கொண்ட பொற்கொல்லன் ஒருவன் இருந்தான். அவன் மகா சிவபக்தன். நாள்தோறும் அதிகாலையில் அவன் வீமநதியில் நீராடிச் சிவபெருமானை அன்போடு தொழுது வந்தான். அவன் சிவபிரான்மீது கொண்டிருந்த பெரும் பக்தியால் கிருஷ்ணனின் விக்ரகத்தைக் கூடக் கண்ணால் பார்க்கலாகாதென்று உறுதிபூண்டிருந்தான். அவன் கிருஷ்ணன் கோயில் கோபுரத்தைக் கூட ஏறிட்டுப் பார்க்கமாட்டான். செந்தாமரை செஞ்சூரியனைக் காதலிப்பதுபோல் நரஹரி சிவபெருமானைக் காதலித்து வந்தான். இவ்வாறு நரஹரி வாழ்க்கை நடத்தி வந்தான்.

செல்வனான ஒரு வணிகன் தனக்கு ஒரு பிள்ளை பிறந்தால், கிருஷ்ணமூர்த்தியின் விக்ரகத்திற்கு ஒரு பொன்னங்கிசெய்து சாத்துவதாகப் பிரார்த்தனை செய்திருந்தான். எனவே மேற்படி கிருஷ்ணன் திருவருளால் அவனுக்கு ஒரு ஆண் குழந்தை தோன்றியது.

வணிகன் பண்டரிபுரம் போய் அங்குள்ள பிராமணர்களிடம் எந்த பொற்கொல்லன் கிருஷ்ண விக்ரகத்திற்குச் சிறந்த பொன்னங்கி செய்து கொடுப்பானென்று விசாரித்தான். பண்டரிபுரத்தில் மிகவும் சிறந்த பொற்கொல்லன் நரஹரியேயென்றார்கள் அவ்வூரார்கள். வணிகன் ஒரு தங்கக் கட்டியையும் பல நவமணிகளையும் நரஹரியிடம் கொடுத்து விக்ரகத்தின் அளவின் பிரகாரம் அங்கியைச் செய்யுமாறு வேண்டிக்கொண்டான். உடனே நரஹரி "நான் கிருஷ்ண விக்ரகத்தைக் கண்ணால் பார்ப்பதில்லை யென்று விரதம் பூண்டிருக்கிறேன். அதனால் நான் போய் அளவெடுக்கமாட்டேன். தாங்களே சென்று அளவுயெடுத்து வாருங்கள். அந்த அளவுக்குத் தகுந்தபடி நான் அங்கியைச் செய்து

தருகிறேன்'' என்முன். வணிகன், பொற்கொல்லன் பேச்சைக்கேட்டு வியப்படைந்து நேரே கோயிலுக்குச் சென்று விக்ரகத்தின் இடுப்பை அளந்து அந்த அளவை நரஹரிக்குத் தெரிவித்தான். நரஹரி அந்த அளவில் மிகவும் அழகிய அங்கியைச் செய்து கொடுத்தான்.

வணிகன் அன்று விசேஷ அபிஷேக அலங்காரங்கள் செய்து அங்கியைக் கிருஷ்ண விக்ரகத்திற்கு அணிவித்தான். ஆனால் அந்தோ, அங்கி மிகவும் சிறியதாயிருந்தது! உடனே அவன் அதனை நரஹரியிடம் திரும்பக் கொண்டு போனுன். நரஹரி அதனைச் சிறிது நீளமாகச் செய்து கொடுத்தான். அதனை வணிகன் திரும்பக்கொண்டு போய்ப் பார்த்த பொழுது அது அப்பொழுது மிகவும் பெரியதாயிருந்தது! அதனுல் வணிகன் மிகுந்த வருத்தமடைந்து ''கோபாலன் என்மீது கோபமாயிருக்கிருர்; அதனுல்எனது அங்கியை ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை போலும்'' என்று நினைத்துக்கொண்டான். பின்னர் அவன் நரஹரியிடம் சென்று அவனே கோயிலுக்கு வந்து அந்த அங்கியை விக்ரகத்திற்கு அணிவிக்கும்படி பெரிதும் வேண்டிக்கொண்டான். நரஹரி சிவபெருமான் திருவுருவத்தைத் தவிர வேறு எத்தேவர் உருவத்தையும் கண்ணுல் பார்ப்பதில்லையென்ற உறுதியை எவ்வாறு ஒழிப்பான்! அதனுல், அவன் தனது கண்களை ஒரு துணியால்கட்டிக் கொண்டு வணிகன் வழி நடத்தக் கோயிலுக்குச் சென்முன். நரஹரியின் செயலைக் கண்ட ஊரார் எல்லோரும் பலவாறு பேசி நகையாடினுர்கள். ஊரார் பேச்சைப் பொருட்படுத்தாமல் நரஹரி நேரே கோயிலையடைந்தான். வணிகன் அவனைக் கிருஷ்ண விக்ரகம் இருக்கும் மூலஸ்தானத்திற்கு அழைத்துச் சென்முன். நரஹரியின் கைவிரல்கள் கண்ணன் உருவத்தைத் தொட்ட பொழுது அவன் தன் தலையை உயர்த்தினுன். அவன் கண்கள் கட்டுண்டிருந்த போதிலும் அவன் சிவபெருமான் திருவுருவத்தைக் கண்டான். ஐந்து தலைகளும் பத்து கைகளும் கொண்டவராய்விளங்கினுர் ஆண்டவன். அவர் கழுத்தில் நாகாபரணம் விளங்கியது. அவர் தலை சடையாகத் திகழ்ந்தது.

அவர் திருவடிவம் முழுமையும் வெண்ணீறு விளங்கியது. அவர் புலியாடைத் தரித்திருந்தார். அவர் கழுத்து நீலகண்டமாகத் திகழ்ந்தது. 'இதென்ன விந்தை! நான் சிவபெருமானைக் காண்கிறேனே' யென்றான் நரஹரி. உடனே அவன் கண் கட்டை நீக்கிக் கண்ணைத் திறந்துபார்த்தான். அவன் முன் கிருஷ்ண மூர்த்தியின் வடிவம் தோன்றியது. தலையில் மணிமுடி திகழ்ந்தது. மார்பில் கௌஸ்துபம் விளங்கியது. அவர் இடுப்பில் பீதாம்பரம் இருந்தது. இவற்றையெல்லாம் நோக்கி வியந்த நரஹரி கண்களை மூடினான். அப்பொழுது திரும்பவும் சிவனையே கண்டான். திரும்பவும் கண்ணைத் திறந்து பார்த்தபொழுது கிருஷ்ணமூர்த்தியே அவன் முன் நின்றார்!

அரியும் சிவனும் ஒன்றே என்று அறியாதிருந்த தனது மடமையை நினைத்து நரஹரி வருந்தினான். பின்னர் சிவனையும் திருமாலையும் நரஹரி ஒரேவாறு புகழ்ந்து பாடத்தொடங்கினான். நரஹரி திரும்பவும் தான் செய்த பொன்னங்கியைக் கிருஷ்ண விக்ரகத்தின்மீது அணிவித்த பொழுது அது மிகவும் பொருத்தமாய் அமைந்து விட்டது!

பரலி சு. நெல்லையப்பர்

''பிறவா வரம் தரும்'' நகரத்திற்கே மரணம் வருமா?

நதிக்குப் பலியாகும் நகரம்

காசி நகரத்தின் விசேஷமென்னவென்ற கேள்விக்கு விடைதெரியாத ஹிந்துவே கிடையாது. ஆனால் இந்த கேள்விக்கு விடையளிக்கும் ஹிந்துக்களனைவருக்கும் காசி நகரத்திற்கு இயற்கையாய் ஏற்பட்ட விசேஷம் என்னவென்று தெரியாது. இந்தியாவிலேயே நதியை முகப்பாய்க்கொண்ட ஒரே நகரம் காசிதான்.

கங்கை நதியும், காசி நகரும் ஒன்று என்றுதான் கூறவேண்டும். கல்கத்தா நகரத்தருகிலும் கங்கை நதியின் கிளை ஒன்றிருக்கிறது. டில்லிக்கருகிலும் ஆக்ரா அருகிலும் யமுனை நதியுள்ளது. ஆனால் காசிக்கு கங்கை ஜீவனளிக்கும் அளவிற்கு வேறு ஒரு நகரமும் தன்னருகே ஓடும் நதியால் ஜீவன் பெறுவதில்லை.

காசியின் வாழ்க்கையும் அதன் தோற்றமும் கங்கை நதியை யொட்டியேதான். ஸ்நான கட்டங்களிலெல்லாம் நாள் முழுவதும் ஏதாவது நடந்துகொண்டேயிருக்கும். காலையில் பக்த கோடிகள் ஸ்நானத்திற்கு வருவார்கள். திரள்திரளாகப் பக்தர்கள் ஸ்நான கட்டங்களில் பிரார்த்தனை புரிவதைக் காணலாம். ஸ்நானத்திற்குப் பிறகு தேகத்தைப் பரிசுத்தமாக்குவதற்காக எண்ணெய் தேய்ப்பவர்கள் ஆயிரக்கணக்காய்க் காத்துக்கொண்டிருப்பார்கள். இவர்களிடம் பக்தர்கள் எண்ணெய் தேய்த்துக்கொண்டு தேகத்தைப் பரிசுத்தமாக்கிக்கொள்வதையும் பார்க்கலாம். மாலையிலும் ஸ்நான கட்டங்களில் ஏராளமான ஜனங்கள் கூடுவார்கள். அங்கு நடைபெறும் பக்திமார்க்க உபந்நியாசங்களைக் கேட்டு பக்தி வெள்ளத்தில் மூழ்குவார்கள்.

அங்குள்ள ஆலயங்களில் மாலை வேளையில் நடக்கும் பூஜையின்போது முழங்கும்

மணி ஓசையைக்கேட்ட யாரும் அதை ஆயுள் முழுவதும் மறக்கமுடியாது.

காசி நகரம் மிகப் பழைமையானது. இருபத்தைந்து நூற்றுண்டுகளாக ஹிந்துக்களின் புனித ஸ்தலமாக விளங்குகிறது. ஆனல் இந்த நகரத்தில் புராதனமான கட்டிடங்களே கிடையாது. முகமதியர்கள் இந்தியாவை ஆட்சி புரிந்தபோது, ஹிந்துக்களின் புண்ணியக்ஷேத்திரங்கள் கட்டிடங்கள் யாவும் அழிந்து போயின. காசி விஸ்வநாதர் ஆலயம் கூட அழிக்கப்பட்டு முகமதியர்களின் மசூதியாக மாற்றப்பட்டிருந்தது. இதனால் காசியில் இப்போதுள்ள கட்டிடங்கள் யாவும் சமீபத்தில் கட்டியவைதான்.

காசி நகரம் கங்கை நதியின் இடக்கரையிலிருக்கிறது. இங்கு கங்கை நதி வடக்கே நோக்கி செல்கிறது. இந்தியாவிலுள்ள நதிகள் பெரும்பாலும் தென்கிழக்கு திசையை நோக்கி ஓடுவதால் இங்கு கங்கை நதி வடக்கு திசையாய்செல்வதும் காசிக்குள்ள ஒருதனி மகத்துவமாகும்.

நதிக்கரையில் சுமார் நான்கு மைல்கள் தூரத்திற்கு காசி நகரம் வியாபித்துள்ளது. இந்த நான்கு மைல்கள் முழுவதும் ஸ்நான கட்டங்கள், மயான கட்டங்கள், ஆலயங்கள், ராஜாக்களின் அரண்மனைகள், பொதுமக்கள் வீடுகள் இவற்ருல் நிறைந்துள்ளது.

தசாஸ்வமேதா கட்டம் தான் எல்லாக்கட்டங்களிலும் மகத்துவம் வாய்ந்தது. இந்தக் கட்டத்தில் தான் பிரமதேவன் பத்து அஸ்வமேத யாகங்கள் நடத்திஞராம்.

மணிகர்ணிகா கட்டமும், அரிச்சந்திரா கட்டமும் தான் மயானக் கட்டங்களாகும்.

மணிகர்ணிகா கட்டத்தில் சவங்கள் எரியும் புகை இல்லாத நேரமே கிடையாது. இந்தக் கட்டிடத்தில் எரிப்பதற்குச் சவம் இல்லாத நாள்வந்தால், அன்றைக்கே காசிக்கு பெரும் ஆபத்து நேரிடுமென்பது காசி வாசிகளின் நம்பிக்கை.

வங்காளத்திலிருந்துகூட பிரம்மாண்டமான கப்பல்கள் காசி நகரம் வந்துகொண்டிருந்தன. இப்பொழுது பெரிய கப்பல்கள் வராவிட்டாலும் சிறிய படகுகள் ஆயிரக் கணக்கில் சரக்குகள்போக்கு

வரத்திற்காக வந்தும் போய்க் கொண்டுமிருக்கின்றன.

காசி நகரத்தில் கங்கை நதிக்கரையோரமாயுள்ள அரண்மனைகள் கண்கொள்ளாக் காட்சியளிக்கின்றன. இந்தியாவிலுள்ள சமஸ்தான ராஜாக்கள் எல்லோரும் அவரவர்கள் உபயோகத்திற்காக இங்கே அரண்மனைகள் கட்டியிருக்கிறார்கள்.

நதியின் களை நகரத்திற்கு இல்லை; குறுகலான சந்துகள், நெருக்கடியான கடைவீதிகள், அழகற்ற உயர்ந்த கட்டிடங்கள் இவற்றால் நிறைந்தது காசி நகரம் முத்தியளிக்கும் மூல' க்ஷேத்திரமான காசி விஸ்வநாதரின் ஆலயத்திற்குச் செல்லும் சந்திலிருக்கும் ஜனநெருக்கமும் கால் நடைகளின் கூட்டமும் கடைகளும் வீடுகளும் சூரிய ஒளியையே மறைத்து விடுகிறது.

புனித ஸ்தலத்திற்குச் செல்லும் பாதை இவ்வளவு விகாரமாயிருக்குமாவென்றே அனைவருக்கும் வெறுப்பு ஏற்படும்.

இந்தியாவிலுள்ள ஏழு புண்ணிய க்ஷேத்திரங்களில் காசி மிகவும் முக்கியம் வாய்ந்தது. ஹிந்து மதமும் புத்த மதமும் இங்கு உதயமாகி ஆசியா கண்டம் முழுவதும் பரவியுள்ளது. அதனால் காசிக்கும் புண்ணியம்தேடி வருவோர் ஹிந்துக்கள்மட்டுமல்ல. மங்கோலியா தேசத்து புத்த மதஸ்தர்கள் இங்கு வந்துதான் காசிக்கருகேயுள்ள சாரனாத் என்ற புத்தமத மூலஸ்தலத்திற்குச் செல்லவேண்டும்.

காசியின் தோற்றத்தையும் இன்றைய நிலையையும் நன்கு கவனிப்போர்களுக்கு ஒரு பெருங்கவலை ஏற்படலாம். இருப்பத்தைந்துநூற்றாண்டுகளாய் அறவே அழிந்துபோகாமலிருந்த காசி நகரம் இன்னும் எவ்வளவு காலம் இருக்கும்?

மதாபிமானமும் ஆசாரங்களும் க்ஷிணித்துக்கொண்டிருக்கும் இக்காலத்தில் காசிக்கு முன்பிருந்த பெருமை இல்லை. கண்ணைப் பறிக்கும் பளப்பளப்பான பட்டு ரகங்களுக்கு பேர் போயிருந்த காசியில் இப்போதுள்ள பட்டு நெசவாளர்கள் வேலையில்லாத்திண்டாட்டத்திற்காளாகி விவசாயம், ரிக்ஷா இழுக்கும் தொழில் முதலியவற்றில் ஈடுபட்டிருக்கிறார்கள். பரம்பரையாக புகழ்பெற்ற பட்டு

நேசவின் கைத்திறன் இப்போது அறவே மறைந்து விட்டது.

பொது மக்களிடையே வேலையில்லாத் திண்டாட்டமும், பட்டினியும் தாண்டவமாடுமிடத்தருகேதானே கம்யூனிஸம் ஒளிந்துகொண்டிருக்கும்?

வேற்றுமையே காணாத வேதாந்த தத்துவம் உதித்த இந்த புனித ஸ்தலத்தில் வேற்றுமையே அடிப்படையாகக்கொண்ட ஒரு தத்துவம் வளருவதும் காசி விஸ்வநாதரின் ஆக்ஞையோ?

நதிக்கரையிலுள்ள அநேக அரண்மனைகளும் எப்போதும் பூட்டியேயுள்ளன. கங்கைநதி அணு அணுவாய் கரையை ஆக்கிரமித்து அநேக கட்டிடங்களின் அஸ்திவாரங்களை இரையாக்கத் தொடங்கிவிட்டது. ஸ்நான கட்டிடங்களில் பிளவுகள் காணத் தலைப்பட்டு விட்டன.

இன்னும் சில வருஷங்களில் நதி இவற்றையும் விழுங்கிவிடும்.

ஸ்நான கட்டங்களையும் கட்டிடங்களையும் போதிய அளவு பாதுகாப்பதற்கு அளவற்றப் பணச் செலவும் உழைப்பும் தேவையாகும். கங்கா மாதாவிற்கு காசியை பலியாக்கிவிடுவதே நகரத்தை செப்பனிடுவதைவிட எளிதான காரியமென அநேகர் கருதுகின்றனர்.

Kirti N. Chaudhri By Courtesy of The Statesman, Calcutta

CONSULT

K. M. S. Press

1/17-C, DINROZE ESTATE
MOUNT ROAD, MADRAS-2

FOR ALL HIGH CLASS
JOB & BOOK WORK
IN ENGLISH & TAMIL

இந்திய நடனம்

இந்திய நடனம் தெய்வ வழிபாட்டிற்குரியது. நடனம் என்ற வார்த்தையை நினைக்கும் பொழுது தில்லையில் ஆனந்தத் தாண்டவமாடும் ஸ்ரீ நடராஜமூர்த்தியின் உருவம் தான் நம் கண் முன் தோன்றும். சிவபெருமான் தான், நடராஜ வடிவில் சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் என்ற பொருள்களுக்கிணங்க ஒரு கையில் "தமரு" என்றதோர் தோல் வாத்தியம், மற்றொரு கரத்தில் புனிதமான அக்னி, இன்னொரு கரத்தில் "அபய ஹஸ்தம்" ஆகியவற்றைத் தாங்கிக்கொண்டு, அதாவது "அண்டினவர்களை அன்புடன் ஆதரிக்கிறேன்" என்று பொருள் படவும் ஒரு காலின் கீழ் மாய உலகத்தை மயக்கவைக்கும் மண், பெண், பொன்னாசைகளை அழித்துவிடுவதுபோல் ராட்சதன் ஒருவனை மிதித்துக் கொண்டும், இடது காலைத் தூக்கி நர்த்தன மாடும் அப்பனின் இன்பக் கூத்து தானே இந்த ஆனந்த நடனம்.

நான்கு வேதங்களின் சாரத்திலிருந்து பிரமதேவனால் நாட்டிய வேதம் என்பது ஆக்கப்பட்டது என நம்பப்படுகிறது. தேவர்களின் தலைவனாகிய தேவேந்திரனுக்கு இந்த நாட்டிய வேதத்தை பிரமதேவன் கற்றுக் கொடுக்க முயற்சி செய்தார். ஆனால் இந்திரனுக்கு இது சுலபமாகக் கற்றுக்கொள்ளக் கூடியதாகத் தெரியவில்லை. ஆகையால் இந்திரன் இந்த நாட்டிய வேதத்தை பரதன் என்ற ஒரு நரனுக்குக் கற்றுக் கொடுக்க, அது அவன் பெயராலேயே பிறகு "பரத நாட்டியம்" என வழங்கலாயிற்று. பரத சாஸ்திரங்களுக்குட்பட்ட நாட்டியத்திற்கே இப்பெயர் கொடுக்கப்பட்டது. இது தவிர இன்னும் பல நாட்டிய முறைகள் இருக்கின்றன. ஆனால் பரத சாஸ்திர நாட்டியத்தை அடிப்படையாகக் கொண்டு தான் இவை நடை முறையிலிருந்து வருகின்றன. பிறகு பரதன் இவ்வுன்னதக் கலையைத் தெய்வப் பிறவிகளெனக் கருதப்படும் அப்ஸரஸ்களுக்கும், கந்தர்வர்களுக்கும் கற்றுக்கொடுத்தார்.

பிறகு நந்திகேசுவரர், ஆண் இனம் மட்டும் ஆடக்கூடிய தாண்டவ நடனத்தை பரதனுக்குக் கற்றுக் கொடுத்தார். எம்பெருமானுடைய பிராட்டியார் பார்வதிதேவியார் பெண்ணினம் மட்டும் ஆடக்கூடிய "லாஸ்ய" என்ற நடனத்தை இவருக்குக் கற்றுக் கொடுத்தார். உஷைக்கும் இதே நடனத்தை அவர் கற்றுக் கொடுக்க, உஷை இதை துவாரகையிலுள்ள கோபிகளுக்கும், அவர்கள் இந்த நடனத்தை சௌராஷ்டிரர்களுக்கும் முறையே கற்றுக் கொடுத்தார்கள். இம்மாதிரியாக இந்த உன்னதக் கலை இந்திய மக்களிடையே பரவலாயிற்று.

இந்திய சங்கீதத்தைக் காட்டிலும் இந்திய நடனம் மிக மிகப் பழைமையானது. பிரமனல் சிருஷ்டிக்கப்பட்ட தேவர்களும், கணங்களும் ஆடிய நடனங்களையும் ஊழிக் கூத்துக்களைப் பற்றியும் நாம் புராணங்கள் வாயிலாக அறிகிறோம். ராமாயணம், மஹாபாரதம் நடந்த காலத்தில் இவை இருந்ததாகத் தெரிகிறது.

நாட்டியக் கலையின் பல்வேறு அம்சங்களை ஊன்றிக் கவனிக்கும்போது நாளடைவில் புராதன அரசர்களின் ஆதரவினால் வளர்ச்சி யடைந்து முன்னுக்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறதென நம்பலாம். அநேக நூற்றாண்டுகளாக இப் பரத நாட்டியம் மிகவும் புகழப்பட்டதாகத் தெரிகிறது. நாட்டியக் கலை தேவதாசிகளுக்கே உரியதாக இருந்து வந்தது.

பிறகு முகமதியர்கள் ஆட்சி இந்தியாவில் நிலவிய காலத்தில் பரத நாட்டியத்திற்கு ஆதரவேயில்லை. அவர்கள் "கதக்" என்றதொரு நாட்டியத்தைப் புகுத்தினார்கள். வெள்ளைக்காரர்கள் ஆண்டு வந்த வரையிலும் பரத நாட்டியம் க்ஷீண தசையில் தான் இருந்தது.

இந்திய நடனத்தின் முக்கியத்துவம், அதன் அழகு, முக பாவத்திலும், அங்க அசைவுகளிலும் தான் பிரதிபலிக்கும். நாட்டியமாடுபவர் முக்கியமாகத் தன் கலையைத் தெய்வத்திற்குத் தான் சமர்பிக்க வேண்டும். பொது மக்கள் பார்த்து மகிழ ஆடிப் பிரயோஜனமில்லை.

அபிநயம் மூன்று வகைப்படும். அதாவது நாட்டியம், நிருத்தம், நிருத்தியம், என்பன. இத்துடன் ஒன்பது விதமான ரஸ பாவங்கள் உள்ளன.

அவையாவன :— சிருங்காரம், வீரம், ரௌத்ரம், ஹாஸ்யம், கருணை, பீபத்ஸம், அற்புதம், பயங்கரம், சாந்தம். இதைத் தவிர இன்னும் நான்கு ரஸங்களும் உள்ளன. அவை :— தாஸ்யம், சக்யம், வாத்ஸல்யம், மதுரம். இவை இந்திய சங்கீதக் கலையுடன் இணைந்திருக்கின்றன.

வெவ்வேறு உறுப்புக்களின் அசைவுகளைத் தெளிவுறக் காட்டுவதற்கு " அங்கிச அபிநயம் " என்று பெயர். இதில் மூன்று வகையுண்டு ; (1) அங்குரம், (2) நிருத்தம், (3) ஹஸ்த முத்திரைகள் என்பன.

கேரள நாட்டின் " கதகளி " நடனம் 900 முத்திரைகளைக் கொண்டு காண்பிக்கப்படுகிறது.

மிக உன்னதமான இக் கலை ஒரு குருவிடம் தான் கற்க வேண்டும். இல்லையேல் அதற்கு மதிப்பில்லை. மேலும் தீவிரப் பிரயாசையும் தேவை.

இந்தியாவில் நான்கு விதமான நடனங்கள் நடைமுறையிலிருந்து வருகின்றன. அவை (1) பரத நாட்டியம், (2) கதகளி, (3) கதக் (4) மணிபுரி. இவற்றில் மிகவும் புராதனமானதும் நளினமானதும் பரத நாட்டியம் தான். பரத நாட்டியம் என்றால் " பாவம் ", ராகம், தாளம் மூன்றும் சேர்ந்ததெனலாம்.

பதினெட்டாம் நூற்றாண்டில் கதகளி நடனம் தோன்றிற்று. ராமாயணம், மஹாபாரதம் முதலிய கதைகளை, மிகக் கவர்ச்சிகரமான உடைகள் அணிந்துகொண்டு மௌனமாக, அபிநயங்களுடன், வார்த்தைகளே பேசாமல் ஆடுவதுதான் " கதகளி ".

" கதக் " நடனம், ஹிந்து முகமதிய கலாசாரங்களிலிருந்து தோன்றியது. ஒருவிதமான " பாவத்தையும் காட்டாத இந் நடனம், இதன் " தாளகதி ", அதாவது கால்களின் தாளக் கட்டுக்குப் பெயர் போனது.

மணிபுரி நடனம், மணிபுரியில் தோன்றிற்று. சமூகம், மதப் பற்று இவற்றைக் கருத்தாகக் கொண்டது இது. நடனமாடுபவர் அடிக்கடி ஒருவித " கரதாளி " அல்லது கைத் தாளத்தைப் போட்டுக் கொண்டே ஆடுவார். கூட்டம் கூட்டமாக ஆடுவதற்கு இந்நடனம் மிக அழகாயிருக்கும்.

—கானப்பித்தன்

இயற்கை நம்மை கைவிடும்போது

உரம் மனிதனுக்கு அன்னை

●

செழிப்பான பூமியில் தான் பயிர்கள் வளருமென்பதை இன்றைய விஞ்ஞான வளர்ச்சி ஒரு மூட நம்பிக்கையாக்கி விட்டது. செழிப்பே இல்லாத பூமியில், அதாவது, பாலைவனத்தில் கூட எதை பயிர் செய்தாலும் செழிப்பாய் வளருவதற்குள்ள முறைகளை விஞ்ஞானிகள் வகுத்து விட்டனர்.

இரண்டாவது மகா யுத்தத்தின்போது ஆயிரக்கணக்கான படைகளை விவசாயத் தொழிலே காணாத இடங்களுக்குக் கூடப் போர் புரிவதற்காக அனுப்பவேண்டியிருந்தது. இந்தப் படைகள் இம்மாதிரி இடங்களில் தங்க நேர்ந்தபோது இவர்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யவும் நேரிட்டது. இதற்காக விஞ்ஞானிகள் நிருமித்த ஏற்பாடுகளை மனிதர்கள் நிரந்தரமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

பயிரிட லாயக்கற்ற பூமியென்றால் பூமியில் செழிப்பு இராது அல்லது பூமி மிகவும் வரண்ட பாறையா யிருக்கலாம். இம்மாதிரி பூமி உரத்தை வைத்துக்கொண்டு பயிர்களுக்கு ஊட்டமளிக்காது. இந்த நிலைமையைக் கண்ட விஞ்ஞானிகள் பயிர்களுக்கு ஊட்டமளிப்பதற்கு பிரத்தியேக வழிகளைக் கண்டு பிடித்துள்ளனர்.

பூமியில் செழிப்பு இல்லாவிட்டாலும் பயிர்கள் பூமிக்கடியில் வேரூன்ற முடியுமானால் அவற்றிக்கு ஊட்டம் மாத்திரை ரூபத்திலோ அல்லது பஸ்பமாகவோ செடியின் அடி பாகத்தில் போட்டு நீரை ஊற்றிவிட்டால் செடி அந்தச் சாரத்தை கிரகித்துக்கொண்டு செழிப்பாக வளரும். இச் செடியின் வேர்கள் பூமிக்கடியில் செல்லுமளவிற்கு பூமியைப் பண்படுத்தினால் போதும். பிறகு பூமியில் ஈரப் பசை குறையாமல் பாதுகாத்து வைத்தால் செடிகள் தானாகவே பூத்துக் காய்த்துச் சொரியும்.

இந்த விவசாய முறையில் காய்கறிகள் மட்டுமல்ல; நெல், கோதுமை, முதலிய அத்தியாவசியமான உணவுப் பொருள்களையும் பயிர் செய்யலாம்.

இந்த விவசாய முறைக்கு மற்றொரு பிரத்தியேக அம்சம் உண்டு. எந்த வழியிலும் பூமி பயன்படுத்த முடியாதவாறு பாறையான பூமியாயிருந்தாலும் அல்லது பயிரிட விரும்புபவருக்குப் பூமியே இல்லாதிருந்தாலும் பயிர் பச்சைகளை வளர்ப்பதற்கு ஏற்பாடுகள் செய்யலாம். கண்ணாடிப் பாத்திரத்திலோ அல்லது வேறு ஏதாவது பாத்திரத்திலோ வளருஞ் செடிகளை மெல்லிய கம்பிகளாகக் கட்டி நிற்கச் செய்து நீரை ஊற்றி அதில் ரசாயன உரங்களைக் கலந்து விட்டால் இயற்கையாய் வளரும் செடிகளைப் போலவே நன்றாகவே வளரும். ஒரு மனிதனுடைய வசதிக்கேற்ற இரண்டல்லது மூன்று பாத்திரங்களைத் தன் வீட்டிலுள்ள ஜன்னலருகே வைத்துக் கொள்ளலாம். வீட்டு மெத்தை வெளிப்பரப்பிலும் இவ்வாறு செடிகளைப் பயிர் செய்யலாம். இத்தகைய பூமியையே தொடாமல் பயிராகும் காய்கறிகளுக்கும் வித்தியாசம் ஒன்றுமே கிடையாது. நிபுணர்கள் புள்ளிவிவரங்கள் பிரகாரம் இயற்கை முறையில் பூமியில் வளரும் பயிர்களைவிட இரண்டல்லது மூன்று பங்கு அதிகமாக மேற்கூறிய செயற்கை முறை மூலம் பயிர் செய்ய முடிகிறது. விஞ்ஞானிகள் ஆராய்ச்சி மூலம் கண்டுபிடித்த இந்த நவீன விவசாய முறையை உபயோகப்படுத்த ஒரு உத்தமமான வழி யென்னவென்றால், எல்லாக் குடும்பங்களும் அவரவர்களுக்குத் தேவையான காய்கறிகளை அவரவர்களே பயிர் செய்து கொள்வதாகும்.

பயிரிட வழி வசதி பெற்றவர்களைப்பற்றி இங்கு குறிப்பிடவில்லை. ஒரு சிறு தோட்டங்கூட இல்லாத குடிசைகளிலும், நகரங்களிலுள்ள நான்கல்லது ஐந்து மெத்தைகள் கொண்ட கட்டிடங்களிலும் வசிக்கும் அநேக லக்ஷம் குடும்பங்களுக்கு மலிவாய் ஏராளமான காய்கறிகள் கிடைப்பதற்காகவும் இதன் மூலம் பூரண ஆரோக்கியம் பெறுவதற்காகவும் இந்த நவீன விவசாய வழியைக் கையாளவில்லையானால் நிபுணர்களின் ஆராய்ச்சி விழலுக்கு இறைத்த நீர் போல் தானே ஆகும்.

———

19875

[சிறுவர்களுக்கு ஒரு சீனக் கதை]

குள்ளனுக்கேற்ற குள்ளன்!

முன்னொரு காலத்தில் சீனுவில் சிங்சுங், சுங்சிங் என்று இரண்டு மந்திரவாதிகள் இருந்தார்கள். இருவரும் மிகப் புகழ் பெற்றவர்கள். மந்திர தந்திரங்களில் மிகவும் வல்லவர்கள்! ஆகாயத்திற் பறக்கவும், விரும்பியவர்களை விரும்பிய வடிவத்திற்கு மாற்றவும் வல்லமையுடையவர்கள். எனினும் தங்களுடைய வன்மைகளை நல்ல வழியிலேயே பயன்படுத்தி வந்தார்கள்.

ஒரு நாள் சிங்சுங், "நான் அடுத்த ஞாயிற்றுக்கிழமை சுங்சிங்கை என்னுடைய வீட்டிற்கு அழைத்து ஒரு விருந்தளிக்க வேண்டும். அப்பொழுது அவனுடைய சாப்பாட்டில் என்னுடைய மாயப் பொடியைக் கலந்து விடுவேன். அதைச் சாப்பிட்டவுடன் அவன் ஒரு கரடியாக மாறிவிடுவான். அவனை இப்படிச் சற்று நேரம் ஆட்டி வைத்த பின் என்னிடமிருக்கும் மாற்று மாயப் பொடியின் உதவியைக் கொண்டு அவனுக்கு மீண்டும் பழைய உருவத்தைக் கொடுப்பேன்" என்று எண்ணினன். அந்த எண்ணம் அவனுக்கு மிகுந்த உற்சாகத்தையும் கொடுத்தது.

அடுத்த ஞாயிற்றுக்கிழமை சுங்சிங் சிங்சுங் வீட்டிற்கு விருந்துச் சாப்பாட்டுக்காக வந்தான். இருவரும் சாப்பிட அமர்ந்தனர். தங்களிடமிருந்த மந்திர புஸ்தகங்கள், கோல்கள் கொடிகள் முதலியவற்றை பக்கத்திலிருந்த அலமாரியில் வைத்தனர். சாப்பாடு பரிமாறியதும் சிங்சுங் தன் விருந்தினருக்குத் தெரியாமல் அவனுடைய உணவில் தன் மனத் திட்டப்படி மாயப் பொடியைத் தூவி விட்டான்.

சாப்பாட்டுக்கு இடையே சிங்சுங் தன் நண்பனை நோக்கி "இதென்ன ஆச்சரியம், நீ கரடியாக மாறிக்கொண்டிருக்கிறயே" என்று பரிகாசமாகக் கேட்டான். இதற்குச் சுங்சிங் "நான் மட்டுமா உருவத்தில் மாறிவிட்டேன், நீயுந்தான் குரங்காய் மாறிக்

கொண்டிருக்கிறாய் போலிருக்கிறது'' என்றான். மிக ஆச்சரியத்துடனும் ஆத்திரத்துடனும் சிங்சுங் கண்ணாடியிலே பார்த்துக் கொண்டான். சுங்சிங் கூறுவது உண்மைதான் என்று அறிந்து கொண்டான்.

மந்திரவாதியின் சக்தி எவ்வாறிருக்குமென்று தான் உணரவில்லையென்று மிக விசனத்துடன் தெரிந்து கொண்டான். சிங்சுங் ஏனென்றால் தான் சுங்சிங்கைக் கரடியாய் மாற்ற வேண்டுமென்று நினைத்த மாத்திரத்திலேயே சுங்சிங், தன்னை ஏதாவது மாயத்திற்கு ஆளாக்கிவிடலாமென்பதை மறந்துவிட்டான்.

Adapted from *Eelakesari*

ராஜ சேவகம்!

மாறுவேடந் தரித்து அரசர்கள் இக்காலத்து பிரஜைகளிடையே நடமாடுவது அவ்வளவு சகஜமல்ல. ஆனால் இந்த நூற்றாண்டுத் தொடக்கத்தில் ஸ்பெயின் தேசத்தில் ஆட்சிபுரிந்த அரசனுக்கு இந்த வழக்கமிருந்ததாம்.

ஒரு சந்தர்ப்பத்தில் மாறு வேஷத்தில் இந்த அரசர் ஒரு சிறிய பட்டிணத்திற்குச் சென்று அங்குள்ள ஒரு ஹோட்டலில் தங்கினார். மாறுவேடதாரியின் தோற்றத்தைக்கண்ட ஹோட்டல்காரர் இவர் ஒரு சாதாரணப் பிரயாணி அல்ல. என்று தீர்மானித்தார். ஒரு நாள் காலையில் இவர் சுயக்ஷவரஞ் செய்து கொண்டிருக்கும்போது அருகே வந்து ''நீங்கள் ஒரு சாதாரணப் பிரயாணியைப்போல் தோற்றமளிக்கவில்லை. நம் நாட்டு ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவரோ நீங்கள்'' என்று கேட்டார்.

''ஆம், நான் ராஜ வம்சத்தைச் சேர்ந்தவன் தான்'' என்று பிரயாணி ஒப்புக்கொண்டார்.

ஹோட்டல்காரர்:—''இதை நான் அப்பொழுதே யூகித்துவிட்டேன். அரசருக்கே ஏதாவது பணிவிடைகள் செய்து வருகிறீர்களோ?''

பிரயாணி:—''தங்கள் கண்கள் அசாதாரணமானவை. எல்லா விஷயங்களையும் வெகு சீக்கிரத்தில் அறிந்துகொண்டு விட்டீர்களே, நீங்கள் கூறுவது உண்மை தான். நான் அரசருக்கே பணிவிடைகள் செய்யும் ஒரு ஆள் தான்.

ஹோட்டல்காரர்:—''அப்படியா? அரசருக்கு நீங்கள் தினந்தோறும் என்ன பணிவிடை செய்கிறீர்கள்!

பிரயாணி:—''இப்போது நான் அரசருக்கு க்ஷவரஞ் செய்துகொண்டிருக்கிறேன்.''

[இலங்கையிலிருந்தும் தென் ஆப்பிரிக்காவி லிருந்தும் இப்போது விரட்டப்பட்டுக்கொண் டிருக்கும் இந்தியர்களுக்கு ஐ. நா. தான் வழி காட்ட வேண்டும்.]

விரட்டப்படும் இந்தியர்களுக்கு வேறிடங் கொடுங்கள்

●

வாழ்விழந்து வறுமைப்பட்டு ஆளொரு தேசமாய் அலையும் கதியை அடைந்துள்ள இந்த இந்திய சமூகத்தைத்தான் நாம் என்று குறிப்பிடுகிறேன். இன்று உலகத்திலேயே இந்திய ஜாதி பரதேசியாகி யிருக்கிறார்கள். ஏன்? உலகத்தின் எல்லாக் கண்டங்களிலும் தீவுகளிலும் நாம் கூலிகளாகக் குடியேறி யிருக்கிறோம்!

உலகத்தைக் காணப் புறப்பட்ட வெள்ளையர்களைப் போலவே வாழ்வு காணப் புறப்பட்ட இந்தியர்களின் குடியேற்றத் தொகை அவர்களைவிடப் பல மடங்கு ஆகியிருக்கிறது. இந்த மண் எங்களுக்குச் சொந்தம் என்று அவர்கள் கொடி கட்டிய இடத் திலே நாங்கள் இந்த மண்ணில் பிறந்தவர்கள் என்ற உரிமை கொண்டாடும் நிலைக்கு வந்திருக்கின்றனர் இந்தியர்கள். கிழக் கில்லை, மேற்கில்லை; எங்குமே ஏகமாய்க் குடியேறிய இந்த இந்தியர்கள் பிறந்த மண்ணை விட்டு வெளியேறக் காரணமென்ன? ஜனப் பெருக்க மென்று நிபுணர்கள் காரணம் காட்டுகிறார்கள். உலகத்திலே எந்த நாட்டிலுமே பெருகாத ஜனத்தொகையா இந்த நாட்டில் மட்டும் பெருகி விட்டது? இந்த நாட்டிலே வாழும் வசதியே பற்றாமல் போகுமளவா ஜனத்தொகை பெருகி விட்டது? இதில் ஓரளவு உண்மை இருக்கலாம். பெருகும் ஜனத்தொகைக்கு ஏற்ப வாழ்க்கை வசதிகள் பெருகவில்லை, பெருக்கப்படவில்லை!

இந்தியா வறுமைப் பட்டதும் அதன் சந்ததியினர் பரதேசிகளாகப் போனதும் சென்ற இரு நூற்றுண்டுகளில் நடந்த சுரண்டல் ஆட்சியினுல் வந்த கேடுதான்.

சுதந்திரம் பெற்ற பிறகும் பிரிட்டனை நினைத்தால் ஆத்திரம் வருவதற்கு இது தான் முக்கிய காரணம். இந்த நாட்டு பல கோடி மக்களை, உடுத்தும் துணிக்கும் மான்செஸ்டர், கிளாஸ்கோ மில்களை நம்பிக் கிடக்கும் சூழ்ச்சியை எவ்வளவு வெற்றிகரமாகச் செய்துவிட்டிருக்கிறுர்கள்! இந்தியா அடிமையாகி வெளி நாட்டுச் சரக்குகளுக்கு சந்தைக் கடையானதும் அன்னிய ஆட்சி மட்டுமில்லை, அரசியல் சூழ்ச்சியும் நடந்துவிட்டிருக்கிறது. நமது சுதந்திரப் போராட்டத்தோடு சுதேசிப் போராட்டத்தையும் ஊக்கி வந்த நோக்கம் காந்திஜியின் தீர்க்க தரிசனம்தான். இந்திய சமுதாயத்தின் அரசியல் சுதந்திரமும், பொருளாதார மீட்சியும் ஏக காலத்தில் நடைபெறுவது அவசியம் என்று அவர் நம்பினுர்.

இன்று அரசியல் சுதந்திரம் பெற்றுகிவிட்டது. பொருளாதார மீட்சி ஏற்படவில்லை. அதனுல் தான் நாம் உள்நாட்டில் வறுமையிலே வாடுகிறோம். வெளி நாட்டிலே பிழைப்புக்காக அலைகிறோம். இதிலே பரதேசித்தனம் இருக்கிறது என்று உலகம் கூறினுல், இந்தியப் பரம்பரை அப்படியில்லை. சமீபத் தலைமுறையில் தான் இது நடந்திருக்கிறது என்று நாம் சொல்ல வேண்டிவரும்.

பட்டும், மணியும், வாசனைத் திரவியங்களும் கப்பல் கப்பலாய் வெளி நாடுகளுக்கும் அனுப்பி வைத்த மக்களின் செல்வமும் சீரும் எந்த நிலைமையில் இருக்க வேண்டும். எப்படிச் செல்வம் கொழித்திருக்க வேண்டும்? அப்படி யிருந்ததோர் நாடு இன்று வறுமைப்பட்ட கதையை எவ்வாறு எடுத்துரைப்பது?

அபரிமிதமாக முன்னேற்றம் அடைந்துள்ள ஐரோப்பிய நாடுகளெல்லாம் ஒரு காலத்தில் நம்மிட மிருந்துதான் சரக்குகளை எதிர்பார்த்துக் கிடந்தன. இன்று அந்நிலைமை அங்கில்லை. வாழ்க்கை வசதி அதிகமாகப் பெருகிபிருக்கிறது. சுண்டைக்காய் பருமன் அளவுள்ள நாடுகளில் ஜனத் தொகை கணிசமாகவே பெருகி யிருக்கிறது. ஆனுல் அந்த அளவு அங்கு வாழ்க்கை

வசதியையும் பெருக்கி யிருக்கிறார்கள். ஆகவே அந்த நாட்டு மக்கள் வெளி நாடுகள் போனாலும் பரதேசிகளாக மதிக்கப்பட மாட்டார்கள்!

கண் காணாத தீவுகளிலும் கண்டங்களிலும், மலைச்சரிவுகள், காடுகள், தோட்டங்களிலே நாதியற்ற இந்தியன் கூலியாகப் பாடுபடுவதிலே பரதேசித்தனமில்லை. வாழ்க்கைப் போராட்டம் இருக்கிறது. அவன் குடி பெயரும் நிலையை விளக்க உலகத்தின் ஆரம்ப சரித்திரத்தை எடுத்து வைத்துப் பேசவேண்டியதாயிருக்கிறது. மழையின்மையும், வறுமையும் மிஞ்சுங் காலத்திலே மத்திய ஆசிய மக்கள் உலகத்தின் பல பாகங்களுக்குக் குடி-பெயர்ந்தது பல சமயங்களில் நடந்திருக்கிறது. இன்றைய ஐரோப்பியர்கள் அப்படிக் குடியேறினவர்களின் சந்ததிகளே. இந்த மண்ணுக்கு நாங்களே உரிமையானவர்கள் என்று மார் தட்டும் பல தேசத்தினர்கூட அந்த மண்ணுக்கு அன்னியர்கள் தான் என்று சரித்திரம் காட்டிக்கொடுத்து வருகிறது. ஆஸ்திரேலியரும் அமெரிக்கரும் அந்த நாட்டின் சுதேசிகளேயல்ல. பரதேசிகளே!

ஆகவே மேற்கு அட்லாண்டிக் தீவுகளிலிருந்து கிழக்கு கினியா தீவுகள் வரை இந்தியன் புகுந்திருப்பதிலே ஒரு ஆக்கிரமிப்பு நோக்கமில்லை. எல்லாம் வாழ்வைக் காணும் அலைச்சல் தான். காடுகள், ரப்பர் தோட்டங்கள், மலைச் சரிவுகள், தொழிற் சாலைகள் எல்லாவற்றிலுமே அவன் வாழ்வைக் காணத்தான் புகுந்திருக்கிறான். இதில் ஏதும் அரசியல் நோக்கமில்லை. வயிற்றுப் பிழைப்புக்கு வந்த மக்களைப் பார்த்து மற்றவர்கள் வயிற்றெரிச்சல் படுவதேன்? அந்த நாட்டு வாழ்விலும் முன்னேற்றத்திலும் உப்பும் சோறுமாய்க் கலந்துள்ளவர்களை அன்னியர் என்று ஆப்பிரிக்கா முதலிய இடங்களிலிருந்து விரட்டும் படலம் ஆரம்பித்தது ஏன்?

இந்தியர்கள் குடியேற்றம் மற்ற நாடுகளின் அரசியல் வாழ்வையே பாதிக்குமளவு பெருகிவிட்டிருக்கிறது என்று ஆப்ரிக்க காலனி நாடுகளின் உள்நாட்டு வெள்ளை மந்திரி கூக்குரலிடுகிறார். அண்டையிலே யுள்ள இலங்கை நாட்டிலே இந்தியரை விரட்டும் படலம் எப்படி யெப்படியோ கையாளப்

படுகிறது. நேற்று வரையிலும் தாயும் பிள்ளையுமாய் இருந்த மக்களிலே "இந்தியர் அன்னியர்" என்ற உணர்ச்சி வளர்ந்து வருகிறது. இப்படித்தான் மற்ற இடங்களிலும் இந்திய துவேஷ உணர்ச்சி வரம்பின்றி தலை காட்ட ஆரம்பித்திருக்கிறது. இதற்கு மறைமுகமாக ஐரோப்பியர்களின் 'கை வேலை' வேறு நடக்கிறது. உடல் நிறத்தின் கருப்பு, வெளுப்பைக் கண்டு கொள்கை வகுக்கும் அந்த மக்கள் எல்லாம் அங்கு துரைமார்களாகவே இன்னும் வாழ்கிறார்கள். கபடமற்ற மற்ற கூலிகள் அன்னியரென்று முத்திரையிட்டு வெறுக்கப்படுகிறார்கள்!

இந்தியர்களின் குடியேற்றப் பிரச்னை ஒரு தனி நாட்டு விவகாரமல்ல. அது ஒரு உலகப் பிரச்னை. உலகத்தில் ஜனத்தொகை மிகுந்துள்ள நாடுகள் ஆசியாவில்தானுள்ளன. இங்குள்ள மக்களே உலகத்தில் மிகப் பிற்போக்கான வாழ்க்கைத் தரத்தில் இருந்து வருகிறார்கள். இந்த மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்காக வைத்தியம், கல்வி, பொருளாதாரத்திற்காக ஏராளமாகச் செலவழித்து வரும் ஐ. நா. இந்தப் பிரதேசங்களில் பெருகியுள்ள ஜனத்தொகையின் தேவையை நிறைவேற்ற முன்வர வேண்டும். பிறந்த மண்ணில் வாழ வகையின்றித் தவிக்கும் இம் மக்களை ஜனப் பழக்கம் மிகக் குறைவாயுள்ள தீவுகள், பிரதேசங்களிலே குடியேற்ற வேண்டும். நாடு, இனம், நிறம் இவற்றிற்கும் அப்பாற்பட்டது இந்த குடியேற்றப் பிரச்னை! பல்கிப் பெருகி வரும் மக்களிடையே வீடில்லை, உணவில்லை, வைத்திய வசதியில்லை, தொழிலில்லை. இந்த நிலைமையிலே அவர்களுக்காகச் செலவழிக்கப்படும் பணம் எல்லாம் வீண்தான்.

ஏதுமே இல்லாத இந்த மக்களை வேறு இடங்களில் குடியேற்றி வாழ வைப்பதுதான் நல்ல முயற்சி. ஜனத்தொகையைப் பரவலாகக் குடியேற்றும் முயற்சியினலே உலகத்தில் இன்று பெருகியுள்ள ஜனப் பெருக்கத்தை தீர்க்க முடியும். வாழ்வின்றித் திண்டாடும் பல கோடி மக்களை மிகச் சுலபமான வழியில் வாழ்வு காண வைக்கலாம்.

"உதயன்"

GANZON BROS.

DRESS SPECIALISTS

3, THOPE STREET

TRIPLICANE MADRAS-5.

★

Clothing Contractors to Government of India Supply Dept., Railways & Public Bodies, Ready-to-Wear-Garments Manufacturers and Exporters.

★

IN the hands of the Master-Tailors and Cutters of GANZONS, Clothes acquire a subtle distinction beyond the power fo imitation.

★

GANZONS have set standards of superb craftsmanship-Standards that have been· the pride of the firm of Ganzons for over a quarter century, to the present day.

மேல்நாட்டு சமூக பழக்கவழக்கங்களில் மிகச் சுவையான ஒன்றைப் பற்றி.

வாழ்க்கைக்கு அரங்கேற்றம்

உறவினர்கள் வீடுகளிலேயோ அல்லது நண்பர்களின் வீடுகளிலேயோ ஏதாவது கலியாணம், விருந்து போன்ற விசேஷங்களுக்குச் செல்வோரெல்லாம் குடும்பத்தோடு செல்வதுதான் நம் நாட்டில் வழக்கம். எந்த விசேஷமாயினும், ஏராளமான குழந்தைகள்கூடி கலகல வென்றிருந்தால்தான் நம் நாட்டினருக்குத் திருப்தி.

மேல் நாட்டில் விவாகங்கள், விருந்துகள் முதலிய விசேஷங்களுக்குச் சிறு குழந்தைகளை அழைத்துச் செல்வது வழக்கமில்லை. விசேஷங்களென்பது வயது முதிர்ந்தவர்களே கலந்து கொள்வதற்கும் சந்திப்பதற்குமான சந்தர்ப்பங்களாகும். இம்மாதிரிச் சந்தர்ப்பங்களில் சிறு குழந்தைகள் மிக உபத்திரவமாயிருக்கும். அதனால் இவற்றிற்குச் சிறு குழந்தைகளை அழைத்துச் செல்லாமலிருப்பது, வசதியுள்ள மத்திய குடும்பங்களிலும் உயர்தரக் குடும்பங்களிலும் ஒரு கண்டிப்பான கட்டுப்பாடாகும்.

குழந்தைகளை வளர்ப்பதற்கும் வீட்டிலே ஒழுங்குபடுத்துவதற்கும் மேல்நாட்டில் வசதியுள்ளவர்கள் கையாளும் முறைகளே அலாதியானவை. நம் நாட்டில் வீட்டுக்கு ஒரு விருந்தாளி வந்துவிட்டால் அவர்களுக்கு வெறுப்பு ஏற்படும் அளவிற்குக் குழந்தைகள் அமர்க்களஞ் செய்வது வெகு சகஜம். மேல் நாட்டில் இந்த விஷயங்களிலெல்லாம் மிகச் சிறந்த வழிகளைப் பின்பற்றுகிறார்கள். வசதியுள்ளவர்கள் குழந்தைகளை யெல்லாம் சதா கவனித்துக்கொண்டு அவற்றிற்கு மரியாதை, பள்ளிக்கூடப் பாடங்கள் முதலியவற்றைப் போதிப்பதற்காகப் பிரத்தியேகமாக ஒரு ஸ்திரீயை ஏற்பாடு செய்வது வழக்கம்.

இந்த ஏற்பாட்டின் உபயோகங்கள் பல. சாதாரண நாட்களில் குழந்தைகள் பெற்றோர்களுடன் சேர்ந்து உணவருந்துவார்கள். வீட்டிற்கு விருந்தாளிகள் யாரேனும் வந்தால் அந்தக் குழந்தைகள் அவர்களுடைய பராமரிப்பு ஆசிரியையுடன் தான் உணவருந்தவேண்டும். விருந்தாளிகள் யாராவது குழந்தைகளைப் பார்க்க விரும்பினால் விருந்து முடிந்தபிறகு குழந்தைகளை இவர்களிடம் அழைத்துச் செல்வார்கள். பெற்

றோர்கள் வெளியே நண்பர்களின் வீட்டிற்கோ, உறவினர்கள் விட்டிற்கோ விருந்து விசேஷங்களுக்காகச் செல்லும் பொழுது பராமரிப்பு ஆசிரியையுடன் தான் உணவருந்தவும் தங்கவும் வேண்டும். விருந்து முதலிய சந்தர்ப்பங்களில் நேரிடும் அசௌகரியங்கள் குழந்தைகளைப் பாதிக்காமலிருப்பதற்கும் குழந்தைகளினால் பெற்றோர்களுக்கும் பிறருக்கும் இடைஞ்சல்கள் ஏற்படாமலிருப்பதற்கும் மேல்நாட்டார் வகுத்துள்ள வழி எவ்வளவு சிறந்தது !

குழந்தைகள் அதிலும் குறிப்பாகப் பெண்கள் பருவமடைந்து தன் வீட்டு விருந்துகளிலும் விசேஷங்களிலும் பங்கெடுத்து கொள்வதும் நண்பர்கள், உறவினர்கள் வீடுகளுக்குச் சென்று விசேஷங்களில் பங்கெடுத்துக் கொள்வதும் ஒரு விசேஷ வைபவமாகும்.

பெண்கள கலியாணப் பருவமடைந்து விட்டனரென்று பெற்றோர் அபிப்பிராயங்கொண்டபின் அவர்களைக் கூண்டுக்கிளிகளாக வைத்துக்கொண்டிருக்கமாட்டார்கள். முதல் முதலாகப் பரத நாட்டியத்திற்கு அரங்கேற்றம் போல் ஒரு விருந்து வைபவத்திற்கு ஏற்பாடு செய்வார்கள். இது சாதாரணமாக மேல் நாட்டு ரீதியிலுள்ள ஒரு "டான்ஸ் பார்ட்டி" தான்.

இங்கிலாந்தில் பெண்கள் வெளியே வரும் அரங்கேற்றங்கள் யாவும் லண்டனில்தான் நடைபெறும். லண்டன் ஸ்திரவாசிகளல்லாத பிரபுக்களும் பிரமுகர்களுங்கூட லண்டனுக்கு வந்துதான் தங்கள்பெண்களின் அரங்கேற்றங்களுக்கு ஏற்பாடு செய்வார்கள். இந்த 'டான்ஸ் பார்ட்டி'க்கு வசதியுள்ள பெற்றோர்கள் ஐம்பதினாயிரம் ரூபாய்களிலிருந்து ஒரு லக்ஷம் ரூபாய்கள் வரை செலவிடுவார்கள். 'வெளியேவரும்' பெண்களின் ஆடைகள் மட்டுமே முப்பதினாயிரம் ரூபாய்கள் விலை மதிப்பிருக்கும்.

கிராமத்திலுள்ள பிரமுகர்களுக் கெல்லாம் லண்டனில் சொந்த வீடுகளிருக்காது. ஆகையினால் இந்த 'டான்ஸ் பார்ட்டி'யை ஏதாவது பெரிய ஹோட்டல்களில் தான் ஏற்பாடு செய்துகொள்ளவேண்டும். இந்த வைபவத்திற்கு ஐநூறிலிருந்து ஆயிரம்பேர்கள்வரை அழைப்பு அனுப்பப்படும். இந்த விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் உண்ணும் ஆகாரங்கள், குளிர்ந்தபானங்களுக்கு, 'ஷாம்பெயின்' போன்ற மதுபானங்களுக்கும் முப்பதாயிரம் ரூபாய்கள் வரை செலவாகும். ஒரு பெண்ணுக்காக இந்தமாதிரி ஒரு வைபவத்தை நடத்திவிட்டால் அவளை வேறு பிரமுகர்கள் நடத்தும் விருந்துகளுக் கழைப்பார்கள்.

கிராமங்களிலிருக்கும் பிரமுகர்களுக்கு லண்டன் நகரத்து பிரமுகர்களையும் லண்டன் நகரத்தில் நடத்தவேண்டிய முறை

களையும் பற்றி அநேகமாய் தெரியாமல்தானிருக்கும். இம் மாதிரிப் பணக்காரர்களுக்கு உதவிபுரிய லண்டன் நகரத்துப் பிரபுக் குடும்பங்களைச் சேர்ந்த ஸ்திரீகள் எப்போதுமே தயாரா யிருக்கிறார்கள். முதல் முதலாக நடத்தும் 'டான்ஸ்' மூலமாகப் பெண்ணை அழைக்கப்படும் வேறு விருந்துகளுக்கு அவளை அழைத்துச் செல்வதற்கும் முக்கியமான பிரமுகர்களுக் கெல்லாம் அவளை அறிமுகப்படுத்துவதற்கும் முடிந்தால் இங்கிலாந்து ராஜ குடும்பத்தினர் நடத்தும் விருந்துகளுக்குப் பெண்ணை அழைத்துச் சென்று ராணியைக் கண்டு வணக்கஞ் செய்விப்பதற்கும் இருபதினாயிரம் ரூபாய்கள்வரைக்கும் மேற்கூறிய பிரபுக் குடும்பத்தைச் சேர்ந்த ஸ்திரீக்குக் கொடுக்கவேண்டும்.

லண்டன் நகரத்திற்கு வந்து மேற்கூறிய வைபவங்களெல்லாம் முடிவதற்காக இரண்டல்லது மூன்று மாதங்கள் பிரபுக்களும் பிரமுகர்களும் தங்குவது வழக்கம். இவ்வளவு பணச் செலவில் பருவமடைந்த பெண் 'வெளிவருவதன்' உத்தேசம் ஒரு கணவன் கிடைப்பதற்காகத் தான்!

நன்மைக்கு அறிகுறி!

இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன் தமது ராஜ்யப் பிரதமர் ஜவஹர்லால் நேருவின் தங்கையான ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் உலகமெங்கும் சுற்றுப்பிரயாணஞ் செய்து, இந்தியாவின் விடுதலைக்காகக் கிளர்ச்சி செய்து வந்திருந்தார். ஒரு சந்தர்ப்பத்தில் பிரிட்டனிலும் இதே கிளர்ச்சியில் ஈடுபட்டு ஒரு கூட்டத்தில் பேச நேர்ந்தது. அந்தக் கூட்டத்தில் ஒரு ஆங்கிலச் சீமாட்டியும் ஆஜராயிருந்தாள். பிரிட்டிஷார் இந்தியாவில் புரிந்த அக்கிரமங்களைப்பற்றி ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி மிகவும் வன்மையாகக் கண்டித்துப் பேசினாள். இதைக் கேட்டுக்கொண்டிருந்த ஆங்கிலச் சீமாட்டி மிகவும் ஆத்திரங் கொண்டு "பிரிட்டிஷார்கள் உன் நாட்டில் இரண்டு நூற்றுண்டுகளாக இருந்திருக்காவிட்டால் உன் கதி என்னவாயிருக்கும்" என்று உனக்குத் தெரியுமா என்று சீறினாள்.

"பிரிட்டிஷார் உன் நாட்டுக்கு வருவதற்கு முன்பு விதவைகளை மாண்டுபோன கணவர்களோடு சேர்த்தே எரித்து வந்திருந்தார்கள் என்பதை மறந்துவிட்டாயா? நீ உயிரோடிருப்பதே பிரிட்டிஷார் உன் நாட்டுக்கு புரிந்த நன்மைக்குத் தக்க அறிகுறியாகும்" என்றும் தொடர்ந்து கூறினாள்.

உழுவதற்கு யானை

பொதுவாகத் தென்னிந்தியாவில் யானைகள் ஆலயங்களில் திருவிழாக்களின்போது ஆண்டவன் ஊர்வலத்திற்கு வாகன மாகவும், வனாந்திரங்களில் மரங்களைத் தூக்குவதற்காகவும் உபயோ கப்படுத்தப்படுகின்றன. உத்தரப் பிரதேசத்திலிருந்து வரும் தகவல் கள், யானைகளுக்கு, நமக்கு இதுவரை தெரியாத ஒரு புது உப யோகமிருக்கிறதென்று கூறுகின்றன. இங்கு யானைகளை நிலத்தை உழுவதற்குப் பயிற்சியளிக்கிறார்களாம். தினந்தோறும் ஒன்றரை ஏக்கர் நிலத்தை ஒரு யானையால் உழ முடியுமாம். யானைகளை எருதுகளுக்குப் பதிலாக உபயோகிப்பதில் விவசாயிகளுக்கு அவ்வளவு திருப்தியில்லை. ஏனென்றால் யானைக்குத் தீனி போடுவது ஏழை உழவனால் எப்படி சாத்தியமாகும்?

விவசாயிக்கு யானையைப் பற்றி வெறுப்பாயிருப்பதைப் போலவே யானைக்கும் விவசாயத்தைக் கண்டால் வெறுப்புத்தான். தன் பலத்தாலும் புத்தியாலும் மிக வலுவுள்ள மரங்களைத் தூக்க வும், இழுக்கவும் கூடிய யானையை நிலத்தை உழச் செய்தால் அதனுடைய கௌரவத்திற்குக் குறைவாகத்தானே அது கருதும்!

Statesman, New Delhi.

புஸ்தகம் படிக்கையில் தூக்கம் வரும்

அசோகா உற்சாகம் தரும்

சிறுவர் கதைகள் !

●

ஒரு சிறுமி மிக உற்சாகத்தோடு விளையாடிக் கொண்டிருந்தாள். அவள் 'டாக்டர்'; நோயாளிகள், அவளுடைய விளையாட்டுப் பொம்மைகள்.

இந்தப் பொம்மை நோயாளிகளைத் தவிர வெளியிலிருந்தும் நோயாளிகள் டாக்டரை அழைப்பார்கள். இம்மாதிரி ஒரு நோயாளி வந்து அழைத்தபோது சிறுமி அவசரத்தில் வீட்டுக் கதவைத் திறந்துவிட்டு வெளியே ஓடினாள்.

உடனே அவள் தாயார் அவளைச் சற்றுக் கோபத்தோடு அழைத்து "கதவைச் தாளிட்டுப் போ" வென்று அதட்டினாள். சற்று நேரங் கழித்து, சாவதானமாகத் தாயார் பெண்ணின் விளையாட்டைக் கவனித்தாள். வெளியே சிகிச்சைக்காக அழைத்துச் சென்ற நோயாளி எப்படியிருக்கிறான்" என்று விளையாட்டாகச் சிறுமியைக் கேட்டாள். 'டாக்டர்' சிறுமி "ஆத்திரத்துடன் அவன் உயிர் போய்விட்டது. நீ என்னைக் கதவைத்தாளிடச் சொன்னதால் அவனைப் போய்ப் பார்ப்பதற்குத் தாமதமேற்பட்டுவிட்டது; அதனால் அவன் மாண்டுவிட்டான்" என்றாள்.

★

சிறுவன் ஒருவன் தன் பள்ளியிலிருந்து வீட்டுக்கு ஓட்டோடியும் வந்து தனக்குப் பரிசாய்க் கிடைத்த ஒரு புத்தகத்தை மிகவும் பெருமையோடு தன் தந்தையிடங் காண்

பித்தான். அந்தப் பரிசு இயற்கைப் பாடத்தில் தேர்ச்சிக்காக தனக்குக் கிடைத்ததென்று தந்தையிடங் கூறினன்.

"ஆசிரியர் என்னிடம் மயிலுக்கு எத்தனைக் கால்கள் என்று கேட்டதற்கு மூன்று கால்கள் என்று பதிலளித்தேன்" என்று தொடர்ந்து கூறினன்.

தந்தை:— "மயிலுக்கு ஏதடா மூன்று கால்கள், இரண்டு கால்கள் தானே!"

சிறுவன்:— "மற்றெல்லாப் பையன்களையும் விட நான் தான் கால்களின் எண்ணிக்கையைக் குறைவாகக் கூறினேன்."

★

ஒரு சிறுவன் ஒரு மூட்டையைத் தூக்கிக்கொண்டு தன் வீட்டிலிருந்து வெளியே வந்து தன் வீடுகளையும் பக்கத்து வீடுகளையும் சுற்றிச்சுற்றி நடந்து கொண்டிருந்தான். ஒரு போலீஸ்காரன், இவன் இவ்வாறு சுற்றிக்கொண்டேயிருப்பதைக் கண்டு "மூட்டையைத் தூக்கிக்கொண்டு ஏன் இப்படிச் சுற்றுகிருய்" என்று கேட்டான்.

சிறுவன்:— "நான் வீட்டைவிட்டு வெளியேறி விட்டேன்."

போலீஸ்காரன்:—"வெளியேறியதற்கு அடையாளம் தாஞ இப்படிச் சுற்றிக்கொண்டிருப்பது?"

சிறுவன்:—"நான் சிறு பையனுனதால் ரஸ்தாவைத் தாண்டக் கூடாதென்று என் பெற்றோர்கள் எனக்குக் கூறியுள்ளார்கள். அதனுல் தான் நான் இவ்வாறு வீட்டையே சுற்றிக் கொண்டிருக்கிறேன்."

★

தன் வகுப்பு மாணவிகள் பொதுவாக விஷயங்களை எவ்வளவு சிரத்தையாகக் கவனிக்கிறுர்கள் என்பதைச் சோதிப்பதற்காக ஆசிரியை, "நீங்கள் ஒரு அறையைத்

திறந்து, அதில் நிறையச் சிலந்தி வலைகளைக் கண்டால், அதற்கு என்ன காரணம் சொல்வீர்கள்'' என்று கேட்டாள்.

இந்தக் கேள்விக்கு அந்த அறையைச் சுத்தஞ்செய்து வெகு நாட்களாய் விட்டன. அந்த அறையை எவரும் உபயோகித்துக் கொண்டிருக்கவில்லை. வீட்டுச் சொந்தக்காரிக்கு அறையைச் சுத்தமாக வைத்துக் கொள்ளத் தெரியாது என்றெல்லாம் பதில் கூறினார்கள் சில மாணவிகள்.

ஒரு மாணவி "அந்த அறையில் சிலந்திகள் நுழைந்துவிட்டன'' என்று பதில் கூறினாள்.

★

ஒரு பையன் வீட்டுக்கு வந்ததும் தன் தாயாரிடம் "அம்மா, எனக்கு ஒரு நல்ல காரியத்திற்காக கிடைத்த வெகுமதியைப் பார்'', என்று தன்னிடமிருந்த காலணாவைக் காண்பித்தான்.

தாயார் :- "நீ என்ன நல்ல காரியஞ் செய்தாய்?''

பையன்:- நான் "பக்கத்து வீட்டுராமுவை கீழே தள்ளி தலையில் குட்டிக்கொண்டே யிருந்தேன். அடிப்பதை நிறுத்தினால் எனக்குக் காலணாத் தருகிறேன் என்றான். நான் அடிப்பதை நிறுத்தி பெற்ற காலணாத்தான் இது!''



சரஸ்வதியின் சத்துரு

★

இலக்கியக்காரர்களுக்கோ இத்தெய்வம் (சரஸ்வதி) குல தெய்வம். அவர் இதனைச் சுடர் செய்யும் உண்மையுடன் போற்றவேண்டும். எதுகை மோனைகளுக்காகச் சொல்ல வந்த பொருளை மாற்றிச் சொல்லும் பண்டிதன் சரஸ்வதி கடாக்ஷத்தை யிழந்துவிடுவான். யமகம், திரிபு முதலிய சித்திரக் கட்டுகளை விரும்பிச் சொல்லுக்குத் தக்கபடி பொருளைத் திரித்துக் கொண்டு போகும் கயிறு—பின்னிப் புலவன் வாணியின் திருமேனியை நோகும்படி செய்கின்றான். அவசியமில்லாத அடைமொழிகள் கோப்பவன் அந்த தெய்வத்தின் மீது புழுதியைச் சொரிகின்றான்.

உலகத்தாருக்குப் பொருள் விளங்காதபடி இலக்கியஞ் செய்வோன் அந்தச் சக்தியைக் கரித்துணியால் மூடுகிறான்; வெள்ளைக்கலை யுடுத்துவதில்லை. மனமறிந்த உண்மைக்கு மாறு சொல்லும் சாஸ்திரக்காரனும் பாட்டுக்காரனும் சரஸ்வதிக்கு நிகரில்லாத பாதகம் செய்கின்றனர்.

இலக்கியத்துக்கு தெளிவும் உண்மையுமே உயிரெனலாம். இவ்வுயிருடைய வாக்கே அருள்வாக்கெனப்படும்.

—பாரதியார்

காணக் கண் வேண்டாமே!

"ஒருவர் தன் கழுத்தின் பின் புறத்தால் பார்க்கலாம்" என்று கூறினால் அதைக் கேட்டு இக்காலத்தில் நாம் ஆச்சரியப் பட வேண்டியதில்லை. ஆனால் இவ்வாறு பார்ப்பவருக்குத் தலையின் பின் புறத்தில் கண்கள் அமைந்திருக்கின்றன என்று அர்த்தமில்லை. விஞ்ஞானிகளின் இன்றைய ஆராய்ச்சிகளின் முடிவுப் பிரகாரம் நம் உடல் மீதுள்ள தோலின் மூலம் நாம் பார்க்க முடியும்.

இம் முறையை முதன் முதலில் லூயி பாரிகோல் என்ற பிரெஞ்சு விஞ்ஞானி கண்டு பிடித்தார். ஜூலெ ரொமெய்ன் என்னும் புனை பெயருடன் பிரெஞ்சு பாஷையில் பல நூல்கள் இயற்றிப் பிரசித்தி பெற்றிருக்கிறார். யுத்த காயங்களினாலோ அல்லது வேறு எந்த காரணத்தினாலோ குருடானவர்களின் வாழ்க்கையை மலரச் செய்கிறார். குருடர்கள் பார்வை வேண்டாமென்று சொல்லுவார்கள்? இம் முறையை விஞ்ஞானிகள் பரீட்சை செய்தார்கள். கண் நல்ல நிலைமையிலே உள்ள சாதாரண மக்களுடைய கண்களையே நன்றாகக் கட்டி குருடு போல் செய்து பல பிரபல விஞ்ஞானிகளும் வைத்தியர்களும் சேர்ந்து இப் பரீட்சை நடத்தினார்கள்.

நம் உடல் தோல் ஸ்பரிச உணர்ச்சிக்காக மாத்திரம் ஏற்பட்டதன்று. அது வேறு வேலைகளையும் செய்யும் என்று ரொமெய்ன் கருதினார். இதன் விளைவாகவே இவர் கண்களின்றிப் பார்க்கக்கூடிய ஓர் இயந்திரத்தைக் கண்டு பிடித்தார். ஸ்பரிச உண்ர்ச்சி, வியர்வை ரூபத்தில் அழுக்கை வெளியேற்றுதல், காற்றை உள்ளே இழுத்தல் ஆகிய மூன்று வேலைகளையும் நம் தோல் செய்கையில் ஏன் இன்னும் மற்ற வேலைகளையும் செய்யக்கூடாது என்று யோசித்தார். நம் தோலுக்கு அடியில் சில நரம்புகள் இருப்பதாகவும் அவற்றின் உபயோகத்தை நாம் இன்னும் அறியவில்லை யென்றும் அவர் நம்பினார்.

முதலில் உலகத்தில் ஜீவராசிகள் உற்பத்தியான காலத்தில் அவற்றிற்குக் கண் இல்லை என்றும் காலப் போக்கில் தான் கண் என்னும் ஓர் உறுப்பு அவற்றிற்கு உண்டாயிற்று என்றும் அதற்கு முன் அவை தசையின் மூலம் தான் பார்த்தன என்றும், பிறகு கண்களின் உபயோகம் அதிகரித்ததினால் தசை, பார்க்கும் சக்தியைச் சிறிது சிறிதாக இழந்து விட்டதாகவும் அவர் நினைத்தார்.

ரொமெய்ன் கண்டு பிடித்த இயந்திரத்தை பல விஞ்ஞானி கள் பரிசோதிக்கக் கூடினுர்கள். ஒரு பெண்ணின் கண்களை ஒளி புகாதபடி கட்டிவிட்டார்கள். பல பொருள்களை அவள் முன் காண்பித்து அவை யென்ன என்று கேட்டதற்கு அவள் ரொமெய்ன் கண்டுபிடித்த இயந்திரத்தின் உதவியினுல் பொருள்களை ஸ்பரிசித்து அவற்றைச் சரியாகக் கூறிய தோடு அவற்றின் நிறங்களையும் தவறின்றிக் கூறினுள். பிறகு ஒருவர் எட்டை எழுதுவது போல் கையை அசைத்துக் காண்பித்ததற்கு அதையும் சரி யாகக் கூறிவிட்டாள். சிறிய காகிதங்களில் எழுதியிருந்த விஷயங்களையும் பிழையின்றிப் படித்தாள்.

—T. S. ஜானகி

சினிமா கானத்தை வெறுக்கும் பிச்சைக்காரன்

ரயிலிலோ, பஸ்ஸிலோ எங்கு சென்ருலும் சினிமா பாட்டுக்கள் காதில் விழாத இடமே இல்லையென்று கூறலாம். ஹோட்டல் ரேடியோ மூலம் இந்த சினிமா கானம் காதில் விழாத இடங்களில், சினிமாப் பாட்டுக்களைப் பாடும் பிச்சைக் காரன் வந்துவிடுகிருன். அரை வயிற்றுக் கஞ்சிக்காக சினிமா பாட்டுக்களைப் பாடவேமாட்டேன் என்ற மனே திடம் கொண்ட பிச்சைக்காரன் ஒருவனும் நாகபுரியில் இருக்கிருன். இவன் வழக்கம்போல் ஒரு நாள் ரயில் வண்டியில் ஏறிப் பக்தி ரஸமான பாட்டுக்களைப் பாடினுன். சில பிரயாணிகள் அவனிடம் சினிமாப் பாட்டுக்களைப் பாடச் சொன்னுர்கள். முடியாதென்று கூறி அவர்கள் கோரிக் கைக்கு இவன் இணங்கவில்லை. ஒரு பிரயாணி அவனிடம் சினிமாப் பாட்டு பாடினுல் ஒரு ரூபாய் கொடுப்பதாய்ச் சொன்னுர். அதற்கு முடியாதென்று கூறிவிட்டான். இன் னெரு பிரயாணி, சினிமாப் பாட்டுகள் பாடினுல் பத்து ரூபாய்கள் கொடுப்பதாகச் சொன்னுர். அதற்கும் சினிமா பாட்டுக்கள் பாட முடியாதென்று மறுத்து விட்டான்! அவனே ஒரு பத்திரிகை நிருபர் கேட்டதற்குத் தான் சினிமாப் பாட்டுக் களைப் பாடுவதில்லை யென சபதஞ் செய்திருப்பதாகக் கூறினுன்.

"Rupbani"

சப்த ஜாலங்கள்

★

திடீரென்று காலில் முள் குத்தினாலோ அல்லது வேறு ஏதாவது வேதனை ஏற்பட்டாலோ நாம் 'ஐயோ' என்று தான் சப்தம் போடுகிறோம். ஒரு ஆங்கிலேயரோ, அமெரிக்கரோ இது மாதிரி சந்தர்ப்பங்களில் "ஔச்" என்று சப்தம் போடுகிறார். ஹங்கேரி தேசத்தவர் "யாய்" என்று சப்தம் போடுகிறார்.

ஜப்பானில் தச்சர், ஆணி அடித்துக் கொண்டிருக்கும் போது சுத்தி ஆணியில் படாமல் கையில் பட்டால் 'ஈட்டீ' என்று சப்தம் போடுவார். ஸ்பெயின் தேசத்துத் தச்சருக்கு இம்மாதிரி கையில் சுத்தி பட்டால், 'ஹாயி' என்று கூச்சல் போடுவார்கள். எகிப்திலும் போர்ச்சுகல் தேசத்திலும், 'ஆய்' என்று சத்தம் போடுவார்களாம். பிரெஞ்சு தேசத்துச் தச்சர் "ஏய்,, அல்லது "உயி" என்று சப்தம் போடுகிறாராம். இத்தாலி தேசத்துத் தச்சர் 'எய்யோ' என்று சப்தம் போடுகிறாராம். பின்லாந்து தேசத்துத் தச்சர் "பாய்" "பாய்" என்று கூச்சலிடுவாராம். போலந்து தேசத்துத் தச்சர் 'டாலிபாக்' என்று சப்தம் போடுவார். ஜீவராசிகள் போடும் ஐயோ என்ற சப்தத்தில் இவ்வளவு ரகங்களிருக்குமானால் ஜடப் பொருள்களின் சப்தங்களுக்கும் அநேக ரகங்களுண்டு. உதாரணமாக கத்தரிக்கோலை எடுத்துக் கொள்ளுங்கள். அமெரிக்காவில் இந்த சப்தம் 'ஸினிப்' 'ஸினிப்' என்று கேட்குமாம். பின்லாந்து தேசத்தில் 'கின்னிட்ஸ்' 'கின்னிட்ஸ்' என்று கேட்கிறது. போர்ச்சுகல் தேசத்திலோ 'டெர்ரே' 'டெர்ரே' என்று மாறி விடுகிறது. ஸ்வீடனில் 'சினிப்' 'சினிப்' என்றும், கிரீஸ் தேசத்தில் 'கிரிட்ஸ்' 'கிரிட்ஸ்' என்றும் கேட்கிறது. சீனாவில் கத்தரிக்கோல் சப்தம் 'ஸூ' 'ஸூ' என்பதாகும். இத்தாலியில் 'கிரீ' 'கிரீ' என்றும் ஸ்பெயினில் 'ரிக்கி' 'ரிக்கீ' என்று கத்திரிக்கோல் சப்தமிடுகிறதாம்.

நம் நாட்டில் டெலிபோன் மணி ஓசையைக் கேட்டிருப்போர்களுக்குப் பிற நாடுகளில், டெலிபோன் மணி எவ்வாறு சப்தமிடுகிறதென்பதை அறிய ஆவலாயிருக்கும். கிரீஸ் தேசத்து டெலிபோன் 'டிரிங்' 'டிரிங்' என்று கேட்கும். போர்ச்சுகல் தேசத்தில் மணி ஓசை 'டிலிம்' 'டிலிம்' என்று கேட்கும். ஹங்கேரியில் "சிங்கிலிலிங்" என்று கேட்கும் இத்தாலியில் 'டிலின்' 'டிலின்' என்று கேட்கும். பின்லாந்தில் 'கிலி' 'கிலி' என்று கேட்கும்.

நீங்கள் பீங்கான் தட்டுகளை கீழே போட்டிருக்கிறீர்களா? இங்கிலாந்தில் கீழே விழும் பீ

கான் தட்டுகள் 'கிராஷ்' என்று சப்தம் போடும். டென் மார்க்கில் பீங்கான் தட்டுகள் கீழே விழுந்தால் 'கிளிங்' என்ற நாதம் கேட்கும்.

பருமனை மனிதன் சருக்கிக் கீழே விழும்போது கேட்கும் சப்தம்தான 'சட்ராபூஸ் பூம்' என்ற சப்தம், போர்ச்சுகல் தேசத்தில் பீங்கான் தட்டுகள் கீழே விழுந்தால் கேட்கும்.

பின்லாந்து தேசத்தில் 'கிராட்ஸ்' என்று கேட்கும். சீனவில் 'குவாலாலா' என்றும் இத்தாலியில் 'பாட்டாட்ராக்' என்றும் ஹங்கேரியில் 'சிர்-சுர்' என்றும் பீங்கான் கீழே விழுந்து உடையும் போது சப்தம் கேட்கும்.

இத்தகைய சப்த வேறுபாடுகளின் உண்மைபென்னவென்று ஆராய்ந்தால் அதற்குத் தக்க பதில் இல்லே. ஏனென்ருல் அழகு என்பது பார்ப்பவர் கண்ணிலே தான், தோற்றத்தில் இல்லே என்ற தத்துவப் பிரகாரம் கேட்கும் சப்தங்களின் வேற்றுமைகளும் கேட்போரின் காதில் தான் உள்ளது சப்தங்களில் இல்லே, என்ற முடிவுக்குத்தான் வரவேண்டும்.

அழகிய பூவின்
ஆரோக்கியம் தரும் கிழங்கு

"பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை" என்று தாமரையின் அழகை கவி வர்ணித்தான். அழகில் தாமரை இவ்வளவு சிறந்ததானல் மனிதனுக்குப் பயன்படும் பொருள்களிலும் தாமரையின் கிழங்கும் மிகவும் சிறந்ததாகும்.

காச நோய்க்கு தாமரைக் கிழங்கு ஒரு கைகண்ட மருந்தாகும். ஆகாராதிகளுடன் தாமரைக் கிழங்கையும் சேர்த்து கறியாக சமைத்து உண்ணலாம். மற்ற காய்கறிகளேப் போல் இதைப் பச்சையாகச் சாப்பிட வேண்டுமென்ற கட்டுப்பாடு கிடையாது. இக் கிழங்கு கிடைக்காத சமயங்களில் உபயோகிப்பதற்காக இது அகப்படும் போது சேகரித்து துண்டுகளாக நறுக்கி நிழலிலே உலர்த்தி வைத்துக் கொள்ளலாம். வாரத்திற்கொரு முறையாவது தாமரைக் கிழங்கை ஆகாராதிகளோடு சேர்த்து உண்டு வந்தால் நோய் ஒன்றும் அணுகாது என்பது வைத்திய நிபுணர்களின் அபிப்பிராயம்.

மனிதன் தவிக்கும் தவிப்பு!

தினந்தோறும் எத்தனையோ பிறப்புகள் நிகழ்கின்றன. எவ்வளவோ பேர் தென் திசைப் பிரயாணம் செய்கிறார்கள். நாம் அறிந்தது தான்.

ஏதோ நமக்குத் தெரிந்த பேர்கள் இறந்து விட்டால்-நமது உறவினர்கள் மாண்டு போனால் மட்டும் நெஞ்சம் துன்பத்தால் வருந்துகிறது. அதுவும் கொஞ்ச நேரமோ, கொஞ்ச காலமோ தான் பிறகு இறந்தவனை மறந்தே விடுகிறோம்.

இறந்தவனின் பிணம் வீட்டில் கிடக்கும் நேரத்தில் - அவன் கடைசி பிரயாணம் செய்கையில் - இடுகாட்டில் இறுதி வீட்டைப் பெறுகையில் மட்டும் நம் உள்ளத்தில் தத்துவ தரிசனம் ஏற்படுகிறது. பிறப்பின் நிலைமையையும், வாழ்வின் பொய்மையையும் பற்றிக் கதைக்கிறோம். ஆனால், மயானக் கரையைத் தாண்டியதுமே எல்லாம் மறந்து போய் விடுகிறது.

நம்மைப் போலவே பல பட்டைச் சொக்கநாதப் புலவருக்கும் மரணச் சடங்குகளிலே கலந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது. ஞானோதயமும் ஆயிற்று.

'பெருத்த அநியாயமாக வல்லவோ இருக்கிறது?' என்று தொடங்கிய சிந்தனை மேலும் விரிந்தது.

'இந்த உலகத்திலேயே இருந்து விடலாம் என்றால் அந்தப் பாழாய்ப் போன யமன் விடுவதில்லை! வாழ்வு முடிந்துபோனதும் உடலை விட்டு உயிரைப் பிரித்துக் கொண்டு போவது அவன் தொழிலாம். ஆம்!

இங்கிருக்க என்றால்
ஏமன் ஒட்டான்.

'தொலைகிறது. அங்கே-மறு உலகத்திலேயாவது போய், 'ஹாய்'யாக இருக்க முடிகிறதா? "போ, பூமியில் பிற" என்று தள்ளி விடுகிறான் பிரமன். ஹூம்!

இவ்விடம் விட்டு
அங்கிருக்க என்றால்
அயன் ஒட்டான்.

'இங்கு வந்தால்தான் நம்முடைய பழைய உடலைப் பார்க்க முடிகிறதா? அதைப் பூமியோ நெருப்போ கொண்டுபோய் விடுகிறது!

இந்த எண்ணம் வந்ததும் புலவருக்குக் கவலை பிறந்து விடுகிறது. இந்த உடலை எப்படியாவது காப்பாற்றிக்கொள்ளவேண்டும். இறப்பதிலிருந்து மீள இயலாது. பிறப்பதும் தவிராது. பின்பு திரும்பி வரும்போது பழைய உடலிலேயே, இருக்க நேர்ந்து விட்டால்?

எங்கு வைத்துப்
பேணுவேன் இவ்
வுடலை?

என்று கவலைப்படலானார் புலவர்.

கவலை முதிர ஒரு வழியும் புலப்பட்டது. நேராகக் கோவிலுக்குப் போனார்.

எதிரே சந்நிதியில் வீற்றிருக்கும் சிவலிங்கப் பெருமானைக் காணக் காண புலவருக்குக் கோபம் மிகுந்தது.

'எல்லாம் இந்தப் பித்தனின் விளையாட்டினால் வந்த வினையல்லவா? அழிக்க ஒருவனையும் ஆக்க ஒருவனையும் இந்தப் பிறை சூடும் பெருமான் படைத்திரா விட்டால் இந்த வம்பெல்லாம் இராதல்லவா?

அதற்குள் புலவருக்கு மற்றொரு கருத்துத் தோன்றியது. மனிதர் படும் துயரம் எப்படித் தெரியும்? அவன் தான் தாணு-நிலைபேறாய் நிற்பவனாயிற்றே பிறந்திறந்து இளைக்கும் துன்பம் அவன் எங்கிருந்து தெரிந்து கொள்ளப் போகிறான்?

பித்தா பிறைசூடும்
தாணுவே சொக்க
நாதா.

அரைக் கேள்வியும் அரைச் சந்தேகமுமாக முடித்து விட்டார், தம் பாட்டைக் கவிஞர்.

உலக வாழ்வு அநித்தியமானது தான் ஆனால் வேதாந்திகள் அதைச் சொல்லும் முறையினால் வாழ்க்கையின்—உடலின்—இன்ப துன்பங்களில் பழுத்துப்போன நம் மனத்தில் வாழ்க்கையின் அநித்யம் என்ற உண்மை உறைப்பதில்லை. அவ்வளவேன்? கண்ணெதிரே தினசரி காணும ஜனன மரணங்கள் கூட நம்மைச் சிந்திக்க வைக்க முடியவில்லை என்றால்!

ஆனால், பல பட்டைச் சொக்கநாதப் புலவரின் கவிதையோ? முழுப்பாட்டையும் சொல்லிப் பாருங்கள்.

இங்கிருக்க என்றால்
ஏமன் ஒட்டான் இவ்
விடம் விட்டு

அங்கிருக்க என்றால்
அயன் ஒட்டான்—
எங்கு வைத்துப்
பேணுவேன் இவ்வுடலைப்
பித்தா பிறைசூடும்
தாணுவே சொக்கநா
தா

பிறப்பதும் சாவதும் தவிர்க்க முடியாதவை என்பது பசு மரத்தாணிபோல் நெஞ்சில் படிந்து விடுகிறதல்லா?

—க. சோமசுந்தரம்



★ ஜம்பணா—நந்தி கூட்டுத் தயாரிப்பான ‘குடும்ப’த்தில் ஜி. வரலக்ஷ்மி, ஸ்ரீராம், சாவித்திரி முதலியோர் தோன்றும் ஒரு காட்சி. ★

திரட்டு

சிறந்த மாதாந்திர கட்டுரைப் பொக்கிஷம்

1/C 17, டின்ரோஸ் எஸ்டேட்,
மவுண்ட் ரோடு, சென்னை

- ★ பல ஆங்கிலப் பத்திரிகைகளின் சுவையான சார மிக்க விஷயங்கள்
- ★ 50-க்கு மேலான அரசியல், சமூக, விஞ்ஞான கட்டுரைகள், உண்மைக் கதைகள் !
- ★ பலதரப்பட்ட விஷயங்கள் !
- ★ பொது மக்களுக்கும் மாணவர்களுக்கும் இன்றியமையாதது.
- ★ சிறந்த முறையில் நிறைந்த பக்கங்களைக் கொண்டது.

தனிப்பிரதி விலை எட்டணாதான்.
வருட சந்தா ரூ. 6

மானேஜர், **திரட்டு**
1/C, 17, டின்ரோஸ் எஸ்டேட்,
மவுண்ட் ரோடு, சென்னை-2.

அன்புடையீர்,

திரட்டுக்கு நான் சந்தாதாரராகச் சேர விரும்புகிறேன். இத்துடன் ஒரு வருட/அரை வருட சந்தா ரூ............அனுப்பியுள்ளேன். பத்திரிகையை அடியிற்கண்ட விலாசத்திற்கு அனுப்பி வையுங்கள்.

வணக்கம்.

விலாஸம் :—

....

....

....



ஆரூடத்திற்கு மேல் ஆண்டவன்

1942-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் தான் இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தின் கடைசி அத்தியாயம் ஆரம்பமாயிற்று. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் கூட்டம் பம்பாயில் கூடிற்று. இதற்கு வழக்கம் போல் காந்திஜி மாகாண காங்கிரஸ் தலைவர்களுக்கு உபதேசஞ் செய்ய விஜயஞ் செய்திருந்தார். தலைவர்கள் அவரவர் மாகாணங்களில் உள்ள நிலைமையைப் பற்றி விரிவாகக் கூறினார்கள்.

காந்திஜி மாகாண விவரங்களை மிகச் சிரத்தையாகக் கேட்டுக் கொண்டிருக்கும்போது ஒரு தலைவர் இவ்வாறு பேசினார்.

“நாரதர் ஒரு சந்தர்ப்பத்தில் விஷ்ணுவைச் சந்திக்கச் சென்றிருந்தார். நாரதரிடம் மகா விஷ்ணு அப்பொழுது நிலவியிருந்த மழை யில்லாத் திண்டாட்டத்தைப் பற்றி விசாரித்தார். நாரதருடைய ஜோதிடப் புத்தகங்கள் பிரகாரம் மழை பெய்யுமா பெய்யாதா வென்று கேட்டார்.

இதற்கு ஜோசியப் பிரகாரம் மழையே பெய்யாது என்று கூறினார் நாரதர். ஆனால் வெளியே செல்லும்போது குடையை விரித்துக் கொண்டே புறப்பட்டார். “மழை பெய்யாதானால் ஏன் குடையை விரித்துப் புறப்பட வேண்டும்?” என்று நாரதரை மகாவிஷ்ணு கேட்டார். இதற்கு நாரதர் ‘ஜோதிடப் புத்தகம் மழை பெய்யாது என்று கூறுகிறது, ஆனால் உண்மையில் மழை பெய்வதும் பெய்யாம லிருப்பதும் என் ஜோசியப் பிரகாரம் அல்லவே! தங்கள் மனம் போல் தானே யாவும் நடக்கும்” என்றார்.

இந்தக் கதையை முடித்துவிட்டு இந்தத் தலைவர் காந்திஜியிடம் மாகாணங்களிலுள்ள நிலைமையும் மாகாணப் பிரஜைகளின் அபிப்பிராயம் எப்படியிருந்தாலும் தங்கள் வாக்குப் பிரகாரம் தானே ராஜ்யத்தில் நடக்கும். ஆகையினால் தங்கள் தீர்மானத்தைக் கூறுங்கள். அது போல் நடந்துகொள்வார்கள்” என்று கூறினார்.

அசோகா சுகந்த பாக்குத்தூள்

மிருக வைத்தியர் வேண்டாம்

•

அமெரிக்க மிருகக் காட்சிச் சாலை யொன்றில் ஒரு சமயம் சோதனை நடந்தது. அதாவது நோயுற்ற பிரயாணிகள் எவ்வளவு தூரம் தாமே வைத்தியம் செய்து கொள்ளுகின்றன வென்பதைப் பரிசோதித்தார்கள். நோயுற்ற பிராணி சாதாரணமாய் வசிக்கும் இடத்தில் கிடைக்கக் கூடிய புற்கள், இலைகள், முதலிய இயற்கைப் பொருள்கள் அனைத்தையும், அதை அடைத்து வைத்திருந்த கூட்டுக்குள் போட்டுக் கதவைச் சாத்திவிட்டார்கள். அவற்றிலிருந்து அந்த மிருகம் ஒருவித இலையைத் தின்றது. சில நாட்களுக்குள் அந்த மிருகத்தின் நோயும் தீர்ந்து விட்டது. சாதாரணமாக மிருகங்கள் தற்காப்பு மருந்துகளை முன்னதாகவே உண்டு நோய் வராமல் தடுத்துக் கொள்ளுகின்றன.

அமெரிக்கக் கரடிகள் இளவேனிற் காலத்தில் தங்கள் இருப்பிடத்தை விட்டு வெளிக் கிளம்புகையில் அவற்றின் உடல் நிலை சரியாக இருப்பதில்லை. அந் நிலையில் அவை சுலபமாக நோய்க்கு இரையாகி விடும். ஆகையினால் அவை வெளி வந்தவுடன் குடலைச் சுத்தம் செய்யும் ஒரு வகைக் காயைத் தின்று தேகத்தைச் சரிப்படுத்திக் கொள்ளுகின்றன.

குளிர் கால உறக்கத்திற்குப் பின் முதலையின் வயிற்றைப் பரிசோதித்துப் பார்த்தால் அதில் கட்டை, கல், அல்லது இவை போன்ற ஜீரணமாகாத வேறு பொருள்கள் காணப்படும். அம் முதலை இப்பொருள்களைத் தற்செயலாக விழுங்கி விட்டதோ என்று சந்தேகிக்க வேண்டுவதில்லை. முதலை உறங்கப் போகும் பொழுது வேண்டுமென்றே இவற்றை விழுங்குகிறது. தூங்கும் காலத்தில் வயிற்றினுள் உள்ள ஜீரணப் பை முதலிய உறுப்புகளுக்கு வேலை கொடுக்கவே அது இவ்வாறு செய்கிறதாம். பல முதலைகளைப் பரிசோதித்தே இவ்வுண்மை கண்டு பிடிக்கப் பட்டது.

மிருகங்கள் சில சமயங்களில் உணவில் கட்டுப்பாடு செய்து கொள்ளுகின்றன. மான்களின் வாழ்க்கையைக் கவனித்தால் இது நன்கு விளங்கும். டாக்டரின் ஆலோசனையைப் பெற்ற பெண்போல, அவை கர்ப்பமாக இருக்கும் காலத்தில் பத்திய உணவே அருந்துகின்றன. கலைமான்கள் தங்களுக்குக் கொம்பு முளைக்கும் காலத்திலே பல மைல்கள் ஓடிச் சென்றுவது

தாதுப் பொருள்கள் நிரம்பி யுள்ள தண்ணீரைக் குடிக்கின்றன. கொம்பு வளர்வதற்கு தாதுப் பொருள்கள் அவசிய மில்லையா ?

காட்டு மிருகங்கள் எவ்வளவு தான் ஜாக்கிரதையாக இருந்த போதிலும் சில சமயங்களில் நோய்வாய்ப்பட்டு விடுகின்றன; அல்லது ஏதாவது விபத்துக் குள்ளாகின்றன. குரங்கு போன்ற அதிக அறிவுள்ள பிராணிகள் இது போன்ற சந்தர்ப்பங்களில் வைத்தியம் செய்து கொள்வது தான் பிரமிக்கத் தக்கதாய் இருக்கிறது.

ஒருவர் வளர்த்து வந்த ஒரு குரங்கு ஒரு சமயம் வெயிலில் உட்கார்ந்திருந்தது. அருகில் சென்று பார்த்த பொழுது அதன் முகத்தின் ஒரு பக்கத்திலும், வாய்க்குள்ளும் களி மண் அடைத்திருந்தது தெரிந்தது. அதன் முகம் வீங்கி யிருந்தது. அதைக் குணப்படுத்துவதற்காகத்தான் அது இவ்வாறு செய்து கொண்டிருந்தது. இரண்டு நாட்களுக்குப் பின் அக் குரங்கு தன் பற்களில் ஒன்றைப் பிடுங்கி கையில் எடுத்துக் கொண்டுபோய்த் தன் எஜமானரிடம் மகிழ்ச்சியோடு காட்டியது. பிறகு தான் அதன் எஜமானர், தம் குரங்கிற்குப் பல் வலி என்றும், அவ்வலியை அதுவே குணப்படுத்திக் கொண்டது என்றும் அறிந்தார்.

காட்டுக் கோழிகள் கூடச் சிறந்த முறையில் சிகிச்சை செய்து கொள்ளுகின்றன. ஒரு முறை ஒருவர் ஒரு காட்டுச் கோழியைச் சுட்டார். அவர் அதன் காலைக் கவனித்த பொழுது அது ஒடிந்து மறுபடியும் ஒட்டிக் கொண்டிருந்தது தெரிந்தது. அதை அவர் ஒரு மிருக ஆராய்ச்சியாளரிடம் காட்டிய பொழுது அவர், "காட்டுக் கோழிகள் தாமே வைத்தியம் செய்து கொள்ளுகின்றன. அதற்கு இது ஒரு சான்று" என்று கூறினர்.

மிருகங்களின் வாழ்க்கையைக் கூர்ந்து கவனித்து வரும் வில்லியம். ஜே. லாங் என்பவர் ஒரு சமயம் ஒரு நீரோடையின் அருகில் உட்கார்ந்திருந்தார். அப்பொழுது ஒரு காட்டுக் கோழி ஓடைக் கரையின் மீது உட்கார்ந்து சிறிது களிமண்ணை எடுத்துத் தன் காலில் ஒட்ட வைத்துக் கொண்டது. பிறகு சிறிது தூரம் போய்ச் சிறு நார்களை எடுத்து அதன் மீது சுற்றிக் கொண்டது. பிறகு மறுபடியும் ஓடைக் கரைக்கு வந்து களிமண்ணை அதன் மீது அப்பியது. இது போல் அது பன் முறை செய்து கொண்ட பின்பு அது தன் மூக்கினல் அக்கட்டை ஒரு மணி நேரம் வரையில் தேய்த்துத் தேய்த்து மழ மழப்பாகவும் கெட்டியாகவும் செய்து கொண்டது. அதன் கால் சரியாகி விட்டது என்று தெரிந்தவுடன் அது பறந்து போய் விட்டது.

[library stamp] 9818

Edited, printed and published by E. BALASUBRAMANIAM at the K. M. S. PRESS, 1-C 17, Dinroze Estate, Mount Road, Madras. Associate Editor :- N. S. MANI.

VISIT

OUR

RETAIL SHOW ROOM

FOR ALL YOUR

DRESS REQUIREMENTS

★

ALL ITEMS MANUFACTURED

FROM

SELECTED B & C MILLS FABRICS

★

OMER BROS

106-107, Moore Market,

MADRAS - 3

பெரிய குடும்பங்களுக்கும் சிக்கன சுலப உதவி

இளநரை
தடுத்து
கூந்தல்
செழிக்க

காஷ்மீர்-குஸும்

ஊறின உங்கள் எண்ணெயை உபயோகிக்க

நஞ்சன்கூடு-பல்பொடி

மேலும்

54, அரிய குடும்ப மருந்துகள் விவரப்
புத்தகத்திற்கு எழுதுக

யுனைடெட் கன்ஸர்ன்,

54, பந்தர் தெரு, சென்னை - 1.

Colourful

BINNY'S FABRICS

The most suitable material for the tropics. These lovely colourful fabrics in beautiful designs such as seersucker, plain and printed Linen, Lustalin Shirtings, Hanava Suitings, etc., are available at our Show Rooms.

VENKATESH VASTRALAYA

Phone: 4688

Retail Show Room:
2, THAMBU CHETTY STREET, MADRAS-1.